கால்நடை பராமரிப்பு,
பால்வளம் மற்றும் மீன்வளத்துறை

மீன்வளம்

கொள்கை விளக்கக் குறிப்பு
2020-2021

மானியக் கோரிக்கை எண். 7

D.ஜெயக்குமார்

மீன்வளம், பணியாளர் மற்றும்
நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர்

©

தமிழ்நாடு அரசு
2020

மீன் வளர்ப்போருக்கு தரமான மீன் குஞ்சுகளை வழங்குதல், புதிய வளர்ப்பின மீன் இனங்களை அறிமுகம் செய்தல், நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல், சுகாதாரமான முறையில் உள்நாட்டு பகுதிகளில் மீன் விற்பனை நிலையங்கள் மற்றும் அங்காடிகள் ஏற்படுத்துதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டதன் விளைவாக, **6.82** லட்சம் டன் மீன் உற்பத்தி செய்து, தமிழ்நாடு இந்தியாவிலேயே **5**-வது இடத்தை பெற்றுள்ளது'

மாண்புமிகு முதலமைச்சர் உரை நாள் 9.2.2020

பொருளடக்கம்

வ. எண்	தலைப்பு	பக்கம்
1	முன்னுரை	1
2	மீன்வளக் கொள்கை	5
3	நிருவாக அமைப்பு	9
4	தமிழ்நாட்டின் மீன்வளம் - ஒரு கண்ணோட்டம்	14
5	நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள்	28
6	நிலைத்த வளர்ச்சிக்கான முக்கிய இலக்குகள்	34
7	துறையின் முக்கிய செயல்பாடுகள்	37
8	தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் (வரையறுக்கப்பட்டது)(TAFCOFED)	149
9	தமிழ்நாடு மீனவர் நல வாரியம் (TNFWB)	156
10	தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் (TNFDC Ltd.)	164
11	தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் (TNJFU)	172
12	2019-2020 ஆம் ஆண்டில் மீன்வளத்துறையின் முக்கிய சாதனைகள்	197
13	பருவநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும் மீன்வளம்	203
14	இலக்கினை அடைவதற்கான வழிமுறைகள்	205
15	2020-2021 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு	210
16	நிறைவுரை	211

மீன்வளத்துறை

கொள்கை விளக்கக்குறிப்பு

2020-2021

1. முன்னுரை

தமிழ்நாடு உற்பத்தித் திறன் மிக்க கடல், நன்னீர், மற்றும் உவர்நீர் மீன்வள ஆதாரங்களை கொண்டுள்ளது. இது மாநிலத்தின் மக்களுக்கு உணவு பாதுகாப்பு வழங்குவதுடன் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரமாகவும் விளங்குகின்றது. நாட்டின் பொருளாதாரம், சத்துணவு, ஊரக வேலை வாய்ப்பு மற்றும் ஏற்றுமதி வளர்ச்சிக்கு மீன்வளத்துறை முக்கிய பங்காற்றுகிறது.

தொடர்ந்து அதிகரித்து வரும் மீன் உற்பத்தி, மீன்வள ஆதாரங்களை சரியான அளவில் பயன்படுத்துதல், மீன்வளத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான புதிய வளர்ச்சி மற்றும் நலத்திட்டங்களை செயல்படுத்துதல் ஆகியவற்றில் தமிழ்நாடு இந்தியாவின் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் டாக்டர். ஜெ ஜெயலலிதா அவர்களின் தொலைநோக்கு பார்வையினை நிறைவேற்றும் விதமாக, தமிழக அரசு மீனவர்நலன் மற்றும் பாதுகாப்பினை உறுதி செய்தல் மற்றும் அவர்களின் நலன்களை காப்பதில் உறுதியாக உள்ளது. நமது பாரம்பரிய கடற்பகுதிகளில் மீன்பிடித்து வரும் மீனவர்களின் உயிர் மற்றும் உடைமைகளை பாதுகாப்பதற்கு தமிழக அரசு பல்வேறு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஆழ்கடல் மீன்வள ஆதாரங்களை தகுந்த அளவில் பயன்படுத்திட அரசு ஆழ்கடல் மீன்பிடிப்பினை ஊக்குவித்து வருகிறது. கடலில் மீன்பிடிப்பில் ஈடுபடும் மீனவர்களின் பாதுகாப்பிற்காக அரசு கம்பியில்லா தொலைத் தொடர்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குப்படுத்தும் சட்டம், 1983-ஐ சிறப்பாக செயல்படுத்திடவும், கடல் வளங்களைப் பாதுகாத்திடவும், அரசு கடல்வள சட்ட அமலாக்கப் பிரிவு ஒன்றினை புதிதாக உருவாக்கியுள்ளது.

மீன் உற்பத்தி மற்றும் தரத்தினை அதிகரித்திட தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்கு தளங்கள், சந்தைப்படுத்தும் வசதிகள் மற்றும் மீன் பதனிடும் பூங்காக்கள் போன்றவற்றை அரசு நிறுவி வருகிறது. மீன்பிடி படகுகள் கட்டுதல், பாரம்பரிய கலன்களை இயந்திரமயமாக்குதல், மீன்பிடி படகுகளுக்கு மானியத்துடன் கூடிய எரிபொருள் வழங்குதல் போன்ற திட்டங்களை தமிழக அரசு கடல் மீனவர்களின் நலனுக்காக செயல்படுத்தி வருகிறது. மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தியினை பெருக்கும் பொருட்டு மீன்வளர்ப்பு, மீன் குஞ்சு உற்பத்தி, அரசு மற்றும் தனியார் துறைகளில் மீன் குஞ்சு வளர்ப்பு கட்டமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் மீன்வளர்ப்பிற்குத் தேவையான மீன்குஞ்சுகள், தீவனம், மீன்பிடி உபகரணங்கள் ஆகிய உள்ளீட்டு பொருட்களுக்கு மானியம் வழங்குதல் போன்ற திட்டங்களை அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. தீவிர மீன்வளர்ப்பு முறைகளான கூண்டுகளில் மீன்வளர்த்தல், நீர் மறுசுழற்சி மீன்வளர்ப்பு மற்றும் குறுகிய காலத்தில் வளரும் மீன் இனங்களை வளர்த்தல்

போன்ற திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. உவர்நீர் மீன்வளர்ப்பு, கடற்பாசி வளர்ப்பு போன்ற கடல்வாழ் உயிரின வளர்ப்பு தொழில்நுட்பங்களை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்திட அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இந்தியா, 2017-18 ஆம் ஆண்டில் உலகின் மொத்த மீன் உற்பத்தியில் மூன்றாவது இடமும், நீர்வாழ் உயிரின வளர்ப்பு உற்பத்தியில் இரண்டாவது இடமும் வகிக்கின்றது. கடந்த 2018-19 ஆம் ஆண்டில், இந்தியாவின் மொத்த மீன் உற்பத்தி 13.42 மில்லியன் மெட்ரிக் டன்கள் ஆகும். இந்தியாவின் வேளாண் பொருட்களின் ஏற்றுமதியில் மீன் மற்றும் மீன்பொருட்களின் பங்கு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 2017-18 ஆம் ஆண்டில் மீன் மற்றும் மீன் பொருட்களின் ஏற்றுமதி ரூ.46,589.37 கோடி மதிப்பில், 13.93 இலட்சம் டன்களாக அதிகரித்துள்ளது. இது நாட்டின் மொத்த ஏற்றுமதியில் 10 விழுக்காடும், வேளாண் பொருட்கள் ஏற்றுமதியில் 20 விழுக்காடும் ஆகும். நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மீன்வளத்தின் பங்கு 1 விழுக்காடும், வேளாண்

பொருட்கள் உள்நாட்டு உற்பத்தியில் 5 விழுக்காடும் ஆகும்.

நாட்டின் மொத்த கடல் மீன் உற்பத்தியில், 2017-18 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தினை வகிக்கிறது. 2018-19 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மொத்த மீன் உற்பத்தி 6.90 இலட்சம் டன் என மதிப்பிடப்பட்டுள்ளது தமிழ்நாடு, 2018-19 ஆம் ஆண்டில் 1.29 இலட்சம் டன் கடல் மீன் உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்ததன் மூலம் ரூ.5591.49 கோடி அந்நியச் செலவாணி ஈட்டப்பட்டுள்ளது.

மாநிலத்தில் உள்ள அனைத்து நீர்வள ஆதாரங்களிலிருந்து மீன் உற்பத்தியினை கணிசமான அளவிற்கு உயர்த்துவது அரசின் கொள்கையாகும். நவீன தொழில்நுட்பங்களையும், சிறந்த மேலாண்மை முறைகளையும் நிலைத்த மேம்பாட்டிற்கான குறிக்கோள்களுக்கு தகுந்தவாறு பயன்படுத்தி மீன் உற்பத்தியினை அதிகரித்திட அரசு கவனம் செலுத்தி வருகிறது.

2. மீன்வளக் கொள்கை

மீன் உற்பத்தியினைப் பெருக்குதல், மீனவர் மற்றும் மீன்வளர்ப்போரின் வருவாயினைப் பெருக்குதல் மற்றும் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல் ஆகியவை தமிழ்நாடு அரசு மீன்வளக் கொள்கைகளின் முக்கிய நோக்கங்களாகும்.

2.1 தொலைநோக்குப் பார்வை

“மீன்வள ஆதாரங்களை வளங்குன்றா வண்ணம் பேணுதல், பயன்படுத்துதல், மேலாண்மை செய்தல் மற்றும் பாதுகாப்பான மீன்பிடிப்பிற்கு வழிவகுத்தல் மூலம் தமிழ்நாட்டு மீனவர்களின் வளமை மற்றும் பாதுகாப்பினை உறுதிசெய்தல்’’.

2.2 செயலாக்கம்

மாநிலத்தின் அனைத்து நீர்வளங்களை மேம்படுத்தி, மேலாண்மை செய்து, பாதுகாத்து, வளங்குன்றாமல் பயன்படுத்தி, மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி, வேலை வாய்ப்பினை அதிகரித்து, ஊட்டச்சத்து மிக்க உணவுப் பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல்.

2.3 முக்கிய கொள்கைகள்

மீன்வளம் சார்ந்த அரசின் முக்கிய கொள்கைகள் பின்வருமாறு: -

1. தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டுதல் மற்றும் அவர்களின் நலன் பேணுதல்.
2. பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்துவதன் வாயிலாக மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல்.
3. நன்னீர், உவர்நீர் மற்றும் கடல் வள ஆதாரங்களில் மீன் உற்பத்தியினைப் பெருக்குதல்.
4. அரசு மீன் பண்ணைகள், மீன்பிடி துறைமுகங்கள், மீன் இறங்கு தளங்கள், தொடர் குளிர்காப்பு, மதிப்பு கூட்டுதல் மற்றும் மீன்பிடிப்பிற்கு முன் மற்றும் பின் தேவைப்படும் வணிகரீதியிலான நடவடிக்கைகளை இணைத்திடுவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.
5. மீன்வளர்ப்பின் மூலம் ஊரகப் பகுதியில் கூடுதல் வேலை வாய்ப்பினை உருவாக்குதல்.

6. மீனவ மகளிர் குறிப்பாக மீனவ கைம்பெண்களுக்கு புதிய வாழ்வாதாரங்கள் ஏற்படுத்துதல் மூலம் மீனவ மகளிருக்கு அதிகார பகிர்வளித்தல்.

7. உள்நாட்டு மீன் தேவை மற்றும் உற்பத்தி ஆகியவற்றிற்கு இடையிலான இடைவெளியினைக் குறைத்தல்.

8. விலை மதிப்புமிக்க மீன்கள் மற்றும் மீன் உணவுப் பொருட்களின் ஏற்றுமதியினை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பினை உருவாக்குதல்.

9. உரிய சட்டம் மற்றும் விதிகளை அமல்படுத்துவதன் மூலம் மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல், மேலாண்மை செய்தல் மற்றும் மீன்வளங்களை அதிகரித்தல்.

10. மீனவர்கள் மற்றும் மீன்துறை அலுவலர்களுக்கு திறன் மேம்பாடு மற்றும் மனிதவள மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பப் பயன்பாட்டின் மூலம் மீன்வளத்தை மேம்படுத்துதல்.

11. தமிழ்நாட்டின் மீன்வள ஆதாரங்கள் மற்றும் அவற்றின் உற்பத்தித் திறனை மறு மதிப்பீடு செய்தல்.

12. மின் ஆளுமை மூலம் வெளிப்படைத்தன்மையுடன் திட்டங்கள் சென்றடைவதை உறுதி செய்தல்.

3. நிருவாக அமைப்பு

மீன்வளத்துறை இயக்குநர் துறையின் தலைவராக உள்ளார். மேலும், மீன்வளத்துறை இயக்குநர், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மை இயக்குநராகவும், தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் உள்பட அனைத்து மீனவ கூட்டுறவு சங்கங்களின் நடைமுறை சார்ந்த பதிவாளராகவும் மற்றும் தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தின் உறுப்பினர் செயலராகவும் உள்ளார்.

படம்:1 மீன்வளத்துறை - நிருவாக அமைப்பு



மீன்வளத்துறையின் மொத்தப் பணியாளர்கள் எண்ணிக்கை 1,797 ஆகும். பதவி வாரியாக பணியிடங்களின் விவரம் அட்டவணை 1 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை: 1

பதவி வாரியாக அலுவலர்கள் விவரம்

வ எண்.	**பதவியின் பெயர்**	**பணியிடங்கள் (ஒப்பளிக்கப்பட்டது + அயற்பணி)**
1	மீன்துறை இயக்குநர்	1
2	மீன்துறை கூடுதல் இயக்குநர்	2+2
3	மீன்துறை இணை இயக்குநர்	4+1
4	மீன்துறை துணை இயக்குநர்	11+1
5	துணை இயக்குநர் (பணியாளர்)	1
6	துணை இயக்குநர் (பொறியியல்)	1
7	நிதி ஆலோசகர் மற்றும் தலைமை கணக்கு அலுவலர்	1

8	மீன்துறை உதவி இயக்குநர்/ மீன்துறை உதவி இயக்குநர் (இயந்திரவியல்)	49+7/ 1
9	நேர்முக உதவியாளர்	12
10	துணை பதிவாளர்	1
11	கணக்கு அலுவலர்	1
12	மீன்துறை ஆய்வாளர்	167
13	கூட்டுறவு சார் பதிவாளர்	16
14	கடல் முதல்வர்	13
15	மீன்துறை சார் ஆய்வாளர்	84
16	கூட்டுறவு முதுநிலை ஆய்வாளர்	27
17	மீன்வள உதவியாளர்	168
18	அமைச்சுப் பணி மற்றும் களப்பணியாளர்கள்	1,028
	மொத்தம்	**1,587**
பொறியியல் பிரிவு		
1	தலைமைப்பொறியாளர்	1
2	செயற்பொறியாளர்	5
3	உதவி செயற்பொறியாளர்	13
4	உதவி பொறியாளர்	13
5	இளநிலை பொறியாளர்	17

6	முதுநிலை வரைவு அலுவலர்	1
7	வரைவு அலுவலர்	8
8	இளநிலை வரைவு அலுவலர்	4
9	கோட்ட கணக்கு அலுவலர்	4
10	தொழில்நுட்ப உதவியாளர்	23
11	அமைச்சுப்பணி மற்றும் இதர பணியாளர்கள்	9
	மொத்தம்	**98**
	கடல்வள சட்ட அமலாக்கப் பிரிவு	
1.	காவல்துறை கண்காணிப்பாளர்	1
2.	துணை காவல் கண்காணிப்பாளர்	1
3.	காவல் ஆய்வாளர்	10
4.	காவல் சார் ஆய்வாளர்	8
5.	தலைமைக்காவலர்/காவலர்	53
6.	காவல் ஊர்தி ஓட்டுநர்	19
7.	கண்காணிப்பாளர்	1
8	உதவியாளர்	2
9.	முகாம் உதவியாளர்	17
	மொத்தம்	**112**
	மொத்தக் கூடுதல்	**1,797+11**

4. தமிழ்நாட்டின் மீன்வளம் - ஒரு கண்ணோட்டம்

தமிழ்நாடு 1,076 கி.மீ. நீளமுள்ள கடற்கரையினையும், 41,412 சதுர கி.மீ. கண்டத்திட்டையும், 1.9 இலட்சம் சதுர கி.மீ. பிரத்யேக பொருளாதார மண்டலத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் கடல் மீன் உற்பத்தி 5.21 இலட்சம் டன்கள் ஆகும். இம்மீன் உற்பத்தி 10.48 இலட்சம் கடல் மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு அடிப்படையாக உள்ளது. 5,806 மீன்பிடி விசைப்படகுகள் மற்றும் 41,652 நாட்டுப்படகுகள் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ளன. தமிழ்நாட்டில் நீர்த்தேக்கங்கள், பெரிய, சிறிய மற்றும் குறுகிய பாசன குளங்கள், குட்டைகள், ஆறுகள், கழிமுகங்கள் மற்றும் பிற நீர்நிலைகள் உள்ளடக்கிய 3.83 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவுள்ள உள்நாட்டு நீர் நிலைகள் உள்ளன. சுமார் 56,000 ஹெக்டேர் உவர்நீர் பரப்பில் மீன்பிடிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 6,236 ஹெக்டேர் பரப்பில் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு குறிப்பாக, இறால் வளர்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு

வருகிறது. உள்நாட்டு மீன்வளம் 2.36 இலட்சம் உள்நாட்டு மீனவ மக்களின் வாழ்வாதாரமாக விளங்குகிறது.

4.1 கடல் மீன்வளம்

தமிழ்நாடு 13 கடலோர மாவட்டங்களை உள்ளடக்கி, 1,076 கி.மீ. நீளமுள்ள, இந்தியாவிலேயே இரண்டாவது நீண்ட கடற்கரையை கொண்டுள்ளது.

கடல் மீன்வளம் குறித்த விபரங்கள் அட்டவணை-2 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை: 2

கடல் மீன்வளம் குறித்த புள்ளி விவரங்கள் - 2019-20

கடற்கரை நீளம்	1,076 **கி.மீ.**
பிரத்யேக பொருளாதார மண்டலம், (Exclusive Economic Zone -EEZ)	1.9 **இலட்சம் ச.கி.மீ.**
கண்டத்திட்டு (Continental shelf)	41,412 **ச.கி.மீ.**
கடலோர மாவட்டங்கள்	13
மீனவ கிராமங்கள்	608

கடலோர மீனவ மக்கட்தொகை (உத்தேசமாக)	10.48 **இலட்சம்** *
இணையதளம் மூலம் பதிவு செய்யப்பட்ட மீன்பிடிக் கலன்கள் 29.02.2020 **அன்றுள்ளவாறு**	
1. **மீன்பிடி விசைப்படகுகள்**	5,806
2. நாட்டுப்படகுகள் (இயந்திரம் பொருத்தப்பட்டவை மற்றும் இயந்திரம் பொருத்தப்படாதவை)	41,652 (36,645+5,007)
உட்கட்டமைப்பு வசதிகள்	
பெரிய மீன்பிடி துறைமுகங்கள்	9 (சென்னை, தூத்துக்குடி, நாகப்பட்டினம், சின்னமுட்டம், குளச்சல், மூக்கையூர், பூம்புகார், முட்டம் (PPP) மற்றும் தேங்காப்பட்டினம்)
நடுத்தர மீன்பிடி துறைமுகங்கள்	3 (பழையாறு, மல்லிப்பட்டினம் மற்றும் கடலூர்)
கட்டுமானத்தில் உள்ள மீன்பிடி துறைமுகங்கள்	3 (திருவொற்றியூர் குப்பம், வெள்ளப்பள்ளம் மற்றும் தரங்கம்பாடி)
மீன் இறங்கு தளங்கள் / படகு அணையும் தளங்கள்	43

மீன் இறங்கு மையங்கள்	243
கடல்மீன் உற்பத்தி (2018-19) **(உத்தேச மதிப்பீடு)**	5.21 இலட்சம் டன் *
கடல்பொருள் ஏற்றுமதி (2018-19)	1,28,845 மெட்ரிக் டன்** (மதிப்பு ரூ.5,591.49 கோடி)

ஆதாரம்:

* தமிழ்நாடு அரசு மீன்வளத்துறை

**கடல்பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையம் (MPEDA)

4.2 உள்நாட்டு மீன்வளம்

தமிழ்நாட்டில் உள்நாட்டு நீர்வள ஆதாரங்களான, பெரிய நீர்த்தேக்கங்கள், பெரிய மற்றும் சிறிய பாசன குளங்கள், சிறிய ஏரிகள் மற்றும் குளங்கள் உள்ளிட்ட நீர்வள ஆதாரங்கள் மீன்பிடிப்பிற்காகவும், மீன்வளர்ப்பிற்காகவும் பயன்படுத்தப்படுகிறது. மாநிலத்திலுள்ள உள்நாட்டு மீன்வளம் குறித்த விவரங்கள் அட்டவணை 3-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை: 3

உள்நாட்டு மீன்வள புள்ளி விவரங்கள்-2019-20

உள்நாட்டு மீன்வள ஆதாரங்கள்	3.83 இலட்சம் ஹெக்டேர்
நீர்த்தேக்கங்கள் (78*)	62,015 ஹெக்டேர்
பெரிய மற்றும் குறுகிய கால பாசன குளங்கள்	2,65,819 ஹெக்டேர்
உவர்நீர் பரப்பளவு	56,000 ஹெக்டேர்
உள்நாட்டு மீனவ மக்கட்தொகை (**உத்தேசமாக**)	2.36 இலட்சம் *
உள்நாட்டு மீன்வள கட்டமைப்புகள்	
மீன்குஞ்சு உற்பத்தி மையங்கள்	
i) **அரசு மீன்பண்ணைகள்**	10
ii)**தமிழ்நாடு மீன்வளர்ச்சிக்கழக மீன் பண்ணைகள்**	01
III) **தனியார் மீன்பண்ணைகள்**	49

மீன்குஞ்சு வளர்ப்பு மையங்கள்	
i) **அரசு மீன்பண்ணைகள்**	37
ii) **தனியார் மீன்பண்ணைகள்**	233
iii) **தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக மீன் பண்ணைகள்**	5
உள்நாட்டு மீன் உற்பத்தி (2018-19) (**உத்தேசமாக**)	1.67 இலட்சம் டன்

* ஆதாரம்: தமிழ்நாடு அரசு மீன்வளத்துறை

4.3 கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் உவர்நீர் மீன்வளம்

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு நமது மாநிலத்தின் நீர்வாழ் உயிரின வளர்ப்பின் உற்பத்தியில் முக்கிய பங்காற்றுகிறது. கழிமுகங்கள், உப்பங்கழிகள், மற்றும் சிற்றோடை வடிவிலான உவர் நீர்பரப்பு 56,000 ஹெக்டேர் பரப்பளவில் அமையப்பெற்றிருப்பது சிறப்பம்சமாகும்.

கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணைய சட்டம், (Coastal Aquaculture Authority Act) 2005,

விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்களின் படி உவர்நீர்வாழ் மீன்வளர்ப்பு பண்ணைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. இதன் மூலம் நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த இறால் வளர்ப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. அந்தந்த கடலோர மாவட்ட அளவிலான குழு மற்றும் மாநில அளவிலான குழுவின் பரிந்துரையின்படி உவர் நீர் பண்ணைகளை பதிவு செய்யும் பணியை கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையம் மேற்கொள்கிறது.

‘பினேயஸ் வனாமி’ என்ற வெள்ளை இறால் பெருமளவில் வளர்க்கப்படுகிறது. அதற்கான பிரத்யேக அனுமதியினை மாவட்ட அளவிலான குழு மற்றும் மாநில அளவிலான குழு பரிந்துரையின் படி கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையம் வழங்குகிறது. 3,742 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள 1,892 இறால் பண்ணைகள் கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்தின் மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளன. நமது மாநிலத்தில் இயங்கிவரும் 63 இறால் குஞ்சு பொரிப்பகங்கள் நம் மாநிலம் மற்றும் அண்டை

மாநிலத்திற்கு தேவையான இறால் குஞ்சுகளை வழங்கி வருகின்றன.

தமிழக அரசு உவர்நீர் மீன் மற்றும் இறால் வளர்ப்பினை மேம்படுத்தும் நோக்கத்துடன் கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் தூத்துக்குடி ஆகிய 6 மாவட்டங்களில் உவர்நீர் வளர்ப்பிற்கு உகந்த இடங்களை கண்டறிந்து வரைபடம் தயாரிக்கும் பணிகளை (Resource Mapping) ரூ.50 இலட்சம் செலவில் மேற்கொண்டுள்ளது. இத்திட்டம் மேம்படுத்தப்பட்ட புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொலை உணர்வு போன்ற உயர்தொழில்நுட்பங்களை பயன்படுத்தி மீன்வளர்ப்பிற்கு உரிய உவர் நிலங்களை கண்டறிந்து அவற்றில் கடலோர மீன்வளர்ப்பினை மேற்கொள்ள வழிவகுக்கும்.

மேலும், தமிழக அரசு கடலோர மாவட்டங்களில் உவர்நீர்வாழ் உயிரின வளர்ப்பு பூங்காக்களை உருவாக்குவதற்கான சாத்தியக் கூறுகளை ரூ.20 இலட்சம் செலவில் ஆய்வு செய்திட நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்த ஆய்வு உபயோகமற்ற, பயன்படுத்தப்படாத நிலையில் உள்ள நிலங்களில் உவர்நீர்

மீன் உற்பத்தியை மேற்கொள்ளவும், இவற்றில் தொழில்முனைவோரை ஊக்கப்படுத்திடவும், ஈடுபடுத்திடவும் ஒரு சிறந்த வழிகாட்டுதலாக அமைகிறது.

சென்னை நீலாங்கரையில் மீன்துறைக்கு சொந்தமான இடத்தில் மத்திய கடல்பொருள் ஏற்றுமதி நிறுவனத்தின் ராஜீவ்காந்தி நீர்வாழ் உயிரின வளர்ப்பு மையத்தின் மூலம் நீரியல் நோய் தடுப்புக்காப்பு மையத்தினை (Aquatic Quarantine Facility) நிறுவியுள்ளது. இம்மையத்தின் மூலம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் தாய் இறால்களில் நோய் தொற்று உள்ளது குறித்து ஆய்வு செய்யப்படும். இது இந்தியாவிலேயே அமையப்பெற்றுள்ள ஒரே நோய்த் தடுப்புக்காப்பு மையமாகும்.

தமிழகத்தில் அமைந்துள்ள மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு மையம் (CIBA), ராஜீவ்காந்தி நீர்வாழ் உயிரினவளர்ப்பு மையம் (RGCA) மற்றும் மத்திய கடல்மீன் வள ஆராய்ச்சி மையம் (CMFRI) ஆகிய நிறுவனங்களின் மூலம் கடல்விரால் (Cobia), பாம்பனோ பாறை (Silver Pompano) மற்றும் கொடுவா (Sea bass) மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு, கடல்

கூண்டுகள் மற்றும் உவர்நீர் குளங்களில் வளர்ப்பு செய்திட வழங்கப்பட்டு வருகின்றது.

4.3.1 கடல்மீன்வளர்ப்பு முறைகள்

தமிழக அரசு கடலோர மீனவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு கடல் மீன்வளர்ப்பு முறைகளான கடற்பாசி வளர்ப்பு, கூண்டுகளில் மீன் வளர்ப்பு மற்றும் சிப்பி வளர்ப்பு ஆகியவற்றினை ஊக்கப்படுத்தி வருகிறது. கடல் உயிரின வளர்ப்பு என்பது மீன்பிடிப்பிற்கு மாற்றாக, மீன்குஞ்சுகள் இருப்பு செய்து வளர்க்கும் முறையாகும்.

மேலும், தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வள பல்கலைக்கழகம் மற்றும் மீன்வளத்துறையும் கடல் மீன்குஞ்சு வளர்ப்பு மையங்கள் அமைத்துள்ளன. இதன் மூலம் மீன்வளம் பாதுகாக்கப்படுவதுடன் மீன் உற்பத்தியும் மேம்படும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மீனவ மகளிரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் 510 மீனவ மகளிருக்கு 6,800 கடற்பாசி மிதவைகள் வழங்கப்பட்டுள்ளன. இராமநாதபுரம்

மாவட்டம் மண்டபத்தில் கடற்பாசியிலிருந்து சாறு எடுக்கும் அலகு (Sap Extraction Unit) ரூ.3.96 கோடி செலவில் நிலைத்த வாழ்வாதாரத்திற்கான (FIMSUL II) திட்டத்தின்கீழ் நிறுவப்பட்டு, மீனவ மகளிரால் இலாபகரமாக நடத்தப்பட்டு வருகிறது.

இந்திய அரசின் பரிசீலனையின் கீழ் உள்ள தேசிய கடல்வாழ் உயிரின வளர்ப்பு கொள்கையின் அடிப்படையில் மாநிலத்தின் கடல்வாழ் உயிரின வளர்ப்பினை மேம்படுத்திட மாநில அரசு பல்வேறு நடவடிக்கையினை மேற்கொண்டு வருகிறது.

தமிழக அரசு, சென்னையில் இந்திய வர்த்தக சபை (ICC) மற்றும் மத்திய உப்பு மற்றும் கடல் வேதியியல் பொருட்கள் ஆராய்ச்சி நிலையம் (CSMCRI) ஆகியவற்றுடன் இணைந்து, மூன்றாவது சர்வதேச அளவிலான கடற்பாசி கண்காட்சி மற்றும் கருத்தரங்கு 2020-ஐ ஜனவரி திங்கள் 30 மற்றும் 31 ஆகிய தேதிகளில் நடத்தியது. இந்த கருத்தரங்கானது கடற்பாசி மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களை நம் மாநிலத்திற்கு கொண்டுவரும் நோக்கத்துடன் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் கடற்பாசி வளர்ப்பு

மற்றும் அதன் தொடர்புடைய தொழிலில் ஈடுபட்டுள்ள 8 தேசிய மற்றும் சர்வதேச அளவிலான தனியார் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் கடற்பாசியை சந்தைபடுத்துதல், தனியார் தொழில் முனைவோரின் மூலம் மதிப்புக் கூட்டப்பட்ட கடற்பாசி பொருட்களின் உற்பத்தியினை பெருக்குதல் மற்றும் கடலோர மீனவர்களுக்கான வாழ்வாதாரத்தினை மேம்படுத்திட இவ்வொப்பந்தங்கள் வழிவகை செய்யும்.

4.3.2. கூண்டுகளில் மீன்வளர்ப்பு

கடல் கூண்டுகளில் மீன்வளர்ப்பதன் மூலம் விலை மதிப்புமிக்க கடல் மீன்கள் மற்றும் ஓட்டுடலிகளின் உற்பத்தியினை அதிகரிக்க இயலும். கடலோர மீன்பிடிப்பின் அழுத்தத்தினை குறைக்கும் பொருட்டு தமிழக அரசு பல முன்னோடி மற்றும் தனித்துவம் வாய்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவற்றுள், கடல் கூண்டுகளில் மீன்வளர்த்தல் போன்ற சிறந்த தொழில் நுட்பத்தின் மூலம் கடலில் அமைக்கப்பட்ட கூண்டுகளில் மீன்களை இருப்புச்

செய்து வளர்த்து, உற்பத்தியினைப் பெருக்கிட வழிவகை செய்கிறது. மேலும், இத்தொழில்நுட்பம் மீனவ இளைஞர்களுக்கு சிறந்த சுயதொழில் வாய்ப்பாகவும் அமைகிறது. கடல் கூண்டுகளின் மூலம் மீன்வளர்க்கும் இத்திட்டம் நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மைத் திட்டம்-IIன் மூலம் காஞ்சிபுரம், புதுக்கோட்டை, தூத்துக்குடி, இராமநாதபுரம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடல் கூண்டுகளில் மீன்வளர்ப்பானது குறைந்த செலவில் இயற்கை வளங்களை சிறப்பாகப் பயன்படுத்தி மீன் உற்பத்தியினை பெருக்கிட வழிவகை செய்கிறது. நமது மாநிலத்தில் முதன்முறையாக கடல் மீன்குஞ்சு பொரிப்பகம் இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் நிறுவப்பட்டுள்ளது. இதில் உற்பத்தி செய்யப்படும் மீன்கள் கடல் கூண்டுகளில் இருப்பு செய்யப்பட்டு வளர்க்கப்படுகிறது.

4.3.3. நீர்வாழ் உயிரின வளர்ப்பில் நுண்ணுயிர்க்கொல்லிகள் (Antibiotics) பயன்பாட்டினை கட்டுப்படுத்துதல்

உவர்நீர் பண்ணைகளில் வளர்க்கப்படும் இறால் மீன்கள், கடல் உணவு பொருள் ஏற்றுமதியில் மிகப்பெரிய அளவில் அந்நிய செலவாணியை ஈட்டித்தருகிறது. இறால் வளர்ப்பில் தடை செய்யப்பட்ட வேதிப்பொருட்கள் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துகள் பயன்படுத்துவதால் நம் நாட்டின் இறால் ஏற்றுமதியினை நிராகரிக்கும் நிலை ஏற்படுகிறது. இப்பிரச்சனைக்கு தீர்வு காணும் வகையில் மாநிலத்தில் அனைத்து கடலோர மாவட்டங்களில் இருந்து 300 இறால் வளர்ப்போருக்கு விழிப்புணர்வு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் அந்தந்த பகுதியில் உள்ள பிற இறால் வளர்ப்போருக்கு இவ்விழிப்புணர்வை பரப்புவதற்கு முதன்மைப் பயிற்சியாளராக திகழ்கிறார்கள்.

தடை செய்யப்பட்ட நோய்த் தடுப்பு மருந்துகள் பயன்படுத்துவதால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வு முகாம்கள் ஏற்றுமதி ஆய்வு நிறுவனம் (EIA), கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையம்

(CAA), கடல்பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (MPEDA) போன்ற நிறுவனங்களின் தொழில்நுட்ப வல்லுநர்கள் மூலம் வழங்கப்படுகிறது. இந்த விழிப்புணர்வு பயிற்சி முகாம்கள் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து நடத்தப்படும்.

5. நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள்

நீடித்த வளர்ச்சி இலக்குகள், ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளால் ஒப்புக் கொள்ளப்பட்ட உறுதிப்பாடாகும். இது 'எவரும் விடுபடா வண்ணம் வளர்ச்சி' என்னும் குறிக்கோளுடன் பூமியிலுள்ள அனைத்து உயிர்களுக்கும் சமமான வாழ்க்கை வாய்ப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 2030 ஆம் ஆண்டில் மத்திய அரசின் கொள்கைகளுக்கு இணங்க 17 நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்குத் தேவையான நடவடிக்கை எடுப்பதில் தமிழக அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

மீன் வளத்தைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகள்

மீன்வளத்துறை நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு தீவிரமாக செயல்படுகிறது. மீன்பிடித்தலில்

அதிகபட்ச நிலையான நீடித்த மீன் உற்பத்தியினை அடைவதற்கும் (MSY), பாரம்பரிய மீனவர்கள் கடல் மீன்வள ஆதாரங்களை பயன்படுத்தவும் மற்றும் சந்தைப்படுத்தவும் வழிவகை செய்தல், பெருங்கடல் மற்றும் அதன் ஆதாரங்களின் பாதுகாப்பினை மேம்படுத்தி நீடித்த வளங்குன்றா பயன்பாட்டினை உறுதி செய்தல், பொறுப்பார்ந்த மீன்பிடிப்பு முறையினை கடைப்பிடித்தல், தமிழ்நாடு கடல் மீன்பிடி ஒழுங்குமுறை சட்டத்தினை செயல்படுத்தல், ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கு ஏற்றவாறு இழுவலைப் படகுகளை மாற்றுதல், மீன்பிடி தடைக்காலத்தை செயல்படுத்துதல், செயற்கை மீன் உறைவிடங்களை அமைத்தல் மற்றும் மீன் குஞ்சுகளை வளர்த்து கடலில் இருப்பு செய்தல், சுகாதாரமான மீன் வணிகத்திற்கான தொடர் குளிர்காப்பு வசதிகளை மேம்படுத்துதல், நிலைத்த மீன்பிடி முறைகளுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை அளித்தல், விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் மீன்பிடி குறைந்த காலத்தில் கடல் மீனவக் குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவித் தொகை வழங்குதல் போன்ற திட்டங்களின் மூலம் 'நிலைத்த வளர்ச்சிக்கான

இலக்குகள் -14 (கடல் வளங்கள்)' செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இலக்கு 1.1: 2030-க்குள், அனைத்து இடங்களிலும் உள்ள அனைத்து மக்களின் வறுமையை ஒழிப்பதற்கான திட்டங்கள்

கடல் மீன்வளங்களைப் பாதுகாக்க மீன்பிடி தடைக்காலத்தை அமல்படுத்தும் போது, கடல் மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடி தடைக்கால நிவாரணம் வழங்குதல், மற்றும் மீன்பிடி குறைந்த காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு நிவாரண உதவி வழங்குதல்.

இலக்கு 2.3: 2030ம் ஆண்டில் இவ்விலக்கினை அடைய, வேளாண் உற்பத்தி மற்றும் சிறு உணவு உற்பத்தியாளர்களின் வருவாயை இரட்டிப்பாக்குதல்

இத்திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட அதிவேக டீசல் எரி எண்ணெய் அரசால் வழங்கப்படுகிறது.

இலக்கு 13.1: பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் தீங்குகளை தாங்கும் சக்தியும் அதற்கேற்ப மாற்றிக்கொள்ளும் சக்தியைப் பெறுதல் இவ்விலக்கினை அடைய உலக வங்கி நிதியளித்த கடலோர பேரிடர்

அபாயக் குறைப்புத் திட்டம், நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை திட்டம் மூலம் 63 வகையான சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம், மீனவர்களின் பாதுகாப்பிற்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் மாற்று வாழ்வாதாரத்திற்கான கடற்பாசி வளர்ப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இலக்கு 14.2: கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் நிலைத்த மேலாண்மை

2020 ஆம் ஆண்டிற்குள் நிலையான மேலாண்மை மற்றும் கடலோர பகுதியின் கடல் பாதுகாப்பு சூழல் அமைப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு, மீன்பிடிக் கலன்களை இணையத்தில் பதிவு செய்யும் திட்டம் தமிழக அரசால் அறிமுகம் செய்யப்பட்டு தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், மத்திய அரசால் கடல் மீனவர்களுக்கு பயோ மெட்ரிக் அடையாள அட்டைகளை வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இலக்கு 14.4: 2020ஆம் ஆண்டில் இவ்விலக்கினை அடைய, அதிகப்படியான மீன்பிடித்தல், சட்ட விரோத,

தகவல் இல்லாத, முறைப்படுத்தப்படாத மீன்பிடித்தல் போன்றவற்றை முடிவுக்குக் கொண்டுவருதல்

இலக்கு 14.4.1: கடல் மீன் உற்பத்தி

தமிழக அரசின் கடல் மீன்பிடி ஒழுங்குமுறைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இரட்டை இழுவை முறையில் மீன்பிடித்தல் மற்றும் பிற தடை செய்யப்பட்ட வலைகள் மூலம் ஏற்படும் அழிவை தடுத்தல்.

மேலும், மீன்வளத்துறை, இவ்விலக்குகளை அடைவதற்கு சில உத்திகளை வகுத்துள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

அ) மீன்வள ஆதாரங்களை உயர் தொழில்நுட்பங்கள் மூலம் பாதுகாத்தல், ஆ) செயற்கை மீன் உறை விடங்கள் அமைத்தல், இ) மீன் குஞ்சுகளை வளர்த்து கடலில் விடுதல், ஈ) மீன்பிடிப்பு தொழிலை பன்முகத்தன்மை ஆக்குதல், உ) மீன் பிடித்தலுக்கான அழுத்தத்தை குறைக்க மீனவர்களுக்கு மாற்று வாழ்வாதார பயிற்சி அளித்தல் மற்றும் ஊ) மீன்வள

மேலாண்மையை பங்களிப்பாளர் அணுகுமுறை மூலம் மீன்வளத்தை மேம்படுத்துதல்.

இலக்கு 14.ஆ. பாரம்பரிய மீனவர்கள் கடல்சார் வளங்களையும், சந்தைகளையும் பயன்படுத்த வழிவகை செய்தல்

உள்நாட்டு மீன்வளம், மீன்வளர்ப்புக் குளங்களை உருவாக்குதல் மற்றும் புதுப்பித்தல், மீன்குஞ்சு பொரிப்பகங்களை நிறுவுதல், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் 19 மீன் அங்காடிகள் கட்டுதல் மற்றும் நவீனப்படுத்துதல், கண்ணாடி நாரிழை மீன்பிடிப் படகுகள் மானியத்துடன் வழங்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடைய அரசாணை நிலை எண்.184, கால்நடை பராமரிப்பு, பால் மற்றும் மீன்வளம் (த(ம)ஒ-2) துறை, நாள் 26.12.2019ன்படி, தனிப்பிரிவு இத்துறையால் அமைக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு, திட்டம் மற்றும் வளர்ச்சித்துறையின் கீழ் செயல்பட்டு வரும் நீடித்த வளர்ச்சி இலக்குகள் பிரிவு, பணிக்குழுக்கள், மாநிலம், மாவட்டம், கள அலுவலர் மற்றும் நீடித்த வளர்ச்சி

இலக்குகளுக்காக பல நிறுவனங்களுடன் இணைந்து செயல்படும்.

பல்வேறு துறைகளின் திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு இத்துறை தொடர் முயற்சியை மேற்கொண்டுள்ளது.

6. நிலைத்த வளர்ச்சிக்கான முக்கிய இலக்குகள்

மீன்வளத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான முக்கிய இலக்குகள் முனைப்புடன் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் நோக்கமானது அனைத்து நீர் நிலைகளையும் மீன் வளர்ப்பிற்கு பயன்படுத்துவதன் மூலம் உள்நாட்டு மீன் உற்பத்தியை அதிகரித்தல், கடல்வள ஆதாரங்களை உகந்த அளவில் பயன்படுத்துதல், மீன்களை சுகாதாரமாக கையாளுவதற்கான குளிர்காப்பு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மூலம் மாற்று வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குதல், உவர்நீர், நீர் வாழ்உயிரின வளர்ப்பு நடவடிக்கைகளை ஒழுங்குப்படுத்துதல், பேரிடர்

காலங்களில் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல், நீடித்த மீன்வள மேம்பாடு மூலம் மீனவர்கள் மற்றும் மீன்வளர்ப்போர் ஆகியோரின் வருவாயை உயர்த்துதல் போன்றவற்றை குறுகிய கால இலக்குகள் மூலம் அடைதல் ஆகும்.

மீன்வளத்துறையின் முக்கிய இலக்குகள் கீழ்க்கண்டவாறு.

1. 2024-25 ஆம் ஆண்டு வரை ஆண்டுதோறும் உள்நாட்டு மீன் உற்பத்தியை 2 விழுக்காடு அதிகரித்தல்.
2. உவர்நீர் மீன் உற்பத்தியை ஆண்டுதோறும் 4 விழுக்காடு அதிகரித்தல்.
3. தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதன் மூலம் உள்நாட்டுச் சந்தையில் தரமான மீன்கள் கிடைப்பதை உறுதி செய்தல்.
4. ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள மீனவர்களது வருவாயை இரு மடங்காக உயர்த்துதல்.
5. 2021-22 ஆம் ஆண்டில் மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்களின் ஏற்றுமதியை 2 விழுக்காடு மற்றும் அதன் மதிப்பினை 1.5 விழுக்காடு உயர்த்துதல்

6. மீன்உற்பத்தியாகும் இடத்தை கண்டறிந்திட மீன் வளர்ப்பிற்கான அனைத்து இடுபொருட்களையும் முறைப்படுத்துதல்.

7. மீன்பிடி கலன்களை மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் போன்ற பணிக்கான வழிமுறைகளை உருவாக்குதல்.

8. மீனவர்கள் மற்றும் மீனவ மகளிர் கூடுதல் வருவாயை பெற்றிட ஏதுவாக மாற்று வாழ்வாதார நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

9. மீன்வளத்தில் நிலைத்த வளர்ச்சிக்கான கொள்கைகளை உருவாக்குதல்.

10. மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட பேரிடர் மேலாண்மை மையங்களை நிறுவுதல்.

11. கூடுதல் வருவாயை பெற்றிட ஏதுவாக கூட்டு பண்ணை முறைகள் மற்றும் மீன்வளர்ப்போர் கூட்டமைப்புகளை உருவாக்குதல்.

12. மீன்வளத்தில் திறன்மேம்பாடு அதிகரிக்கச் செய்தல் மற்றும் தொழில் முனைவோரை உருவாக்குதல்.

13. மீனவர்களுக்கு சிறந்த சேவையளித்தல் மற்றும் மானிய உதவிகளை வெளிப்படைத் தன்மையுடன் வழங்குதல்.

7. துறையின் முக்கிய செயல்பாடுகள்

மீன்வளத்துறையின் முக்கிய செயல்பாடுகள் பின்வருமாறு: -

i. பல்வேறு மீனவர் சமூக நலத்திட்டங்களை செயல்படுத்துதல்.

ii. சட்டம் மற்றும் விதிகளை அமல்படுத்தி மீன்பிடிப்பினை ஒழுங்குபடுத்துதல்.

iii. மீன்வள ஆதாரங்களை பாதுகாத்து மேலாண்மை செய்தல்.

iv. இயற்கை பேரிடர் காலங்களில் மீட்பு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள்.

v. கடல் மீன்பிடிப்பின் போது மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்தல்.

vi. தமிழ்நாடு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டுதல்.

vii. உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

viii. சுகாதாரமான முறையில் மீன் உணவுப் பொருட்களை குளிர்சாதன வசதிகளுடன் சந்தைப்படுத்துதல்.

ix. உள்நாட்டு மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பினை மேம்படுத்துதல்.

x. மீனவ மகளிருக்கென சிறப்பு வாழ்வாதார திட்டங்கள்.

xi. திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளித்தல்.

xii. விரிவாக்கப் பணிகள் மூலம் திட்டங்கள் சென்றடையச் செய்தல்.

xiii. மீனவ கூட்டுறவு சங்கங்களை மேலாண்மை செய்தல்.

7.1 கடல் மீன்வளத் திட்டங்கள்

கடல் மீனவருக்கான நலத்திட்டங்கள்

மறைந்த முன்னாள் முதலமைச்சர் டாக்டர். ஜெ ஜெயலலிதா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் இந்த அரசு, மாநிலத்திலுள்ள மீனவர்களின்

வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதில் எப்பொழுதும் அதிக முன்னுரிமை அளித்து, பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

நலத்திட்டங்களின் பயன்கள் வெளிப்படையான முறையில் குறுகிய காலத்திற்குள் பயனாளிகளை சென்றடைவதை உறுதி செய்திடும் பொருட்டு, பயனாளிகளின் வங்கிக்கணக்கில் தேசிய மின்னணு பணப் பரிமாற்றம் (NEFT) வழியாக பணப்பலன்களை நேரடியாக அரசு வழங்கி வருகிறது.

மீனவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வெளிப்படைத்தன்மையுடன், எவ்வித இடையூறுமின்றி குறித்த காலத்திற்குள் சென்றடைவதை உறுதி செய்திட, மீனவர்கள் “அரசு பொது சேவை மையங்கள்” மூலம் இணையதளம் வழியாக விண்ணப்பித்து, மீனவரின் பயோமெட்ரிக் அடையாளங்களை சரிபார்த்து எளிய முறையில் நலத்திட்டங்களை பெற்றிட துறை நடவடிக்கை எடுத்துவருகிறது. 2019-20 ஆம் ஆண்டு முதல் தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம், தமிழ்நாடு மீனவமகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம், மீன் பிடித் தடைக்கால நிவாரணத்

திட்டம், மீன்பிடிப்பு குறைந்த கால நிவாரணத் திட்டம் மற்றும் மீனவர் நலவாரியம் வழியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அனைத்து உதவிகளும் இணையதள சேவை வாயிலாக செயல்படுத்தப்படும். நேரடி பயன்வழங்கும் திட்டத்தின்கீழ் (DBT) 2020-21 ஆண்டிலிருந்து மீன்பிடி படகுகளுக்கு மானியத்துடன் கூடிய மண்ணெண்ணை மற்றும் உயர்வேக டீசல் வழங்கப்படும்.

2019-20 ஆம் ஆண்டில் பல்வேறு கடல் மீனவர் நலத்திட்டங்களுக்காக, மொத்தம் ரூ.296.85 கோடி நிதியினை, தமிழக அரசு விடுவித்துள்ளது.

I. மாநிலத் திட்டங்கள்

7.1.1 மீன்பிடித் தடைக்காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு நிவாரண உதவியாக ரூ.5,000 வழங்குதல்

கடல் மீன்வளத்தைப் பேணிக்காத்திட, 2001 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் மீன்பிடித் தடைக்காலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. மீன்பிடித் தடைக்காலம் கிழக்கு கடற்கரைப் பகுதியில் ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரையிலும், மேற்கு

கடற்கரைப் பகுதியில் ஜூன் 1 முதல் ஜூலை 31 வரையிலும் அமல்படுத்தப்படுகிறது. மீன்பிடித் தடைக்காலத்தில் இன்னலுறும் கடல் மீனவக் குடும்பங்களின் துயரினை களைந்திடும் விதமாக, ஒவ்வொரு மீனவக் குடும்பத்திற்கும் ரூ.5,000 மீன்பிடித் தடைக்கால நிவாரணமாக வழங்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது.

2019-20 ஆம் ஆண்டில், 13 கடலோர மாவட்டங்களைச் சார்ந்த 1,63,491 மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடி தடைக்கால நிவாரணத் தொகையாக ரூ.81.75 கோடி தேசிய மின்னணு பணப் பரிமாற்றம் (NEFT) வழியாக, பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2020-21 ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

7.1.2 மீன்பிடிப்பு குறைவு காலத்தில் கடல் மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவித் தொகையாக ரூ.5,000 வழங்குதல்

மீன்பிடி குறைவு காலத்தில் இன்னலுரும் 13 கடலோர மாவட்ட மீனவ குடும்பங்களின் துயரினைக்

களைந்திடும் விதமாக, ஒவ்வொரு மீனவ குடும்பத்திற்கும், ரூ.5,000 சிறப்பு நிவாரணமாக வழங்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது.

கடல் மீனவ குடும்பங்களுக்கு சிறப்பு நிவாரண உதவி வழங்கிட 2019-20 ஆம் ஆண்டில் அரசால் ரூ.88.41 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 15.3.2020 வரை, 11 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,30,133 கடல் மீனவக் குடும்பங்களுக்கு ரூ.65.07 கோடி தேசிய மின்னணு பணப் பரிமாற்றம் (NEFT) வழியாக பயனாளிகளின் வங்கிக்கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது. தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் நிவாரணத் தொகை வழங்கும் திட்டம் வரும் ஜூலை 2020 திங்களில் நிறைவுபெறும்.

இத்திட்டம் 2020-21 ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

7.1.3 கடல் மீனவ மகளிர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

இத்திட்டம், மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்புடன் கடல் மீனவர்களுக்கு செயல்படுத்தப்படும் திட்ட வழிமுறைகளைப் பின்பற்றி,

மாநிலத்திட்டமாக மீனவ மகளிருக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக ரூ.61.31 கோடி அரசால் ஒப்பளிக்கப்பட்டு, இதுவரை 10 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த 1,37,524 பயனாளிகளுக்கு நிவாரணத் தொகையாக ரூ.41.26 கோடி தேசிய மின்னணு பணப்பரிமாற்றம் (NEFT) வழியாக பயனாளிகளின் வங்கிக்கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நிவாரண உதவி வழங்கும் பணிகள் மார்ச் 2020-லும் தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் வரும் ஜீலை 2020 திங்களிலும் நிறைவுபெறும்.

இத்திட்டம் 2020-21 ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

7.1.4.மீன்பிடி படகுகளுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட அதிவேக டீசல் எரியெண்ணெய் வழங்குதல்

மீன்வளத்துறையில் பதிவு செய்யப்பட்ட மீன்பிடி விசைப்படகுகளுக்கு ஆண்டொன்றிற்கு 18,000 லிட்டரும் மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப்

படகுகளுக்கு, ஆண்டொன்றிற்கு 4,000 லிட்டர் வீதம் விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட அதிவேக டீசல் எரியெண்ணெய் அரசால் வழங்கப்படுகிறது. 2019-20-ம் ஆண்டில் 83,737 கிலோ லிட்டர் டீசல் ரூ.115.68 கோடி மானியத்தொகையில் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2020-21 ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

7.1.5 பாரம்பரிய மீன்பிடி கலன்களுக்கு மானிய விலையில் தொழிலக மண்ணெண்ணெய் வழங்குதல்

தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில், மண்ணெண்ணெயில் இயங்கக்கூடிய இயந்திரம் பொருத்தப்பட்ட பாரம்பரிய மீன்பிடி கலன்களுக்கு மானிய விலையிலான தொழிலக மண்ணெண்ணெய், லிட்டர் ஒன்றிற்கு ரூ.25 வீதம் ஒரு ஆண்டில், கலன் ஒன்றிற்கு 3,400 லிட்டர் அரசால் வழங்கப்படுகிறது.

2019-20-ம் ஆண்டில் 11,941 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் ரூ.26.06 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது. 2020-21 ஆம் ஆண்டிலும், இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

மானியத்துடன் கூடிய அதிவேக டீசல் மற்றும் மண்ணெண்ணெய் வழங்கும் திட்டங்களின் பயன்கள் வெளிப்படையான முறையில் பயனாளிகளை சென்றடைவதை உறுதி செய்திடும் பொருட்டு, பயனாளிகளின் வங்கிக்கணக்கில் தேசிய மின்னணு பணப் பரிமாற்றம் (NEFT) வழியாக பணப்பலன்களை நேரடியாக வழங்கும் வசதி 2020-ம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும்.

7.1.6 பிற நாட்டினரால் சிறை பிடிக்கப்படும் மீனவர்களது குடும்பத்திற்கு தின உதவித் தொகை வழங்குதல்

கடலில் மீன்பிடிக்கும் போது அண்டை நாட்டினரால் சிறை பிடிக்கப்படும் மீனவர்களின் குடும்பத்தினருக்கு உதவிடும் வகையில், நாளொன்றுக்கு ரூ.250 வீதம் (மாதம் ஒன்றிற்கு ரூ.7500/- வீதம்) தின உதவித் தொகையாக அரசு வழங்கி வருகிறது. தின உதவித் தொகையை உடனடியாக வழங்கிடும் வகையில், இத்திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வழியாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2019-20 ஆம் ஆண்டில், சிறைபிடிக்கப்பட்ட 51 மீனவர்களின் குடும்பத்திற்கு ரூ.5.07 இலட்சம் நிவாரணமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

2020-21 ஆம் ஆண்டும், இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

7.1.7 காணாமல் போகும் மீனவர்களது குடும்பத்திற்கு தின உதவித் தொகை வழங்குதல்

கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்களது குடும்பத்திற்கு, தின உதவித்தொகையாக ரூ.250 வீதம் (மாதமொன்றுக்கு ரூ.7,500/- வீதம்) மாநில அரசு வழங்கி வருகிறது. 2019-20 ஆம் ஆண்டில், மீன்பிடிப்பின் போது காணாமல் போன 23 மீனவர்களின் குடும்பத்திற்கு ரூ.11.10 இலட்சம் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

2020-21 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

7.1.8 இலங்கை கடற்படை மற்றும் பிற நாட்டினரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழக்கும் மீனவரது குடும்பத்தினருக்கு / காயமடையும் மீனவருக்கு நிவாரணம் வழங்குதல்

கடலோர மாவட்டங்களிலுள்ள மீனவர்கள், தங்களது பாரம்பரிய மீன்பிடி பகுதியான பாக் வளைகுடா பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நேரங்களில், இலங்கை

கடற்படையினரால் சிறைபிடிக்கப்படுதல் / துன்புறுத்தப்படுதல் போன்ற சிரமங்களை எதிர்கொள்வதோடு, சில சமயங்களில் துப்பாக்கிச் சூட்டிற்கும் இலக்காகின்றனர்.

இவ்வாறான நிகழ்வுகளின் போது மரணமடையும் மீனவரது குடும்பத்தினருக்கு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து கருணைத் தொகையாக ரூ.3 இலட்சம் வழங்கப்படுகிறது. துப்பாக்கிச் சூட்டில் பலியாகும் மீனவர் அவரது குடும்பத்தில் பொருளீட்டக் கூடிய ஒரே நபராக இருக்கும் பட்சத்தில், இந்த கருணைத் தொகை ரூ.5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படுகிறது. மீனவர் பலத்த காயம் மற்றும் சிறு காயம் அடையும் போது கருணைத்தொகையாக முறையே ரூ.50,000 மற்றும் ரூ.20,000 வழங்கப்படுகிறது.

7.1.9 கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போகும் மீனவர்கள் / துப்பாக்கிச் சூட்டில் இறக்கும் மீனவர்களின் பிள்ளைகளின் உயர்கல்வி செலவினங்களுக்காக பிரத்தியேக நிதி ஏற்படுத்துதல்

கடலில் மீன்பிடிக்கச் சென்று, காணாமல் போகும் மீனவர்கள் / இலங்கை கடற்படையினரால் சுடப்பட்டு இறக்க நேரிடும் மீனவர்களின் பிள்ளைகள், தொடர்ந்து உயர் கல்வி கற்பதற்கான முழுச் செலவினத்தையும் மேற்கொள்வதற்காக, தமிழ்நாடு மீனவர் நலவாரியம் மூலம் ரூ.25 இலட்சம் பிரத்தியேக நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது.

7.1.10 மீனவர்கள் புதிய சூரை மீன்பிடி தூண்டில் மற்றும் செவுள் வலை படகுகளை வாங்கிட 50 விழுக்காடு மானியம் வழங்குதல்

நிலைத்த மீன்வளத்திற்காக கடலோர மீன்வள ஆதாரங்களின் மீதான மீன்பிடி அழுத்தத்தை குறைத்திடவும், இதுவரை பிடிக்கப்படாத அல்லது குறைவாக பிடிக்கப்பட்ட ஆழ்கடல் சூரைமீன் போன்ற கடல் மீன்வள ஆதாரங்களை மீனவர்கள் பிடித்திடும் பொருட்டு 2014-15 ஆம் ஆண்டு, மறைந்த முன்னாள் முதலமைச்சர் டாக்டர். ஜெ ஜெயலலிதா அவர்களால்

"புதிய சூரை மீன்பிடி தூண்டில் மற்றும் செவுள் வலை படகுகளை வாங்கிட மீனவர்களுக்கு 50 விழுக்காடு மானியம் வழங்குதல்" என்ற முன்னோடி திட்டம் நாட்டிலேயே முதல்முறையாக தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தில் படகு கட்டுவதற்கான உத்தேச மதிப்பான ரூ.60 இலட்சத்தில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.30 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 171 படகுகள் கட்டுவதற்கு ரூ.51.30 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது, முதல் தவணையாக ரூ.17.10 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 110 பயனாளிகளுக்கு படகு கட்டுவதற்கான பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது, 54 படகுகள் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 56 படகுகளின் கட்டுமான பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை ரூ.16.99 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது. 61 பயனாளிகளுக்கு படகுகள்

கட்டுவதற்கான பணி ஆணைகள் விரைவில் வழங்கப்படும்.

II. மத்திய அரசு பங்களிப்பு திட்டங்கள்

7.1.11 கடல் மீனவர்களுக்கான தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

தேசிய கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிவாரண உதவித்தொகை ரூ.**4,500** ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வரப்படுகிறது. 2019-20 **ஆம் ஆண்டில்** ரூ.**63.68** கோடி இத்திட்டத்திற்காக ஒப்பளிக்கப்பட்டு, அதனில் **10** கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த **1,42,268** பயனாளிகளுக்கு நிவாரணத் தொகையாக ரூ.**42.68** கோடி தேசிய மின்**னணு** பணப் பரிமாற்றம் **(NEFT)** மூலம் பயனாளிகளின் வங்கிக்கணக்கில் நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நிவாரண உதவி வழங்கும் பணிகள் மார்ச் 2020-லும் தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் வரும் ஜுலை 2020 திங்களிலும் நிறைவு பெறும்.

2020-21 ஆம் ஆண்டிலும் இத்திட்டம், தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

7.1.12 மீனவர் குழு விபத்துக் காப்புறுதி திட்டம்

மத்திய அரசு, ''பிரதான் மந்திரி சுரக்சா பீமா யோஜனா'' (PMSBY) என்ற திட்டத்தின் கீழ் விபத்தில் மரணம் அடையும்/ காணாமல் போகும் / நிரந்தர/ பகுதி ஊனம் அடையும் மீனவர்களுக்கான காப்புறுதிப் பயன்களை தேசிய மீனவர் கூட்டுறவு இணையம் (FISHCOPFED - National Federation of Fishers Cooperatives Ltd., New Delhi) மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான சந்தா தொகையான ரூ.12 மத்திய மற்றும் மாநில அரசுகளால் சரிபங்காக செலுத்தப்படுகிறது. விபத்தில் மரணம் அடையும்/ காணாமல் போகும்/ நிரந்தர ஊனம் அடையும் நேர்வுகளில், மீனவருக்கு காப்புறுதித் தொகையாக ரூ.2,00,000 வழங்கப்படுகிறது. பகுதி ஊனமடையும் நிகழ்வுகளில் காப்புறுதித் தொகையாக ரூ.1,00,000 வழங்கப்படுகிறது. மேலும், 2019-20 ஆம் ஆண்டு முதல் சிறப்பு செலவின காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் மருத்துவ செலவினை ஈடுசெய்திட ரூ.10,000 வழங்கப்படுகிறது. இதற்கான கூடுதல் சந்தா தொகை நபருக்கு ரூ.3.54/- மத்திய மற்றும் மாநில அரசுகளால் சரிபங்காக செலுத்தப்படுகிறது.

1.6.2019 முதல் 31.5.2020 வரையிலான காலத்திற்கு 5,24,054 மீனவர்களுக்கு தமிழக அரசின் காப்புறுதி சந்தா தொகையாக ரூ.40.72 இலட்சம் புதுடில்லி, தேசிய மீனவர் கூட்டுறவு இணையத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டம் இவ்வாண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

7.1.13 பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திரமயமாக்குதல்

மீனவர்கள் தங்களது பாரம்பரிய மீன்பிடி கலன்களை இயந்திரமயமாக்கும் பொருட்டு வெளிப்பொருத்தும் இயந்திரம் / உட்பொருத்தும் இயந்திரம் வாங்குவதற்கு அரசு 40 விழுக்காடு மானியமாக, அதிகபட்சமாக அலகு ஒன்றிற்கு ரூ.48,000 வழங்கி வருகிறது. 2019-20 ஆம் ஆண்டில் நீலபுரட்சித் திட்டத்தின் கீழ் ரூ.6.35 கோடி நிதியுதவியுடன் 1,300 வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் / உட்பொருத்தும் இயந்திரங்கள் பாரம்பரிய நாட்டுப்படகு மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 500 வெளிப்பொருத்தும்/ உட்பொருத்தும் இயந்திரங்கள் ரூ.2.40 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.

7.1.14 ஆழ்கடல் மீன்பிடிப்பை அதிகரித்தல்

தமிழகத்தில் 5,806 மீன்பிடி விசைப்படகுகள் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ளன. பெரும்பாலான மீன்பிடி விசைப்படகுகள் இழுவலை மீன்பிடிப்பை மேற்கொண்டு வருகின்றது. இழுவலை மூலம் மீன்பிடிப்பது நிலைத்தன்மை அற்ற மீன்பிடி முறையாகும். தொடர் இழுவலை மீன்பிடிப்பு மதிப்புமிக்க கடல் மீன்வள ஆதாரத்தை சிதைத்து வருகிறது.

அடிமட்ட இழுவலைகளைக் கொண்டு மீன்பிடிக்கும் நிலைத்தன்மையற்ற மீன்பிடி முறையை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு இழுவலை மீன்பிடிப்பை மாற்றிடவும், அதனுடன் அண்மைக்கடல் பகுதியில் மீன்வள ஆதாரத்தை நிர்வகித்திடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இழுவலை மீன்பிடி படகுகளை

ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கு பரவலாக்கிட, தமிழ்நாடு பல்வேறு தனிச்சிறப்புத் திட்டங்களை செயல்படுத்துவதோடு, சூரை மற்றும் ஆழ்கடல் மீன்களை கையாளுவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி வருகிறது.

ரூ.60 இலட்சம் மதிப்புள்ள புதிய தூண்டில் மற்றும் செவுள்வலை மீன்பிடி படகுகளை கட்டிட 50 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.30 இலட்சம் மானிய உதவி வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 54 படகுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும், 56 படகுகளின் கட்டுமானம் பல்வேறு நிலைகளில் உள்ளன. இதுவரை ரூ.16.99 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

பாக் வளைகுடா பகுதியில் உள்ள இழுவலை படகுகளை ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கு பரவலாக்கும் திட்டத்தின் கீழ் பாக் வளைகுடா மீனவர்களுக்கு படகின் மொத்த மதிப்பான ரூ.80 இலட்சத்தில் 70 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.54 இலட்சம் மானிய உதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 22 படகுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும், 29

படகுகளின் கட்டுமானம் பல்வேறு நிலைகளில் உள்ளன. இத்திட்டத்தின் கீழ், இதுவரை ரூ.15.78 கோடி மானியமாக விடுவிக்கப்பட்டுள்ளது.

இழுவலைப்படகுகளை ஆழ்கடல் மீன்பிடி படகுகளாக மாற்றிட 100 விழுக்காடு அல்லது அதிகபட்சம் ரூ.15 இலட்சம் மானிய உதவி வழங்கும் திட்டத்தினை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

இராமநாதபுரம் மாவட்டம் மூக்கையூரில் ஆழ்கடல் மீன்பிடி படகுகளை நிறுத்திடவும், ஆழ்கடல் மீன்களை கையாளவும் ரூ.113.90 கோடி செலவில் மீன்பிடி துறைமுகம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. சூரை மீன்கள் மற்றும் சூரை மீன்களைப் போன்ற மீன்களை கையாள இராமநாதபுரம் மாவட்டம், குந்துக்கல்லில் மீன் இறங்கு தளம் ஒன்றும் ரூ.74 கோடி செலவில் கட்டப்பட்டு வருகிறது.

மத்திய மீன்துறை கடல்சார் பொறியியல் பயிற்சி நிலையம் (CIFNET) இதுவரை ஆழ்கடல் மீன்பிடிப்பு முறைகளான தூண்டில் மற்றும் செவுள்வலை மீன்பிடிப்பு, ஆழ்கடல் மீன்களை சுகாதாரமான முறையில் கையாளுதல் போன்றவற்றில் இதுவரை 304

மீனவர்களுக்கு 22 அணிகளாக ஆழ்கடலில் பயிற்சி அளித்துள்ளது. இப்பயிற்சி தொடர்ந்து அளிக்கப்படும்.

ஏற்றுமதிக்கான உட்கட்டமைப்பு வசதிகள், தொடர் குளிர்காப்பு வசதிகள் போன்றவற்றை அளித்திட செய்யத்தக்கமைக்கான ஆய்வுகளை அரசு மேற்கொண்டுள்ளது. மேலும், இராமநாதபுரம் முதல் கன்னியாகுமரி வரை மீன் பதனிடும் தொழில் வழித்தடம் அமைத்திடுவதற்கான சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆழ்கடல் மீன்பிடி படகுகளின் பாதுகாப்பினை உறுதி செய்திட மானிய உதவியில் ஆழ்கடல் மீன்பிடி படகுகளுக்கு தொலைத் தொடர்பு சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளது. 80 ஆழ்கடல் படகு குழுக்களுக்கு 160 செயற்கைகோள் தொலைபேசிகள், 200 நேவிக் மற்றும் 80 நேவ்டெக்ஸ் சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டில் 75 விழுக்காடு மானிய உதவியில் மேலும் 500 செயற்கைகோள் தொலைபேசிகள் அளித்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

7.1.15 பாக் வளைகுடா மாவட்டங்களில் இழுவலைப் படகுகளை ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளாக மாற்றுவதற்கு மானியம் வழங்குதல்

பாக் வளைகுடாப் பகுதியில் உள்ள இழுவைப்படகுகளுக்கு மாற்றாக ஆழ்கடல் சூரை மீன்பிடி படகுகளைக் கட்டுவதற்கு, மத்திய மற்றும் மாநில அரசு ஒரு படகின் விலையான ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் 70 விழுக்காடு மானியம் வழங்கி செயல்படுத்தி வருகிறது. ஒரு படகின் விலையான ரூ.80 இலட்சத்தில், 50 விழுக்காடு மத்திய அரசின் மானியமாக ரூ.40 லட்சம், 20 விழுக்காடு தமிழ்நாடு அரசின் மானியமாக ரூ.16 இலட்சம், 10 விழுக்காடு பயனாளியின் பங்களிப்பாக ரூ.8 இலட்சம், மீதமுள்ள 20 விழுக்காடு ரூ.16 லட்சம் வங்கிக் கடனாகவும் வழங்கப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக, 500 படகுகளை ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளாக மாற்றுவதற்கு, அரசு ரூ.286 கோடி நிதி வழங்கியுள்ளது. ஆழ்கடல் மீன்பிடிப் படகாக மாற்றுவதற்கு 666 விண்ணப்பங்கள் பெறப்பட்டு 91 பயனாளிகள் முத்தரப்பு ஒப்பந்தம் இயற்றியுள்ளனர். 79 படகுகள் கட்டுவதற்கு பணி ஆணைகள்

வழங்கப்பட்டு, தற்போது 22 படகுகள் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய படகுகளுக்கான கட்டுமானப் பணிகள் பல்வேறு நிலையில் முன்னேற்றத்தில் உள்ளன.

7.1.16 பாரம்பரிய நாட்டுப்படகுகளுக்கு மாற்றாக 10மீ வரை மொத்த நீளம் கொண்ட கண்ணாடி நாரிழைப்படகு கட்டுவதற்கும், இயந்திரம், வலைகள் மற்றும் குளிர்காப்பு பெட்டிகள் வாங்க மானியம் வழங்குதல்

மத்திய அரசின் நீலப்புரட்சித் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் ரூ.8.50 கோடி செலவில் 10 மீ வரை மொத்த நீளம் கொண்ட 200 கண்ணாடி நாரிழைப்படகுகள், இயந்திரம், வலை மற்றும் குளிர்காப்புப் பெட்டிகள் ஆகியவை 40 விழுக்காடு மானியத்தில் வழங்கிட மத்திய அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கண்ணாடி நாரிழைப்படகு, இயந்திரம், வலை மற்றும் குளிர்காப்புப் பெட்டிகள் வாங்குவதற்கு 40 விழுக்காடு மானியம் அல்லது அதிகபட்சமாக ரூ.1.70 இலட்சம் மானியமாக வழங்கப்படும். 2019-20 ஆம் ஆண்டில்

100 கண்ணாடி நாரிழைப்படகுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2020-21 ஆம் ஆண்டில் கூடுதலாக 100 படகுகள் கட்டி வழங்கப்படும்.

7.2 ஒழுங்குபடுத்துதல் மற்றும் அமலாக்கம் செய்தல்

7.2.1 மீன்பிடி கலன்களை இணையதளம் மூலம் பதிவு செய்தல்

கடலோர பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு, மீன்பிடி கலன்களை இணையதளம் மூலம் பதிவு செய்யும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டு, ரூ.1.33 கோடி செலவில் இத்திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இணையதளத்தில் 15.3.2020 வரை 5,806 மீன்பிடி விசைப்படகுகள், 36,645 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகள் மற்றும் 5,007 இயந்திரம் பொருத்தப்படாத நாட்டுப்படகுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

7.2.2 கடல் மீனவர்களுக்கு "பயோமெட்ரிக்" அடையாள அட்டை (Biometric Identity Card) வழங்குதல்

மும்பையில் 26.11.2008 அன்று நடந்த தீவிரவாதத் தாக்குதலுக்குப் பின்னர், கடலோரப் பாதுகாப்பினை உறுதி செய்திடும் பொருட்டு, கடல் மீனவர்களுக்கு

"பயோமெட்ரிக்" அடையாள அட்டைகளை (Biometric Identity Cards) வழங்கிடும் திட்டம், மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, இதற்கென தமிழகத்திற்கு, ரூ.1.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 1,86,523 கடல் மீனவர்களுக்கும், 1,63,221 கடல் மீனவ மகளிருக்கும் பயோமெட்ரிக் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 222 பயோமெட்ரிக் அடையாள அட்டைகள் ஆய்வு செய்யும் கருவிகள் (Card Readers) துறை அலுவலர்கள் மற்றும் சட்ட அமலாக்க பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

7.2.3. கடல் மீன்பிடி ஒழுங்குமுறைபடுத்தும் சட்டத்தை அமல்படுத்திட பிரத்தியேக அமலாக்கப் பிரிவு அமைத்தல்

சமீப காலங்களில் மீன்பிடி கலன்களின் எண்ணிக்கை மற்றும் கொள்ளளவு அதிகரிப்பின் காரணமாக அளவுக்கு அதிகமான மீன்பிடிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாடு கடல் மீன்பிடித்தலை ஒழுங்குபடுத்தும் சட்டம் செயலில் இருந்தாலும், போதுமான உட்கட்டமைப்பு, ரோந்து கலன்கள் மற்றும் மனித ஆற்றல் ஆகியவற்றில்

பற்றாக்குறை காரணமாக, கடலில் சட்டம் ஒழுங்கை அமுல்படுத்தல் மட்டுமின்றி, சட்டத்திற்கு முரணான மீன்பிடிப்பை தடுத்தல், மீன்வள ஆதாரத்தை பாதுகாத்தல், மீன்பிடிப்பை முறைப்படுத்துதல் போன்றவற்றை செயல்படுத்துவது பெரும் சவாலாக இருந்து வருகிறது. தற்போது 13 மாவட்டங்களில், 18 அதிகாரம் பெற்ற அலுவலர்கள்/ மீன்துறை உதவி இயக்குநர்கள் மற்றும் 7 தீர்ப்பு வழங்கும் அலுவலர்/ மண்டல மீன்துறை இணை/துணை இயக்குநர்கள் தமிழ்நாடு மீன்பிடி ஒழுங்குமுறை சட்டம் செயல்படுத்தப்படுவதை கண்காணிக்கின்றனர். அனைத்து அலுவலர்களின் மேல் முறையீட்டு அலுவலராக மீன்துறை இயக்குநர் மேற்பார்வையிடுகின்றார்.

கடலில் மீன்பிடித்தல் தொடர்பாக ஏற்படும் சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள், மீனவர்களுக்கிடையே ஏற்படும் பிரச்சனைகளை கையாளுவதற்கு, பிற துறைகளில் உள்ள நுண்ணறிவுப் பிரிவு போன்று மீன்வளத்துறையில் கடல் மீன்பிடிப்பு ஒழுங்குமுறை சட்டம் மற்றும் விதிகளை அமலாக்கம் செய்திட காவல்துறை

அலுவலர்களைக் கொண்ட பிரத்தியேக அமலாக்கப் பிரிவினை 112 பணியிடங்களுடன் அமைத்திட அரசு ஆணை வழங்கியுள்ளது. அதன்படி, 13 கடலோர மாவட்டங்களில், கடலில் மீன்பிடித்தலை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்தினை அமலாக்கம் செய்திட, ஒரு காவல் கண்காணிப்பாளர், ஒரு துணை காவல் கண்காணிப்பாளர், 10 காவல் ஆய்வாளர்கள், 8 காவல் சார் ஆய்வாளர்கள், 53 காவலர்கள், 19 காவல் ஓட்டுநர்கள் (மொத்தம் 112 பதவிகள்) ஆகிய நிரந்தரப் பணியிடங்களைக் கொண்டு இப்பிரிவு செயல்படும்.

மேற்காணும் காவல்துறை அலுவலர் பதவியிடங்கள் மாநில காவல்துறைக்கு கூடுதலாக ஒப்பளிக்கப்பட்டு, அப்பணியாளர்கள் மீன்வளத்துறைக்கு அனுப்பப்படுவர். இவ்வலகின் கீழ் பணியாற்றும் அலுவலர்கள், அவர்தம் பதவித் தரத்திற்கான சீருடையுடன், வலது மேற்கையில் " கடல் மீன்வள சட்ட அமலாக்கப் பிரிவு" என்ற சொல் பொறிக்கப்பட்ட அடையாள வில்லையை அணிந்திருப்பர்.

சட்டத்திற்கு புறம்பான மீன்பிடித்தல், அழிவை ஏற்படுத்தும் மீன்பிடிப்பு மற்றும் தடை செய்யப்பட்ட

வலைகளைப் பயன்படுத்துவதை தடுத்தல் மற்றும் மீன்பிடித்தலில் ஒழுங்குமுறையை மேற்கொள்ள கடலில் ரோந்து பணி மேற்கொள்ளுதல், ரோந்துப்பணியின் போது சேகரிக்கப்படும் சமூக விரோத செயல்பாடுகள் மற்றும் நுண்ணறிவுத் தகவல்களை கடலோர பாதுகாப்புப்படை மற்றும் உள்ளூர் காவல்துறையின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுத்தல் போன்ற முக்கிய பணிகளை இந்த அமலாக்க பிரிவு மேற்கொள்ளும்.

அமலாக்கப் பிரிவின் செயல்பாடுகளுக்கென ஆண்டொன்றுக்கு தொடரும் செலவினங்களுக்கென மொத்தம் ரூ.8.65 கோடி அரசால் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், அமலாக்கப் பிரிவின் பயன்பாட்டிற்கென ஊர்திகள் வாங்கிட அரசால் ரூ.1.90 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, மொத்தம் 19 ஊர்திகள் வாங்கப்பட்டுள்ளன. இந்த அமலாக்கப் பிரிவு 1.12.2019 முதல் செயல்பட்டு வருகிறது.

7.3 மீன்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேலாண்மை செய்தல்

மீன்வளத்தினைப் பாதுகாத்திடவும், மீன்வளத்தினை அதிகரித்திடவும், மீன்பிடித் தடைக்காலம் அமலாக்கம் செய்தல், கடலில் மீன்குஞ்சுகளை இருப்பு செய்தல், செயற்கை மீன் உறைவிடங்களை அமைத்தல் மற்றும் பல்வகை மாற்று மீன்பிடி முறைகளை மேற்கொள்ளுதல் போன்ற வழிமுறைகள், மீன்வளத்துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மீன்வளத்தினை திறனுடன் நிர்வகிக்க சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் கூட்டு மேலாண்மை தத்துவத்தின் அடிப்படையில் மேலாண்மை செய்யப்பட்டு வருகிறது. மீனவ பங்களிப்பாளர்களின் ஒத்துழைப்புடன் மீன்வள ஆதாரங்களை திறனுடன் பாதுகாக்க இந்நடவடிக்கை உதவிடும்.

7.3.1 சீரான மீன்பிடித் தடைக்காலம்

கடல் மீன்வளத்தைப் பாதுகாத்திட, 2001 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் மீன்களின் இனப்பெருக்க காலங்களில் மீன்பிடித் தடைக்காலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கிழக்குக்

கடற்கரைப் பகுதியில், ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரையிலும், மேற்குக் கடற்கரைப் பகுதியில் ஜூன் 1 முதல் ஜூலை 31 வரையிலும், மொத்தம் 61 நாட்கள் மீன்பிடித் தடைகாலம் அமல்படுத்தப்படுகிறது.

7.3.2 மீன்வளத்திற்கு அழிவு ஏற்படுத்தும் மீன்பிடி வலைகளை தடைசெய்தல்

தமிழக கடற்பகுதியில் மீன்வளத்தினைப் பாதுகாத்திடவும், பாரம்பரிய நாட்டுப்படகு மீனவர்களின் வாழ்வாதாரத்தினை பாதுகாத்திடவும், கடலில் மீன்பிடிக்கையில் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படாதிருக்கவும், சுற்றுச்சூழல் பாதிக்கப்படாத வகையில் அனைத்து மீனவர்களுக்கும் பாகுபாடின்றி மீன்கள் கிடைக்கும் பொருட்டு தமிழகக் கடற்பகுதி முழுவதிலும் அனைத்து வகை சுருக்குமடி வலைகள், இரட்டைமடி வலைகளை பயன்படுத்துதல் மற்றும் அவை போன்ற பிற வலைகளை பயன்படுத்துதல் மற்றும் இவ்வலைகளை பயன்படுத்தும் அனைத்து வகை படகுகளும் தடை செய்யப்பட்டுள்ளது.

மேலும், கடல்மீன்வளத்தை அழிக்கும் மீன்பிடி வலைகளை மீன்பிடித்தலுக்கு பயன்படுத்தப்படுவதை

முற்றிலுமாக ஒழித்திடும் பொருட்டு இந்திய கப்பற்படை, கடலோர காவல்படை, கடலோர காவல் குழுமம், வருவாய் துறை, காவல்துறை, மீன்துறை சட்ட அமலாக்கப் பிரிவு மற்றும் மீன்துறை அலுவலர்களைக் கொண்ட மாவட்ட அளவிலான கண்காணிப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

7.3.3 கடல் ஆமைகளை பாதுகாத்தல்

தமிழகக் கடற்பகுதியில் கடல் ஆமைகளை பாதுகாத்திடும் பொருட்டு, மீன்பிடி வலைகளில் கடல் ஆமைகள் சிக்காமல் வெளிச்செல்ல ஏதுவாக வலைகளின் தூர் மடியில் Turtle Excluder Device (TED) கருவிகள் பொருத்திடவும், ஒவ்வொரு ஆண்டும் கடல் ஆமைகளின் இனப்பெருக்கக் காலமான ஜனவரி 1 முதல் ஏப்ரல் 31 முடிய நான்கு மாதங்களுக்கு கடற்கரையில் கடல் ஆமைகள் முட்டையிடும் கடற்பகுதியில் 5 கடல் மைல்களுக்குள் அனைத்துவகை படகுகளின் மூலம் மீன்பிடிக்கத் தடையாணை பிறப்பித்து அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

7.4 மீன் மற்றும் மீன் பொருட்களைச் சந்தைப்படுத்துதல்

7.4.1 உள்நாட்டு மீன் விற்பனையை மேம்படுத்துதல்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம், உள்ளூரில் பொதுமக்களுக்கு தரமான மீன்களை, குறைந்த விலையில் வழங்குவதற்காக, சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் நடமாடும் மீன் விற்பனை நிலையங்களை செயல்படுத்தி வருகிறது. மேலும், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகமானது முன்னோடித்திட்டமாக, சென்னை மாநகரில் இணையதளம் (www.meengal.com) வாயிலாக மீன் விற்பனையைத் தொடங்கியுள்ளது. இதுபோன்ற முன்னோடித் திட்டங்கள் நடப்பாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

7.4.2 மீன்விற்பனை சந்தைகளை நவீனப்படுத்துதல்

தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் மீன்கள் சுகாதாரமான முறையில் கையாளப்பட்டு அவற்றை நுகர்வேருக்கு தரமான நியாயமான விலையில் விற்பனை செய்திட மீன்

அங்காடிகள் புதிதாக ஏற்படுத்திடவும், ஏற்கனவே உள்ள மீன் அங்காடிகளின் உட்கட்டமைப்புகளை நவீனப்படுத்திடவும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாநிலத்தில் 495 மீன் அங்காடிகள் உள்ளது.

இத்திட்டத்திற்காக உள்ளாட்சி/ நகராட்சி அமைப்புகளுக்கு தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் மூலம் ரூ.5.21 கோடி மற்றும் தமிழக அரசின் மூலம் ரூ.5.08 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 17 நவீன மீன்அங்காடிகளின் கட்டுமான பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும், மீதமுள்ள மீன் அங்காடிகளை நவீனப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளன.

7.4.3. மீன் பொருட்களின் தரக்கட்டுப்பாட்டினை பராமரித்தல்

மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன்களுக்கு நல்ல விலை கிடைத்திடவும், நுகர்வோர்கள் தரமான மீன்களை பெற்றிடுவதை உறுதி செய்திடவும், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மதிப்பு கூட்டுதல் மற்றும் மீன் விற்பனை சந்தை தொடர்பான பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

மீன் மற்றும் மீன்பொருட்களுக்கான தரக்கட்டுப்பாடு மற்றும் அவற்றின் தரத்தினை கண்டறிந்து, சர்வதேச தரத்திற்கு இணையாக அதன் மதிப்பினை அதிகரித்திடவும், தேசிய மற்றும் சர்வதேச தர நிறுவனங்கள் நிர்ணயிக்கும் உணவுத்தரம்/குறியீடுகளை ஒருங்கிணைப்பதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது.

சுகாதாரமான முறையில் மீன்களை கையாளுதல், மீன்பிடிக்கலன்களை தூய்மையாக பராமரித்தல், மீன் இறங்குதளம் மற்றும் மீன் விற்பனை சந்தைகளை பராமரித்தல் மற்றும் இதர நடவடிக்கைகள் தொடர்பாக, விழிப்புணர்வு கூட்டங்கள் மீன்வளத்துறையால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

7.4.4. மாநிலத்தில் மீன் நுகரும் முறை

2018-19 ஆம் ஆண்டு மாநிலத்தின் மொத்த மீன் உற்பத்தி 6.9 இலட்சம் டன் ஆகும். இதனில் 4.71 இலட்சம் டன் மீன்கள் நேரடியாகவும், 0.83 இலட்சம் டன் மீன்கள் உலர் நிலையிலும் மற்றும் உப்பிட்ட மீன்களாகவும் மற்றும் 0.14 இலட்சம் டன் மீன்கள் இதர பயன்பாட்டிற்காவும் தமிழகத்தில்

உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் மீன் வளத்தின் பங்களிப்பு 1% ஆகும். மாநிலத்தின் தனிநபர் மீன்நுகர்வு 9.1 கிலோகிராம் ஆகும். நவீனமயமாக்கப்பட்ட உயர்தரமான மீன் சந்தைகள், மீன் கடைகள், நடமாடும் வண்டிகள் மற்றும் இணைய சந்தைகளின் வழியாக மாநிலத்தில் மீன் நுகர்வு அதிகரித்துள்ளது.

7.4.5. மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி

இந்தியாவில் மீன் மற்றும் மீன் உணவுப் பொருட்கள் வேளாண்பொருட்கள் ஏற்றுமதியில் பெரும் பங்கு வகிக்கிறது. இதன் மூலம் 13.93 இலட்சம் டன் ஏற்றுமதி செய்யப்பட்டு, ரூ.46,589.37 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. உலகிலுள்ள 75 நாடுகளுக்கு 50 வகையான மீன் மற்றும் இறால் வகைகள் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

2018-19 ம் ஆண்டில் மட்டும் தமிழகத்தில் 1.29 இலட்சம் டன்கள் அளவிற்கு கடல் பொருள் ஏற்றுமதி செய்யப்பட்டு, அந்நிய செலாவணியாக ரூ.5,591.49 கோடி ஈட்டப்பட்டுள்ளது. இவற்றில் கடல் பொருட்களான உறைந்த இறால், மீன்கள், கணவாய் மீன்,

கருவாடு, உலர்மீன், உயிர்மீன் மற்றும் குளிரூட்டப்பட்ட மீன் பொருட்கள் அடங்கும். அமெரிக்கா, ஜப்பான், சீனா, தென் கிழக்கு ஆசியா, ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் ஆகியவை இந்திய மீன்பொருட்களுக்கான பெரும் மீன் சந்தைகளாகும்.

தமிழகத்தில் அரசால் கட்டப்பட்டுள்ள 9 பெரிய மீன்பிடி துறைமுகங்கள், 3 நடுத்தர மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் 43 மீன் இறங்கு தளங்களின் மூலம் மீன் மற்றும் மீன் உணவுகளை ஏற்றுமதி செய்வதற்கான கட்டமைப்புகள் உலக தரத்திற்கு நிகராக ஏற்படுத்தப்பட்டு, இதன் வாயிலாக நுகர்வோருக்கு சுகாதாரமான முறையில் தரமாக மீன்கள் வழங்கப்படுகிறது. சென்னை மற்றும் தூத்துக்குடி ஆகிய நகரங்கள் மீன்களை பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதில் மாநிலத்தில் முதன்மையாக திகழ்கிறது. மேலும், தமிழ்நாட்டில் 10 குளிரூட்டப்பட்ட நிலையங்களும், 85 மீன் பதப்படுத்தும் நிலையங்களும் மற்றும் 87 குளிரூட்டப்பட்ட அறை வசதிகளும் உள்ளது.

மாநிலத்தின் ஏற்றுமதியினை பெருக்குவதற்காக தமிழக அரசு ஆழ்கடல் மீன்வளத்தினை சரியான முறையில் பயன்படுத்திட, ஆழ்கடல் மீன்பிடிப்பதற்கான முயிற்சியினை மேற்கொண்டு வருகிறது. மேலும், கடல் நீர்வாழ் உயிரின வளர்ப்பினை மேம்படுத்தி மீன் உணவின் ஏற்றுமதியினை விரிவுபடுத்திட, தமிழக அரசால் புதிய கொள்கைகள் ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

7.5 பேரிடர் தயார் நிலை, மீட்பு மற்றும் மறு வாழ்வு நடவடிக்கைகள்

மோசமான வானிலை மற்றும் இயற்கை பேரிடர் காலங்களில், மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட மீன்வளத்துறை கீழ்க்காணும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அ) மீனவர்களுக்கு வானிலை தகவல்களைப் பகிர்தல்.

ஆ) வானிலைத் தகவல்கள் மற்றும் எச்சரிக்கைகளை மீனவர்களுக்கு 24 மணிநேரமும் வழங்கிடத் தேவையான தொலைதொடர்பு வசதிகளுடன் கூடிய மத்திய கட்டுப்பாட்டு அறை மீன்வள இயக்குநரகத்தில் துவக்கப்பட்டு செயல்பட்டு

வருகின்றது. இந்தக் கட்டுப்பாட்டு அறைப் பணிக்காக பிரத்தியேக தொலைபேசி எண். 044-24341757 வழங்கப்பட்டுள்ளது..

இ) தேடுதல் மற்றும் மீட்பு பணிகளில் இந்திய கப்பல் படை, இந்திய கடலோர காவல் படை மற்றும் கடலோர காவல் குழுமம் ஆகியவற்றுடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

ஈ) மோசமான வானிலை காலங்களில் மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்றும், தங்களது படகுகளை பத்திரமான இடத்தில் வைத்து பாதுகாத்திடவும் தொடர்ந்து அறிவுறுத்தப் படுகிறார்கள்.

உ) துறையின் மூலம் வெள்ள காலங்களில் உடனடி மீட்பு பணிகளை மேற்கொள்வதற்கு 30 காற்று நிரப்பிய இரப்பர் மிதவைப்படகுகள் கடலோர மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஊ) துறை மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கை மற்றும் இந்திய கடலோர காவல்படை மற்றும் இந்திய கப்பற்படையுடன் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக அக்டோபர் 2019-ல் அரபிக்கடலில் அடுத்தடுத்து ஏற்பட்ட மூன்று

புயல்களில் 1300 ஆழ்கடல் படகுகளும், 15,000 மீனவர்களும் பத்திரமாக கரைக்கு கொண்டுவரப்பட்டனர்.

7.6 கடலில் மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் தொலைத் தொடர்பிற்கான நடவடிக்கைகள்

7.6.1 கம்பியில்லா தொலைத் தொடர்பு கருவிகள் வழங்குதல்

நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மைத் திட்டத்தின் கீழ் தமிழக கடலோர மாவட்டங்களில் உள்ள கடல் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் பொருட்டு அரசு கம்பியில்லா தொலைத் தொடர்பு வசதிகள் ரூ.66.14 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த தொலைத் தொடர்பு கருவிகள் சிறந்த முறையில் செயல்பட தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களிலும் தொலைத் தொடர்பு வசதிகள் ஏற்படுத்தும் பொருட்டு 13 கடலோர மாவட்டங்களையும் உள்ளடக்கி தொலை தொடர்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

புதிதாக 100 மீட்டர் உயரமுள்ள 7 தொலைத்தொடர்பு கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன (பழவேற்காடு-திருவள்ளூர் மாவட்டம், நெம்மேலி-செங்கல்பட்டு மாவட்டம், பரங்கிப்பேட்டை - கடலூர் மாவட்டம், கோடியக்கரை - நாகப்பட்டினம் மாவட்டம், கட்டுமாவடி - புதுக்கோட்டை மாவட்டம், வேம்பார் - தூத்துக்குடி மாவட்டம், உவரி - திருநெல்வேலி மாவட்டம்). கூடுதலாக, BSNL நிறுவனத்தினால் ஏற்கனவே அமைக்கப்பட்ட 6 தொலைத் தொடர்பு கோபுரங்கள் (மரக்காணம் - விழுப்புரம் மாவட்டம், பாண்டிச்சேரியிலுள்ள கோலாஸ் நகர், காத்தான் சாவடி-நாகப்பட்டினம் மாவட்டம், காயல்பட்டினம்-தூத்துக்குடி மாவட்டம், முட்டம் மற்றும் சின்னமுட்டம் - கன்னியாகுமரி மாவட்டம்) மற்றும் காவல்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 2 கோபுரங்களும் (நாகப்பட்டினம் மற்றும் சென்னை) வாடகை அடிப்படையில் பெறப்பட்டு மீனவர்களின் தகவல் தொடர்பு பரிமாற்றத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மீனவர்கள் கடலில் தங்கள் மீன்பிடி கலன்களிலிருந்து கரைப்பகுதியில் தொடர்பு கொள்ள

ஏதுவாக 15 இடங்களில் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. மீன்வளத்துறையினால் இந்த கட்டுப்பாட்டு அறைகளிலிருந்து மீனவர்களுக்கு வானிலை அறிக்கை மற்றும் முக்கியமான பல்வேறு தகவல்கள் வழங்கப்பட்டு வருகிறது. இவை தவிர, சென்னை மீன்துறை இயக்குநர் அலுவலகத்தில் ஒரு மைய கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.

இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு 100 விழுக்காடு மானியத்தில் 15004 எண்ணம் 5 வாட் VHF கைபேசி கருவிகளும் மற்றும் விசைப் படகுகளுக்கு 75 விழுக்காடு மானியத்தில் 2535 எண்ணம் 25 வாட் VHF கருவிகளும் ஆக மொத்தம் 17539 VHF கருவிகளும் தொலைத் தொடர்பு கருவிகளும் மீனவ பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதிக அளவில் VHF கருவிகள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டு தடையற்ற தொலைத்தொடர்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டது உலகளவில் இதுவே முதல் முறையாகும். மீனவர்களின் பாதுகாப்பினை உறுதிசெய்வதற்கான தமிழக அரசின் அர்ப்பணிப்பினை இது காண்பிக்கிறது.

7.6.2 விசைப்படகுகளில் ‘‘டிரான்ஸ்பாண்டர்கள்’’ (Transponders) பொருத்துதல்

மத்திய அரசானது, 200 கடல் மைல்களுக்கு அப்பால் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களைக் கண்காணித்திடவும், மீன்பிடிப்பில் இருக்கும் படகுகளுக்கு தகவல் தெரிவித்திடவும், ஆபத்து காலங்களில் உதவிகள் புரிந்திடும் பொருட்டு இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் மூலம் “டிரான்ஸ்பாண்டர்களை” உருவாக்கியுள்ளது. சென்னை, கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த 507 விசைப்படகுகளில் சோதனை அடிப்படையில் ‘‘**டிரான்ஸ்பாண்டர்கள்**’’ பொருத்தப்பட்டுள்ளன. வரும் ஆண்டுகளில் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து விசைப்படகுகளிலும் டிரான்ஸ்பாண்டர்கள் பொருத்தும் பணி மேற்கொள்ளப்படும்.

7.6.3 செயற்கைகோள் தொலைபேசி, ‘‘நேவிக்’’ (NAVIC) மற்றும் ‘‘நேவ்டெக்ஸ்’’ (NAVTEX) தொலைத் தொடர்பு சாதனங்கள் வழங்குதல்

2018-19ம் ஆண்டில், ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டு வரும் 80 விசைப்படகு குழுக்களுக்கு, 160

செயற்கைகோள் தொலைபேசி, 200 நேவிக் மற்றும் 80 நேவ்டெக்ஸ் கருவிகள் 100 விழுக்காடு மானிய உதவியில் ரூ.2.28 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன.

7.6.4 "தூண்டில்" - கைபேசி செயலியுடன் கூடிய இணையதள சேவை

மீன்பிடிப்பிற்காக கடலுக்குச் செல்லும் மீனவர்கள் மற்றும் மீன்பிடி கலன்களை கண்காணிப்பதின் மூலம் மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடவும், மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களின் விபரங்களை பதிவு செய்திடவும், தமிழ்நாடு மீன்வளத்துறை, மத்திய அரசு புவி அறிவியல் அமைச்சகத்தின் தேசிய கடலோர ஆராய்ச்சி நிலையம் (NCCR), இந்திய தேசிய பெருங்கடல் தகவல் மற்றும் சேவை மையம் (INCOIS) இந்திய வானிலைத்துறையுடன் (IMD) இணைந்து, 15.11.2018 அன்று "**தூண்டில்**" எனும் கைபேசி செயலியுடன் கூடிய இணையதள சேவை துவக்கி வைக்கப்பட்டது.

இந்தத் "தூண்டில் " எனும் கைபேசி செயலியுடன் கூடிய இணையதள சேவையானது, அரசு நிர்வாகத்திற்கு

உதவுவதுடன், கடலில் மீனவர்கள் தங்களின் இருப்பிடம், கடற்பயண பதிவுகள், பாதுகாப்பாக செல்ல வழிகாட்டி, மீன் அதிகம் கிடைக்கும் பகுதிகளை கைபேசியில் பதிவு செய்தல், இன்காய்ஸ் (INCOIS) நிறுவனத்திலிருந்து மீன் அதிகம் கிடைக்கும் இட விவரங்களை பெறுதல், மாறி வரும் வானிலை, புயல், அதிக மழை, கடல் அலை உயர்வு போன்ற விவரங்களை உடனடியாக தெரிந்து, அதன் மூலம் மீனவர்கள் தங்களின் பாதுகாப்பினை உறுதி செய்திடவும் உதவுகிறது.

கடலுக்குச் செல்லும் மீனவர்கள் மற்றும் மீன்பிடி கலன்களை கண்காணித்திடும் பொருட்டு அவ்விவரங்கள் தூண்டில் கைபேசி செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது.

7.7. பேரிடரினால் பாதிக்கப்பட்டோர்களுக்கு நிவாரணம் வழங்குதல்

7.7.1 சுழல் நிதியம் ஏற்படுத்துதல்

எதிர்பாரா சூழ்நிலைகளில் சேதமடையும் மீன்பிடி படகுகள் / மீன்பிடி உபகரணங்கள் / வீடுகளுக்கு உடனடி நிவாரணம் வழங்கிடும் பொருட்டு புதிய திட்டமாக ரூ. 1.30 கோடி செலவில் சுழல் நிதியம் ஏற்படுத்தப்பட்டு

ஒரு கடலோர மாவட்டத்திற்கு ரூ. 10 இலட்சம் வீதம் மேற்படி தொகை 13 கடலோர மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2019-20 ஆம் ஆண்டில் எதிர்பாரா சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட திருவள்ளூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த 31 மீனவக் குடும்பங்களுக்கு மீன்பிடி படகுகளுக்கான சேத நிவாரணத் தொகையாக ரூ.5.78 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

7.7.2. "கஜா" புயல் பாதிப்பு நிவாரணப் பணிகள்

“கஜா” புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு மாநிலப்பேரிடர் நிவாரண நிதி மற்றும் மாநில நிதியிலிருந்து ரூ.53.71 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டது. கஜா புயலால் முழுமையாக சேதமடைந்த 195 மீன்பிடி விசைப்படகுகள், பகுதி சேதமடைந்த 1,429 மீன்பிடி விசைப்படகுகள், முழுமையாக சேதமடைந்த 1,051 கண்ணாடி நாரிழைப்படகுகள், பகுதி சேதமடைந்த 2,942 கண்ணாடி நாரிழைப்படகுகள், சேதமடைந்த 6,157 இயந்திரங்கள் மற்றும் சேதமடைந்த 10,648 மீன்பிடி வலைகளுக்கு

நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு, மீனவர்கள் தொடர்ந்து மீன்பிடித்தொழில் செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிடப்பட்டதன்படி, கஜா புயலினால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் பொருட்டு, முழுவதும் சேதமடைந்த 1,051 கண்ணாடி நாரிழைப்படகுகள் மற்றும் வலைகளுக்கான நிவாரணம் சிறப்பினமாக ரூ. 85,000 லிருந்து ரூ.1,50,000 ஆக உயர்த்தப்பட்டு நிவாரணத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கஜா புயலினால் கடலோரத்தில் தூக்கியெறியப்பட்டு, மண்ணில் புதைந்து மற்றும் புதர்களில் சிக்கி சேதமடைந்த மீன்பிடி படகுகளை மீட்டெடுக்க ரூ. 36.03 இலட்சம் அரசு வழங்கியுள்ளது.

7.7.3. கஜா புயல் மறு கட்டமைப்பு, மறுவாழ்வு மற்றும் புனரமைப்பு திட்டப்பணிகள்

கஜா புயலினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களைச் சார்ந்த மீனவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திடும் பொருட்டு மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள் கடந்த 18.07.2019 அன்று தமிழக சட்டசபையில் வெளியிட்ட அறிவிப்பின்படி, கஜா புயல் மறுகட்டமைப்பு, மறுவாழ்வு மற்றும் புனரமைப்புத் திட்டபணிகளுக்காக ரூ.31.15 கோடி ஒப்பளிக்கப்பட்டது. இத்திட்டமானது, ஏழு உபதிட்டங்களாக செயல்படுத்தப்பட்டு, கஜா புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படும்.

அதன் விவரம் பின்வருமாறு:

அட்டவணை: 4

(ரூ.இலட்சங்களில்)

வ.எண்	உபதிட்டத்தின் பெயர்	அரசு பங்களிப்பு (75%)	பயனாளர் பங்களிப்பு (25%)	மொத்தம்
1	சுகாதரமான மீன் உலர் தளங்கள் மற்றும் சூரிய உலர்த்திகள் அமைத்தல்	272.28 (100%)	--	272.28
2	மீன்வளர் சூழலை மீள ஏற்படுத்திட செயற்கை உறைவிடங்கள் அமைத்தல்	1850.00 (100%)	--	1850.00
3	கடல்/உவர்நீர் மீன்வளர் குஞ்சு	593.46	197.82	791.28

	வங்கிகள் அமைத்தல்			
4	ஒருங்கிணைந்த கடல்மீன் வளர்ப்பு அலகுகள் அமைத்தல்	156.45	52.15	208.60
5	மீனவமக்களின் மாற்று வாழ்வாதார திட்டமாக மெல்லுடலிகள் வளர்த்தல்	48.24	16.08	64.32
6	மீனவ இளைஞர்கள்/மீனவ மகளிர்க்கு நடமாடும் மீன் விற்பனை நிலையங்கள் வழங்குதல்	180.00	60.00	240.00
7	கடற்பாசி வளர்ப்பினை ஊக்குவித்தல்	15.00	4.50	19.50
	மொத்தம்	3115.43	330.55	3445.98

1. நாகப்பட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, கடலூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் சுகாதரமான மீன் உலர் தளங்கள் மற்றும் சூரிய உலர்த்திகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

2. நாகப்பட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, கடலூர், திருவாரூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களின் 60 இடங்களில் செயற்கை உறைவிடங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் மத்திய கடல்வள ஆராய்ச்சி நிலையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் செயல்படுத்தப்படும். செயற்கை உறைவிட வடிவமைப்புப் பணியானது இத்துறையின் பொறியியல் பிரிவால் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

3. இப்புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடும் பொருட்டு கடல்/உவர்நீர் மீன்வளர் குஞ்சு வங்கி அமைத்தல், ஒருங்கிணைந்த கடல்வாழ் உயிரின வளர்ப்பு அலகுகள் அமைத்தல் மற்றும் மீனவ இளைஞர்களுக்கு நடமாடும் மீன்விற்பனை நிலையங்கள் அமைத்தல் ஆகிய திட்டங்களை ஒருங்கிணைத்து 15 உறுப்பினர்களைக் கொண்ட கூட்டு குழுக்களுக்கு வழங்கப்படவுள்ளது. அதன்படி 27 அலகுகள் நாகப்பட்டினம், தஞ்சாவூர்,

புதுக்கோட்டை, கடலூர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் செயல்படுத்தப்படும்.

4. பாதிக்கப்பட்ட மீனவ மகளிரின் மாற்று வாழ்வாதாரத் திட்டமாக கடற்பாசி வளர்த்தலை ஊக்குவிக்கும் பொருட்டு 72 மீனவ மகளிர் குழுக்களுக்கு 1,200 கடற்பாசி வளர்ப்பு மிதவைகள் வழங்கப்படும்.
5. புதுக்கோட்டை மற்றும் கடலூர் மாவட்டங்களின் 6 மீனவ மகளிர் குழுக்களுக்கு மெல்லுடலிகள் வளர்ப்பிற்கென 144 மிதவைகள் வழங்கப்படும்.

7.7.4. "ஓகி" புயலினால் பாதிக்கப்பட்டோர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரண உதவிகள்

ஓகி புயலின் போது இறந்த 27 மீனவர்களின் குடும்பங்கள் மற்றும் காணாமல் போய் இறந்ததாகக் கருதப்பட்ட 177 மீனவர்களின் குடும்பங்களுக்கு தமிழக அரசால் ரூ.40.08 கோடி நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. ஓகி புயலினால் சேதமடைந்த மீன்பிடிப் படகுகளுக்கு நிவாரண உதவியாக ரூ.8.44 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

ஓகி புயலினால் உயிரிழந்த / காணாமல் போன மீனவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வாரிசுதாரருக்கு, அவரவர் கல்வித் தகுதியின்

அடிப்படையில், 159 மீனவர்களின் வாரிசுதாரர்களுக்கு அரசுப் பணி வழங்கப்பட்டுள்ளது.

ஒகி புயலினால் காணாமல் போன 17 மீன்பிடிப் படகுகளை இழந்த குடும்பங்களுக்கு 50 விழுக்காடு மானியத்தில் ரூ. 60 லட்சம் மதிப்பிலான சூரை மீன்பிடித் தூண்டில் மற்றும் செவுள் வலை விசைப்படகுகள் கட்டும் திட்டத்தின் கீழ் படகுகள் கட்டுவதற்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

7.7.5. கடலோர பேரிடர் அபாயக் குறைப்புத் திட்டம் (CDRRP)

மீன்பிடி தொழிலும் மீனவ சமுதாயமும் இயற்கை இடர்பாடுகள், பருவகால மாற்றம் மற்றும் அழிந்துவரும் கடல் சுற்றுப்புற சூழல் ஆகியவற்றால் அதிக பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. கடல் மீன்வளத்தை மேம்படுத்தவும், மீனவர்கள் பாதுகாப்பை உறுதி செய்யவும், "கடலோர பேரிடர் அபாய குறைப்புத் திட்டத்தினை **(CDRRP)"** செயல்படுத்திட உலக வங்கி ரூ.325.91 கோடி நிதி ஒப்பளித்துள்ளது.

அ. மீன்வளத்துறை உட்கட்டமைப்பு

அவசர கால சுனாமி மறுசீரமைப்பு கட்டமைப்பு பணிகள் முடிவடைந்துள்ளன. புதிதாக மேற்கொள்ளப்பட்ட பணிகளில் ரூ.60 கோடி செலவில் மல்லிப்பட்டிணம் மீன்பிடித் துறைமுகம் மற்றும் புன்னக்காயல் மீன் இறங்குதளம் ரூ.18 கோடி செலவில் கட்டிமுடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

ஆ. நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை திட்டம் - II (FIMSUL-II)

உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் நிலைத்த வாழ்வாதாரத்திற்கான மீன்வள மேலாண்மை திட்டம் - II மூலம் மீனவர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காக தொழில் மேம்பாட்டுப் பயிற்சிகள், திறன் மற்றும் தொழில் மேம்பாட்டுப் பயிற்சிகள், கூண்டுகளில் மீன்வளர்த்தல், ஆளி மற்றும் சிப்பி வளர்ப்பு, கடற்பாசி வளர்த்தல் போன்ற மாற்று வாழ்வாதாரத்திற்கான உதவிகள் வழங்குதல், மீன்பிடிக்கும் போது கடலில் ஏற்படும் ஆபத்துக் காலங்களில் தொடர்பு கொள்ள ஏதுவாக பாரம்பரிய மீன்பிடிக் கலன்கள் மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட

படகுகளுக்கு கம்பியில்லா தொலைத்தொடர்பு கருவிகள் வழங்குதல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது.

கடல் மீனவ மகளிரின் சமூக நிலையை மேம்படுத்திடும்பொருட்டு கடற்பாசி உப பொருட்கள் தயாரிக்கும் திட்டம் ரூ.3.93 கோடி செலவில் மத்திய உப்பு மற்றும் கடல் வேதியல் ஆராய்ச்சி நிலையத்தின் (CSMCRI) தொழில்நுட்ப உதவியுடன் இராமநாதரபுரம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் பகுதியில் கடலில் மிதவைக் கூடுகள் அமைத்து மீன்வளர்ப்பில் ஈடுபடும் மீனவர்களுக்கு தொடர்ந்து மீன்குஞ்சுகள் வழங்கிடும்பொருட்டு ரூ. 1.07 கோடி செலவில் கடல் மீன்குஞ்சு வளர்ப்பு நிலையம் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

கடல் மீன்வளத்தை சிறந்த முறையில் நிர்வகிக்க கிராம, மாவட்ட மற்றும் மண்டல அளவில் கூட்டு மேலாண்மைக் குழுக்கள் 13 கடலோர மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளது. மாநில அளவிலும் கூட்டு மேலாண்மை குழு அமைக்கப்பட்டுள்ளது. உள்ளூர் மீனவர்களையும் அதன் பங்கு உரிமையாளர்களையும்

ஒருங்கிணைத்து, மீன்பிடி துறைமுகங்கள்/மீன் இறங்கு தள மேலாண்மைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. அன்றாடம் சுகாதாரமான முறையில் மீன்பிடித் துறைமுகங்கள்/மீன் இறங்கு தளங்களை பராமரிக்கத் தேவையான நிதி ஆதாரங்களைப் பெருக்கி பராமரிப்பதன் மூலம் இக்குழுக்கள் சுகாதாரத்தையும், மீனின் தரத்தினையும் உறுதி செய்கிறது.

7.8 தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாத்தல்

7.8.1 கச்சத் தீவினை திரும்ப பெறுதல் - பிரச்சனைகள் மற்றும் தற்போதைய நிலை

கச்சத்தீவினை இந்தியாவிற்கு மீளப்பெறுதல் மற்றும் பாக் வளைகுடா பகுதியில் பாரம்பரிய மீன்பிடிப்பில் ஈடுபடும் தமிழக மீனவர்களின் உரிமையை நிலைநாட்டுதல் ஆகியவற்றை தமிழக அரசு முதன்மையான குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இவை தவிரவும், மறைந்த முன்னாள் தமிழக முதலமைச்சர் டாக்டர். ஜெ ஜெயலலிதா அவர்களால் தனிப்பட்ட முறையில் 2008 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தில் கச்சத்தீவினை மீட்பது தொடர்பாக

தொடரப்பட்ட வழக்கு எண் W.P. No. 561/2008 இல், தமிழக அரசின் வருவாய்த் துறையினை ஒரு வாதியாக இணைத்துக் கொள்ள உரிய பிரேரணை சமர்ப்பித்திட, கடந்த 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் தமிழக சட்டமன்ற கூட்டத்தொடரில் ஏகமனதாக தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இத்தீர்மானத்தின்படி, மேற்காணும் வழக்கில், வருவாய்த் துறையினையும் வாதியாக இணைத்துக் கொள்ள, தமிழக வருவாய்த் துறையினரால் இணைப்பு பிரேரணை ஒன்று உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கச்சத்தீவை திரும்பப் பெற மத்திய அரசினை வலியுறுத்தி 3.5.2013 அன்று தமிழக சட்டமன்ற கூட்டத் தொடரில் தமிழக அரசு ஒரு தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றியது. மேலும், கச்சத்தீவினை திரும்பப் பெறவும், பாரம்பரிய மீன்பிடிப்பகுதிகளில் மீன்பிடிக்கும் உரிமையை இலங்கை அரசு தடுக்காமல் இருப்பதற்கும், தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுக்க வேண்டும் என்று கடந்த 5.12.2014 அன்று தமிழக சட்டமன்ற கூட்டத்தில் தமிழக அரசால் மேலும் ஒரு தீர்மானம் ஏகமனதாக இயற்றப்பட்டுள்ளது.

7.8.2 இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் துன்புறுத்தப்படுவதை தடுக்கவும், கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடிப் படகுகளை விடுவிக்கவும் அரசால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

தமிழ்நாட்டு மீனவர்கள் தொன்றுதொட்டு பாரம்பரியமாக அனுபவித்து வரும் மீன்பிடி உரிமையை நிலைநாட்டிப் பாதுகாத்திட தமிழ்நாடு அரசு உறுதியுடன் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டு மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரின் தொடர் தாக்குதல் நிகழ்வுகள், துன்புறுத்துதல், சிறைபிடித்தல் மற்றும் நீண்ட நாட்களாக நமது அப்பாவி மீனவர்களை இலங்கையில் சிறைவைத்தல் ஆகிய நிகழ்வுகளை தவிர்ப்பதில் ஆழ்ந்த அக்கறை கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இதுவரை பலமுறை கடிதங்கள் வாயிலாக இந்நிகழ்வுகளை மாண்புமிகு பாரதப்பிரதமர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று தூதரக ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி வருகிறார்கள்.

மேலும், மத்திய அரசு தனது அனைத்து விதமான தூதரக ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொண்டு,

கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை உடனடியாக விடுவித்திடுவதை உறுதி செய்யவும், மீண்டும் அத்தகைய நிகழ்வுகள் நடப்பதைத் தடுத்திடவும், தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

2019-20 ஆம் ஆண்டில் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த 215 மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டு, தமிழகம் அழைத்து வரப்பட்டனர். மேலும், மீட்கும் நிலையில் இருந்த 36 மீன்பிடிப் படகுகள் மீட்டு வரப்பட்டன. மீதமுள்ள 14 மீனவர்கள் மற்றும் 59 மீன்பிடிப் படகுகளை விடுவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

7.8.3 மீனவர் அளவிலான பேச்சுவார்த்தை

பாக் வளைகுடாப் பகுதியில் மீன் பிடிப்பதில் ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்க்கும் பொருட்டு, இந்திய மற்றும் இலங்கை மீனவர்களுக்கிடையே கலந்துரையாடலை மேற்கொள்வதென்றும், அச்சமயம் இருதரப்பினரும் ஒப்புக்கொண்ட விடயங்களை மேல்

நடவடிக்கைக்காக கூட்டுப் பணிக்குழு முன்பு வைப்பது எனவும், ஜனவரி 2012ல் நடைபெற்ற இருநாட்டு அமைச்சகங்களுக்கிடையேயான கூட்டம் மற்றும் நான்காவது கூட்டுப் பணிக்குழு கூட்டங்களில் கொள்கை அளவில் ஒப்புக்கொள்ளப்பட்டது. தமிழ்நாட்டு மீனவ சமுதாயத்தின் விருப்பம் மற்றும் உணர்வுகளைக் கருத்திற்கொண்டு, பாக் வளைகுடா பகுதியில் மீன்பிடிக்கும்போது ஒவ்வொரு நாளும் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண இலங்கை மீனவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திடவும், இருநாட்டு மீனவர் சமுதாயங்களுக்கிடையே நேரடியாக கருத்துக்களை பரிமாறுவதற்கான அவசியத்தின் பொருட்டும், தமிழ்நாடு அரசால் மீனவர் அளவிலான நான்கு சுற்று பேச்சுவார்த்தைகள் நடத்த வழிவகை செய்யப்பட்டது.

7.8.4 மீன்வளத்தின் மீதான இந்திய இலங்கை கூட்டுப் பணிக்குழு

இதுவரை 3 சுற்று இந்திய இலங்கை கூட்டுப் பணிக்குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இக்கூட்டங்களின் போது இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழ்நாடு மீனவர்களையும், முடக்கி வைக்கப்பட்டுள்ள அவர்களது மீன்பிடிப் படகுகளையும்

மீன்பிடி உபகரணங்களோடு விடுவித்திடவும் வலியுறுத்தப்பட்டது.

7.9 மீன்வள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

அரசு பல்வேறு நிதி ஆதாரங்களின் உதவி பெற்று உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. மீன்களை சுகாதாரமான முறையில் கையாண்டு, நுகர்வோருக்கு தரமான மீன்களை வழங்குவதற்கான பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஏற்றுமதி மதிப்பு உயர்வதோடு மீனவர்களுக்கு அதிக வருவாய் ஈட்டிடவும் உதவுகிறது.

7.9.1. நாகப்பட்டினம் மாவட்டம் பூம்புகாரில் மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

நாகப்பட்டினம் மாவட்டம் பூம்புகாரில், மீன்பிடித் துறைமுகம் மத்திய அரசின் பங்களிப்புடன் ரூ.148 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. தமிழக அரசு ரூ.178 கோடி மதிப்பீட்டிற்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கியதுடன், ரூ. 30 கோடியினை விடுவிக்க உள்ளது. தெற்கு பிரதான அலைதடுப்புச் சுவர் 1100 மீட்டர் நீளத்திலும், வடக்கு அலைதடுப்புச் சுவர் 390

மீட்டர் நீளத்திலும் மற்றும் படகு அணையும் தள கட்டுமானப் பணிகள் உட்பட அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இத்துறைமுகத்தினை 7.3.2020 அன்று மீனவர்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

7.9.2. இராமநாதபுரம் மாவட்டம் மூக்கையூரில் மீன்பிடித் துறைமுகம் கட்டுதல்

இராமநாதபுரம் மாவட்டம் மூக்கையூர் கிராமத்தில் ரூ.113.90 கோடி மதிப்பீட்டில் மத்திய மற்றும் மாநில அரசின் பங்களிப்புடன் மீன்பிடித் துறைமுகம் கட்டப்பட்டுள்ளது. தமிழக அரசு ரூ.128.70 கோடி மதிப்பீட்டிற்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கியதுடன், ரூ. 14.80 கோடியினை விடுவித்துள்ளது. பாக்வளைகுடாப் பகுதியில் உள்ள மீன்பிடி படகுகளின் நெருக்கத்தைக் குறைக்கும் நோக்கத்துடன், இந்த துறைமுகம் திட்டமிடப்பட்டது.

இத்துறைமுகத்தில், அலைத் தடுப்புச் சுவர், படகு அணையும் தளம், மீன் ஏலக்கூடம், தடுப்புச் சுவர், மீன் உலர்தளம், வலைபின்னும் கூடம் மற்றும் இதர கட்டுமான வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளது. மூக்கையூர் மீன்பிடித் துறைமுகம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 4.3.2019 அன்று மீனவர்களின்

பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டு, தற்போது உபயோகத்தில் உள்ளது.

7.9.3. நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடியில் மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கம்பாடியில் ரூ.120 கோடியில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு மத்திய அரசின், மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் (FIDF) மாநில அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. வடக்கு அலைத் தடுப்புச்சுவர் 330மீ நீளம், தெற்கு அலைத்தடுப்புச்சுவர் 1,060மீ நீளம் மற்றும் பிடிக்கப்படும் மீன்களை தரமான முறையில் கையாள்வதற்கான இதர கரையோர வசதிகளும் அமையும் விதத்தில் இம்மீன்பிடித்துறைமுகம் வடிவமைக்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்திலுள்ளது.

7.9.4. திருவள்ளூர் மாவட்டம் திருவொற்றியூர் குப்பத்தில் சூரை மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் குப்பத்தில் சூரை மீன்பிடித் துறைமுகம் ரூ.200 கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்கான விரிவான திட்டக்

கருத்துரு தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின், மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் (FIDF) மாநில அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 510மீ நீளம் வடக்கு அலைத் தடுப்புச்சுவர், 849மீ நீளம் தெற்கு அலைத்தடுப்புச்சுவர் மற்றும் சூரை மீன்களை சுகாதாரமான முறையில் கையாள்வதற்கான இதர கரையோர வசதிகளும் இம்மீன்பிடி துறைமுகத்தில் ஏற்படுத்தப்பட்டு பணிகள் துவக்கப்பட்டுள்ளது.

7.9.5. நாகப்பட்டினம் மாவட்டம் வெள்ளப்பள்ளத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

நாகப்பட்டினம் மாவட்டம் வெள்ளப்பள்ளம் கிராமத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைத்திட தொழில்நுட்ப பொருளாதார சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டதன் அடிப்படையில் ரூ.100 கோடியில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் (FIDF) மாநில அரசால் நிர்வாக ஒப்புதல்

வழங்கப்பட்டுள்ளது. ஆரம்பகட்டப் பணிகள் நடைபெற்று வருகிறது.

7.9.6. கடலூர் மாவட்டம் முதுநகர் மீன்பிடித் துறைமுகத்தினை புனரமைத்தல்.

கடலூர் மாவட்டம் முதுநகரில் மீன்பிடித்துறைமுகத்தினை புனரமைக்கும் பணிக்காக ரூ.100 கோடி மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் (FIDF) மாநில அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

7.9.7. மீன் இறங்குதளங்களை மேம்படுத்துதல் மற்றும் நேர்கல்சுவர்கள் நிலைப்படுத்துதல்

இராமநாதபுரம் மாவட்டம் குந்துக்கல் கிராமத்தில் ரூ.70 கோடி மதிப்பீட்டில், நபார்டு மற்றும் மத்திய அரசு நிதியுதவியுடன் மீன் இறங்குதளம் அமைப்பதற்கு அரசால் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 90 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டு, மேற்கொண்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், தூத்துக்குடி மாவட்டம் வேம்பார், நாகப்பட்டினம் மாவட்டம் கோடியக்கரை, சின்னங்குடி, காமேஸ்வரம் மற்றும் புஷ்பவனம், கடலூர் மாவட்டம் தாழங்குடா, செங்கல்பட்டு மாவட்டம் சூலேரிக்காட்டுக்குப்பம், புதுக்கோட்டை மாவட்டம் கட்டுமாவடி, பொன்னகரம் ஆகிய இடங்களில் நபார்டு (NABARD-RIDF) வங்கி நிதியுதவியுடன் மொத்தம் ரூ.29.50 கோடி மதிப்பீட்டில் மீன்இறங்குதளங்கள் அமைக்க அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அனைத்து மீன்பிடி இறங்குதள கட்டுமான பணிகளும் முடிவு பெற்றுள்ளது.

மேலும், கன்னியாகுமரி மாவட்டம் குறும்பனையில், ரூ.11 கோடி மதிப்பீட்டில் மீன் இறங்குதளம் அமைப்பதற்கும், கடியபட்டினத்தில் ரூ.4 கோடி செலவில் கடலரிப்பு தடுப்புச் சுவர்களை நிலைப்படுத்துவதற்கும், பலப்படுத்துவதற்கும், அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இவ்விரண்டு பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.

7.9.8. சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் மீன் இறங்குதளங்கள் அமைத்தல்

தமிழகத்தில் பல்வேறு கடலோர கிராமங்களில் பத்து புதிய மீன் இறங்குதளங்கள் அமைக்க, அரசு ரூ.49.97 கோடி ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றில் 9 இடங்களில் மீன் இறங்குதளங்கள் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. திருவள்ளூர் மாவட்டம் அண்ணாமலைச்சேரி மீன் இறங்குதள கட்டுமானப்பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளது.

7.9.9. கன்னியாகுமரி மாவட்டத்தில் மூன்று மீன் இறங்குதளங்கள் அமைத்தல்

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பொழிக்கரை, கேசவன்புத்தன்துறை மற்றும் பள்ளம்துறை ஆகிய மூன்று இடங்களில் மீனவர்களின் தேவைகளை பூர்த்தி செய்திடும் விதமாக, தலா ரூ.4 கோடி மதிப்பீட்டில் மொத்தம் ரூ.12 கோடியில் மீன்பிடி இறங்கு தளங்கள் அமைப்பதற்கு அரசின் நிர்வாக மற்றும் நிதி ஒப்புதல் வழங்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டுள்ளது.

7.9.10. கன்னியாகுமரி மாவட்டம் நீரோடி, மார்த்தாண்டம் துறை, வள்ளவிளை ஆகிய இடங்களில் நேர்கல் அலை தடுப்பு சுவர்கள் கட்டுதல்

கன்னியாகுமரி மாவட்டம் நீரோடி, மார்த்தாண்டம்துறை, மற்றும் வள்ளவிளை ஆகிய கடற்கரை கிராமங்களில் கடல் அரிப்பினைத் தடுப்பதற்காக குறைந்த நீள நேர்கல் அலை தடுப்பு சுவர்கள் (Short Groynes) கட்டும் பணிக்கு ரூ.116 கோடி தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. **அ**னைத்து பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளது.

7.9.11. திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு ஏரி முகத்துவாரத்தினை தற்காலிகமாக தூர்வாரும் இயந்திரம் கொண்டு திறத்தல்

பழவேற்காடு ஏரியை சுற்றியுள்ள 25 மீனவ கிராமங்களை சார்ந்த மீனவர்கள் கடலுக்கு சென்று மீன்பிடிப்பினை மேற்கொள்ள மிகுந்த சிரமத்திற்கு உள்ளாவதை கருத்தில் கொண்டு பழவேற்காடு ஏரி முகத்துவாரத்தினை தூர்வாரும் இயந்திரம் கொண்டு தற்காலிகமாக ஆழப்படுத்திட அரசால் ரூ.1.5 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டு, தூர்வாரும் பணிகள் முடிக்கப்பட்டு

பாரம்பரிய படகுகள் சென்றுவர ஏதுவாக முகத்துவாரம் திறக்கப்பட்டுள்ளது. மீனவர்கள் கடலுக்குச் சென்று மீன்பிடிக்க மிகவும் உபயோகமாக உள்ளது.

7.9.12. "ஜியோ சிந்தடிக் குழாய்கள்" (Geo Synthetic Tubes) மூலம் கடலரிப்பினை தடுக்கும் முன்னோடித் திட்டம்

தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனம் (NIOT) கடலரிப்பினைத் தடுப்பதற்கு மணல் நிரப்பப்பட்ட "ஜியோ சிந்தடிக் குழாய்களை" உருவாக்கியுள்ளது. இந்நிறுவனம் மூலம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட இத்தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி விழுப்புரம் மாவட்டம் பொம்மையார்பாளையம் கிராமத்தில் கடல் அரிப்பினைத் தடுத்திட ரூ.19 கோடி மதிப்பீட்டில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் பணிகள் மேற்கொள்ளப்படும். நபார்டு திட்ட ஒப்புதல் குழு இத்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

7.9.13. விழுப்புரம் மாவட்டம் அழகன்குப்பம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் ஆலம்பரைகுப்பம் ஆகிய இடங்களில் கழுவேலி ஆற்றின் இரண்டு கரைகளிலும் மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்

விழுப்புரம் மாவட்டம் அழகன்குப்பம் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் ஆலம்பரைகுப்பம் ஆகிய இடங்களில் கழுவேலி ஆற்றின் இரண்டு கரைகளிலும் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்காக மத்திய அரசின் மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ் (FIDF) அரசால் ரூ.235 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்கான ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

7.9.14. நாகப்பட்டினம் மாவட்டம் ஆற்காட்டுத்துறை கிராமத்தில் புதிய மீன்பிடி துறைமுகம் அமைத்தல்.

நாகப்பட்டினம் மாவட்டம் ஆற்காட்டுத்துறை கிராமத்தில் புதிய மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்காக மத்திய அரசின் மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் (FIDF) அரசால் ரூ.150 கோடிக்கு நிர்வாக

ஒப்புதல் வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

7.9.15. நாகப்பட்டினம் மாவட்டம் செருதூர் கிராமத்தில் வெள்ளையாறு ஆற்று முகத்துவாரம் தூர்வாரும் பணிகள்.

நாகப்பட்டினம் மாவட்டம் வெள்ளையாறு ஆற்று முகத்துவாரத்தில் ஒவ்வொரு வருடமும் மணல் திட்டு உண்டாகி முகத்துவாரம் அடைபடுவதால் மீனவர்கள் ஆற்றுமுகத்துவாரத்திலிருந்து கடலுக்குள் படகுகளை இயக்குவதற்கு மிகவும் சிரமம் ஏற்படுகிறது. எனவே, நாகப்பட்டினம் மாவட்டம் செருதூர் கிராமத்தில் வெள்ளையாறு ஆற்று முகத்துவாரத்தினை தூர்வாரும் பணிக்காக மாநில நிதித்திட்டத்தின் கீழ் 2019-20 ஆம் ஆண்டிற்கு, அரசு ரூ.4 கோடி நிர்வாக ஒப்புதல் வழங்கி பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

7.9.16. கன்னியாகுமரி மாவட்டம் சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகத்தில் உட்பகுதி மற்றும் முகத்துவாரத்தில் தூர்வாரும் பணிகள்.

சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகத்தினை பயன்படுத்தி ஏறத்தாழ 15,000 மீனவர்கள்

நேரடியாகவும் மறைமுகமாகவும் பயன் அடைந்து வருகின்றனர்.

ஓகி புயலின் போது கடுமையான அலைகளினால் மணல் சேர்ந்ததன் காரணமாக துறைமுகத்தின் உட்பகுதி மற்றும் துறைமுகத்தின் முகத்துவார நுழைவுப்பகுதியில் ஆழம் குறைந்ததால் படகுகள் துறைமுக பகுதியிலிருந்து கடலுக்குச் சென்றுவருவதற்கு சிரமம் ஏற்படுவதுடன், படகுகளுக்கு சேதமும் ஏற்பட்டுள்ளது. எனவே, சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகத்தின் உட்பகுதி மற்றும் முகத்துவாரத்தில் துறைமுகத்தின் தூர்வாரும் பணிக்காக மாநில நிதி திட்டத்தின் கீழ் 2019-20 ஆம் ஆண்டில் ரூ.3.2 கோடி அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

7.9.17. நான்கு மீன்பிடித் துறைமுகங்களில் மீன்களை சுகாதாரமான முறையில் கையாள்வதற்கு மீன் ஏலம் விடும் வசதிகள் மற்றும் மீன் பதப்படுத்தும் மையங்கள் ஏற்படுத்துதல்

வருடம்தோறும் கடல் மீன் உற்பத்தி அதிகரிப்பு மற்றும் கையாளுதல் காரணமாகவும் மற்றும் மீன்வள

தேவைகளை கவனத்தில் கொண்டும், மீன்களை ஏற்றுமதி தரத்திற்கேற்ற சுகாதாரமான முறையில் கையாளுவதற்கும் நாகப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்தில் ரூ.1.14 கோடி மதிப்பீட்டிலும், மூக்கையூர் மீன்பிடி துறைமுகத்தில் ரூ.1.05 கோடி மதிப்பீட்டிலும், குளச்சல் மீன்பிடி துறைமுகத்தில் ரூ.0.79 கோடி மதிப்பீட்டிலும் சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தில் ரூ.0.31 கோடி மதிப்பீட்டிலும் குளிரூட்டும் அறைகளுடன் கூடிய முன்பதப்படுத்தும் கூடங்கள் மொத்தம் ரூ.3.29 கோடி மதிப்பீடில் மாநில நிதித்திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்வதற்கு தமிழக அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டப்பணிகள் விரைவில் துவக்கப்படவுள்ளது.

7.9.18. இராமநாதபுரம் மாவட்டம் ஆற்றங்கரை கிராமத்திலுள்ள முகத்துவாரத்தை ஆழப்படுத்தி திறக்கும் பணி.

தற்பொழுதுள்ள வறட்சியாலும் மற்றும் ஆற்றின் நீரோட்டம் இல்லாமையாலும், இராமநாதபுரம் மாவட்டம் ஆற்றங்கரை கிராமத்திலுள்ள மீன்பிடிக் கால்வாய் மண் படிந்து முகத்துவாரம் மூடப்பட்டுள்ளது, அதனால்

மீனவர்கள் கடலுக்குள் செல்ல இயலாத நிலை உள்ளது. இந்த நிலையை சரி செய்ய ரூ.72.69 இலட்சத்திற்கு இராமநாதபுரம் மாவட்டம் ஆற்றங்கரை கிராமத்திலுள்ள முகத்துவாரத்தை ஆழப்படுத்தி திறக்கும் பணிக்கு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

7.9.19. தூத்துக்குடி மாவட்டம் பெரியதாழை மீன்இறங்குதளத்தில் கடல் அரிப்பை தடுக்க நேர்கல் சுவர் மற்றும் மீன்இறங்குதள வசதிகள் அமைத்தல்.

தூத்துக்குடி மாவட்டம் பெரியதாழை மீன்இறங்குதளத்தில் கடல் அரிப்பை தடுக்க நேர்கல் சுவர் மற்றும் மீன்இறங்குதள வசதிகள் அமைக்க நபார்டு (NABARD-RIDF) திட்டத்தின் கீழ் ரூ.29.89 கோடிக்கு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

7.9.20. நாகப்பட்டினம் மாவட்டம் நாகூர் கிராமத்தில் மீன்இறங்குதளத்தை மேம்படுத்த வடக்கு அலைத்தடுப்புச் சுவர் அமைத்து முகத்துவாரத்தை ஆழப்படுத்தி, மீன் இறங்குதளத்தை மேம்படுத்துதல்.

நாகப்பட்டினம் மாவட்டம் நாகூர் கிராமத்தில் மீன்இறங்குதளத்தை மேம்படுத்தவும், வடக்கு

அலைத்தடுப்புச் சுவர் அமைக்கவும் மற்றும் முகத்துவாரத்தை ஆழப்படுத்தவும் நபார்டு (NABARD-RIDF) திட்டத்தின் கீழ் ரூ.19.87 கோடிக்கு அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

7.9.21. கன்னியாகுமரி மாவட்டம் புத்தன்துறை கிராமத்தில் மீன்இறங்குதளம் அமைத்தல்.

கன்னியாகுமரி மாவட்டம் புத்தன்துறை கிராமத்தில் மீன்இறங்குதளம் அமைக்கும் பணிக்கு நபார்டு (NABARD-RIDF) திட்டத்தின் கீழ் ரூ.4.32 கோடிக்கு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

7.9.22. கன்னியாகுமரி மாவட்டம் தேங்காப்பட்டினம் மீன்பிடி துறைமுகத்திலுள்ள இரையுமன்துறை பகுதியில் அணுகுசாலை அமைத்தல்.

கன்னியாகுமரி மாவட்டம் தேங்காப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்திலுள்ள இரையுமன்துறை பகுதியில் அணுகுசாலை அமைக்கும் பணிக்கு நபார்டு (NABARD-RIDF) திட்டத்தின் கீழ் ரூ.1.71 கோடிக்கு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

7.9.23. இராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் கிராமத்தில் கடலரிப்பை தடுக்க தடுப்புச்சுவர் அமைக்கும் பணி.

இராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் கிராமத்தில் கடலரிப்பை தடுக்க தடுப்புச்சுவர் அமைக்கும் பணிக்கு நபார்டு (NABARD-RIDF) திட்டத்தின் கீழ் ரூ.1.87 கோடிக்கு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

7.9.24. விருதுநகர் மாவட்டம் பிளவக்கல் கிராமத்தில் மீன்விதை பண்ணையை மேம்படுத்துதல்.

விருதுநகர் மாவட்டம் பிளவக்கல் கிராமத்தில் மீன்விதை பண்ணையை மேம்படுத்துதல் பணிக்கு நபார்டு (NABARD-RIDF) திட்டத்தின் கீழ் ரூ.1.81 கோடிக்கு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

7.9.25. காஞ்சிபுரம் மாவட்டம் மணிமங்கலம் கிராமத்தில் உள்ள மீன்பண்ணையை மேம்படுத்துதல் மற்றும் அலங்கார மீன்வளர்ப்புப் பயிற்சி மையம் கட்டுதல்

காஞ்சிபுரம் மாவட்டம் மணிமங்கலம் கிராமத்தில் உள்ள மீன்பண்ணையை மேம்படுத்துதல் மற்றும் அலங்கார மீன்வளர்ப்பு பயிற்சி மையம் கட்டுதல்

பணிக்கு நபார்டு (NABARD-RIDF) திட்டத்தின் கீழ் ரூ.2.85 கோடிக்கு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

7.9.26. இராமநாதபுரம் மாவட்டம் களிமண்குண்டு கிராமத்தில் உட்கட்டமைப்பு வசதி செய்தல்.

இராமநாதபுரம் மாவட்டம் களிமண்குண்டு கிராமத்தில் ஏலக்கூடம், வலைபின்னும் கூடம் மற்றும் சிமெண்ட் சாலைகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் செய்ய ரூ.1.63 கோடிக்கு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதனால் மீனவர்கள் சுகாதாரமான முறையில் மீன்களைக் கையாண்டு எளிதில் எடுத்து சென்று விற்க ஏதுவாகும். இத்திட்டத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

7.9.27. நாகப்பட்டினம் மாவட்டம் பழையாறு மீன்பிடி துறைமுகத்தில் மீன்உலர்தளம் கட்டுதல்.

நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில் சுகாதாரமான முறையில் மீன்களை உலர்த்த ஏதுவாக, மீன்உலர்தளம் கட்ட ரூ.1.17 கோடிக்கு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

7.9.28. மீனவர்களுக்கான வீட்டு வசதி திட்டம்

மத்திய அரசின் நீலப்புரட்சி, "பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா"(PMAY) திட்டத்தின் கீழ் கடல் மற்றும் உள்நாட்டு மீனவர்களுக்கு ரூ.85 கோடியில் 5,000 வீடுகள் கட்டி வழங்கிட அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் இதுவரை 3098 மீனவர்கள் பயனடைந்துள்ளனர். மீனவர்களுக்கு வீடு கட்டி வழங்கப்படும் இத்திட்டம் 2020-21 ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

7.9.29. இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் மீன்துறை உதவிஇயக்குநர் அலுவலகத்திற்காக புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல்.

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்திற்காக புதிய அலுவலகம் கட்டும் பணிக்கென ரூ.0.78 கோடி மாநில நிதித்திட்டத்தின் கீழ் 2019-20 ஆம் ஆண்டு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் இறுதியாக்கம் செய்யப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

7.9.30. மதுரை மீன்துறை துணை இயக்குநர் மற்றும் மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்திற்காக புதிய ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் கட்டுதல்.

மதுரை மீன்துறை துணை இயக்குநர் மற்றும் மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்திற்காக புதிய ஒருங்கிணைந்த அலுவலகக் கட்டடம் கட்டும் பணிக்கென ரூ.1.22 கோடி மாநில நிதித் திட்டத்தின் கீழ் 2019-20ஆம் ஆண்டு அரசால் நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் இறுதியாக்கம் செய்யப்பட்டு, பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

7.10. உள்நாட்டு மீன்வள மேம்பாடு

நீர்வாழ் உயிரின வளர்ப்பு வேலைவாய்ப்பினை வழங்குவதோடு, வளர்ந்துவரும் மக்கள் தொகையின் ஊட்டச்சத்து தேவையினைப் பூர்த்தி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. உள்நாட்டு மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பின் முதன்மை நோக்கங்களாவன:

- மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தியினை அதிகரிக்கச் செய்தல்

- மீன்குஞ்சு உற்பத்தியினை அதிகரித்து பெருகிவரும் மீன்குஞ்சுத் தேவையினை பூர்த்தி செய்தல்
- மீன்வளர்ப்போருக்கு தரமான மீன்குஞ்சுகளை விநியோகித்தல்
- மீன்வளர்ப்புப் பரப்பினை அதிகரித்தல்
- உள்நாட்டு நீர்வள ஆதாரங்களின் அளவு மற்றும் தரம் சார்ந்த மதிப்பீட்டினை மேற்கொண்டு அவற்றின் முழு திறனை கண்டறிதல்
- உள்நாட்டு நீர்நிலைகளின் உற்பத்தியினை அதிகரித்தல் மற்றும் மீன் உற்பத்தியினை மும்மடங்காக்குதல்
- வளம்மிகுந்த மற்றும் முறையாக பயன்படுத்தப்படாத வளங்களை முறையாக பயன்படுத்தி உணவு உற்பத்தி மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதிசெய்தல்
- ஊரகப் பகுதிகளில் மீன் மற்றும் மதிப்புகூட்டிய மீன் பொருட்கள் விற்பனை, வணிகம் மற்றும்

ஏற்றுமதியினை ஊக்குவித்து கூடுதல் வேலைவாய்ப்பினை உருவாக்குதல்

- பள்ளிகளில் மீன்வளக்கல்வி தொடர்பான திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை அளித்தல்
- மீன்வளத்தினை பாதுகாத்தல், மேலாண்மை செய்தல் மற்றும் மேம்படுத்திட சட்டம், விதிகள் மற்றும் விதிமுறைகளை முறையாக செயல்படுத்துதல், மீன்பாசி குத்தகை கொள்கையினை ஏற்படுத்துதல் மேலும் வெளிநாட்டு மீன் இனங்களை சட்டவிரோதமாக கொண்டுவருவதைத் தடை செய்தல்
- உணவு மற்றும் ஊட்டசத்து பாதுகாப்பினை ஏற்படுத்தி ஆண்டுக்கு தரமான மீன் உண்ணும் அளவினை அதிகப்படுத்துதல்.

7.10.1. உள்நாட்டு மீன்வளக் கொள்கை

ஊரக பகுதி மக்களுக்கு புரதசத்து மிக்க உணவினை வழங்கிடவும், ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்திடவும், தமிழ்நாடு உள்நாட்டு மீன்வளக் கொள்கை தயார் செய்யப்பட்டு அரசின் பரிசீலனையில்

உள்ளது. இதன்மூலம் தமிழ்நாட்டில் உள்நாட்டு நீர்வள ஆதாரங்களை முறையாகப் பராமரித்து, பாதுகாத்து நிலையான வாழ்வாதாரத்தினை வழங்கவும், வேலை வாய்ப்பினை அதிகரிக்கவும், உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதி செய்யவும், பொருளாதார மேம்பாட்டினை ஏற்படுத்தவும் வியூகம் வகுக்கப்பட்டுள்ளது.

7.10.2. உள்நாட்டு மீன்வளத்தில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு முயற்சிகள்

தமிழ்நாட்டில் 3.83 இலட்சம் **ஹெக்டேர்** பரப்பளவிலான உள்நாட்டு நீர்நிலைகள் மீன்வளர்ப்பிற்கு உகந்ததாக உள்ளன. உள்நாட்டு நீர்நிலைகள் பெரும்பாலும் பருவமழையினை நம்பி உள்ளன. மழை குறைபாடு, நீர்நிலைகளில் குறைவான நாட்கள் நீர் இருத்தல், நீர் இருக்கும் காலம் மற்றும் மீன்களின் இனவிருத்தி கால வேறுபாடு, குறைந்த விலையில் மீன் உணவு கிடைக்கப்பெறாமை மற்றும் தரமான மீன் உணவு கிடைக்கப்பெறாமை ஆகியவை மாநிலத்தின் உள்நாட்டு மீன்உற்பத்தியினை பாதிக்கின்றன. எனவே, இக்குறைபாடுகளை களைந்திட தமிழ்நாடு அரசு

மீன்வளத்துறையின் மூலம் பின்வரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

- உள்நாட்டு மீன் உற்பத்தியினை அதிகரித்திட பாசனக் குளங்களில் மிதவை கூண்டுகளில் மீன்வளர்ப்பு மற்றும் கூண்டுகளில் மீன்குஞ்சு வளர்ப்பு செயல்முறை விளக்கம் செயல்படுத்தப்படுகிறது.
- தமிழ்நாட்டில் வளம்மிக்க மற்றும் மீன்வளர்ப்பிற்கு உகந்த பல்வேறு துறைகளைச் சார்ந்த நீர் நிலைகள் தேர்வு செய்யப்பட்டு, மீன்வளத்துறையின் மூலம் பல்வேறு திட்டங்களின் கீழ் மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு வருகிறது.
- மீன்வளர்ப்போருக்கு பல்வேறு நவீன மீன்வளர்ப்புத் தொழில்நுட்பம் குறித்த திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்தல் மற்றும் மீன்வளத்துறை அலுவலர்களுக்கு உள்நாட்டு மீன்வளம் சம்பந்தமான சமீபத்திய தொழில்நுட்ப முன்னேற்றங்கள் தொடர்பாக உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் பயிற்சி அளித்தல்.

- பண்ணைக்குட்டைகள் மற்றும் பல்நோக்கு பண்ணைக்குட்டைகளில் வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்புடன் கூடிய மீன்வளர்ப்பினை ஒருங்கிணைத்து, அதன்மூலம் விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் ஈட்ட வழிவகை செய்தல்.
- வேகமாக வளரும் மீன் இனங்களான அமூர் கெண்டை, ஜெயந்தி ரோகு, மரபு வழி மேம்படுத்தப்பட்ட பண்ணை திலேப்பியா மற்றும் பங்கேஷியஸ் போன்ற மீன் இனங்களை அறிமுகப்படுத்துதல்.
- மீன்குஞ்சு வளர்ப்பு தொகுப்புகள், மீன்வளர்ப்பு மற்றும் அலங்கார மீன்வளர்ப்பினை ஊக்குவித்து வேலைவாய்ப்பினை உருவாக்குதல்.

தமிழக அரசால் உள்நாட்டு மீன்வளத்தினை பெருக்கிட பின்வரும் புதிய உத்திகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- தமிழ்நாடு அரசு 4 மாவட்டங்களில் நீர்வாழ் உயிரின ஆய்வுக் கூடங்களை நிறுவி செயல்படுத்தி வருகிறது. இந்த நீர்வாழ் உயிரின ஆய்வுக்கூடங்கள் மீன்வளர்ப்பிற்கான நீர்த்தர ஆய்வு, மண் பரிசோதனை மற்றும் நோய்

கண்டறிதல் வசதிகளை கொண்டுள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டில் 18 மாவட்ட மீன்வளர்ப்போருக்கு சேவைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதன் முக்கிய சேவைகளாவன: மீன்பண்ணைகள் தொடர்பான புள்ளி விவரம், மீன்பண்ணையாளர்களுக்கு மீன்பண்ணை பராமரிப்பு தொடர்பான சேவைகள், நீர்த்தர பரிசோதனை, நோய் கண்டறியும் வசதிகள் மற்றும் மீன்வளர்போருக்கு சிறந்த மேலாண்மை மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் குறித்த தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

- அரசு மற்றும் தனியார் மீன்பண்ணைகளுக்குத் தரமான மீன் உணவினை வழங்கிட தஞ்சாவூர் மாவட்டத்தில் மீன்உணவு ஆலை நிறுவப்பட்டு, தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் மூலம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.
- மீன்குஞ்சுகளின் தரத்தினை மேம்படுத்திட தமிழ்நாடு அரசு மேட்டூர் அணை மற்றும் பவானிசாகர் அணை அரசு மீன்பண்ணைகளில்

நல்விதை தேர்வு முறை இனப்பெருக்கத்திற்கு சினை மீன்களை தேர்வு செய்தல் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- தமிழ்நாடு அரசு நீர் பற்றாக்குறையை கருத்திற்கொண்டு நீர் மறுசுழற்சி முறையில் மீன்வளர்ப்பு தொழில்நுட்பத்தினை ஊக்குவித்து, நீர் பாதுகாப்பிற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. இந்த தொழில்நுட்பத்தின் மூலம் நீரினை குறைவான அளவு உபயோகிக்கவும், நீரினை மறுமுறை உபயோகிக்கவும் செய்வதனால், இது மிகச் சிறந்த தீவிர முறை மீன்வளர்ப்பிற்கு உகந்ததாகும். நீர் மறுசுழற்சி முறையில் மீன்வளர்ப்பினை மேற்கொள்வதை ஊக்குவித்திட தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு விருப்பமுள்ள மீன்வளர்ப்போருக்கு நீர்மறுசுழற்சி மீன்வளர்ப்பு தொடர்பான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

7.10.3. மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள்

தமிழ்நாடு அரசு மீன்வளர்ப்பினை பிரபலப்படுத்தவும் ஊரகப் பகுதிகளில் வேலைவாய்ப்பினை உருவாக்கவும், சென்னை தவிர 31 மாவட்டங்களில் மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளை ஏற்படுத்தித் திறம்பட செயல்படுத்தி வருகிறது. இந்த மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள் அந்தந்த மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

விவசாயிகளுக்கு மீன்வளர்ப்பு தொடர்பான தொழில்நுட்பப் பயிற்சியளிப்பதுடன், மீன்வளர்ப்பிற்குத் தேவையான மானியங்களை அளித்து, மீன் வளர்ப்பினை ஊக்குவித்தல் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்குதல் ஆகியன மாவட்ட மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளின் முக்கிய செயல்பாடுகளாகும். மாவட்டத்திலுள்ள மீன்குஞ்சு பொரிப்பகங்கள், மீன்குஞ்சு வளர்ப்புப் பண்ணைகள் மற்றும் மீன்பண்ணைகளை பதிவு செய்து பல்வேறு திட்டங்களின் மூலம் மீன்வளர்ப்போருக்கு மானிய உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

7.10.4 நீர்த்தேக்க மீன்வளம்

தமிழ்நாட்டில் பெரிய, நடுத்தர மற்றும் சிறியவகை என மொத்தம் 62 நீர்த்தேக்கங்களில் மீன்வள மேலாண்மை மீன்துறையின் கட்டுப்பாட்டிலுள்ளது. அவற்றில் உள்நாட்டு மீன்வளத்தினைப் பெருக்கிட, 54 நீர்த்தேக்கங்கள் தமிழ்நாடு மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டிலும், 8 நீர்த்தேக்கங்கள் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டிலும் உள்ளன. மேற்படி நீர்தேக்கங்களின் மீன்வள மேலாண்மை மேற்கொள்ளப்பட்டு மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தியினை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- நீர்த்தேக்கங்களில் மீன்உற்பத்தியினை பெருக்குவதும், நீர்த்தேக்கங்களை தங்களது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள மீனவர்களின் வருவாயை அதிகரித்தல் ஆகியன நீர் தேக்க மீன்வள மேலாண்மையின் முக்கிய நோக்கமாகும்.
- மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 54 நீர்த்தேக்கங்களின் மீன்பிடி உரிமை குத்தகைக்கு விடப்படுகிறது.

- 2019-20 ஆம் ஆண்டில் 12 நீர்த்தேக்கங்கள் மீன்பாசி குத்தகையில் உள்ளன. 2012-13 முதல் 2019-20 வரை நீர்த்தேக்கங்களின் மீன்பாசி குத்தகையின் மூலம் ரூ.44.97 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. இதர நீர்த்தேக்கங்களை 2020-21 ஆம் ஆண்டில் மீன்பாசி குத்தகைக்கு விட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- மீன்வளத்துறையின் மூலம் மீன்வளர்ப்பிற்கு உகந்த இதர நீர்தேக்கங்களிலும் அறிவியல் பூர்வமான மீன்வளர்ப்பினை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

7.10.5. **தூண்டுதல் முறையில் மீன்குஞ்சு உற்பத்தி**

தமிழ்நாட்டில் 10 அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள் மீன்வளத்துறையின் மூலமும், 1 மீன்குஞ்சு உற்பத்தி நிலையம் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் மூலமும் வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றன.

அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களின் விபரம் பின்வருமாறு:-

அட்டவணை-5
அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள்

வ.எண்	அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள்	உற்பத்தி செய்யப்படும் மீன்குஞ்சுகள்	மாவட்டம்
1	மணிமுத்தாறு	கெண்டை	திருநெல்வேலி
2	கரந்தை	கெண்டை	தஞ்சாவூர்
3	தட்டான்குளம்	கெண்டை	தஞ்சாவூர்
4	நல்லிக்கோட்டை	கெண்டை	திருவாரூர்
5	திருக்காம் புலியூர்	கெண்டை	கரூர்
6	பவானிசாகர்	கெண்டை	ஈரோடு
7	மேட்டூர் அணை	கெண்டை	சேலம்
8	கிருஷ்ணகிரி	அமூர் கெண்டை மற்றும் மரபுவழி மேம்படுத்தப் பட்ட திலேப்பியா	கிருஷ்ணகிரி
9	பூண்டி	சாதா கெண்டை	திருவள்ளூர்
10	செம்பரம் பாக்கம்	மகூர்	காஞ்சிபுரம்
11	சாத்தனூர்	கெண்டை	திருவண்ணாமலை

தமிழ்நாடு அரசு மீன்பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை திறம்பட மேம்படுத்திட

சமீப காலங்களில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. 2019-20ஆம் ஆண்டில் அரசு மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களின் மூலம் 53.57 கோடி நுண் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு தனியார் மீன்குஞ்சு பொரிப்பகங்கள் அமைத்திட தனியார் பண்ணையாளர்களை ஊக்குவித்து மானிய உதவிகளையும் வழங்கி வருகிறது.

வேகமாக வளரும் மீன்களை குறுகிய கால நீர்நிலைகளில் இருப்பு செய்திடும் நோக்குடன் மாநிலத்திலேயே சிறந்த முறையாக மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்குஞ்சு பொரிப்பகத்தினை அமைத்துள்ளது. தமிழ்நாடு, இந்தியாவிலேயே முதன்முறையாக மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்குஞ்சு பொரிப்பகத்தினை மீன்வளத்துறையின் மூலம் அமைத்திட மத்திய அரசின் அனுமதியினை பெற்று இராஜீவ்காந்தி மீன்வளர்ப்பு மையத்துடன் தொழில்நுட்ப புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் மேற்கொண்டுள்ளது. மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்குஞ்சு

பொரிப்பகம் கிருஷ்ணகிரி அரசு மீன்பண்ணையில் ஆண்டொண்றிற்கு 15 இலட்சம் மீன்குஞ்சுகள் உற்பத்தி திறனுடன் திறம்பட செயல்பட்டு தரமான மீன்குஞ்சுகளை மாநிலத்திலுள்ள மீன்வளர்ப்போருக்கும் மற்றும் அருகாமையிலுள்ள மாநிலங்களுக்கும் விநியோகித்து வருகிறது. தமிழ்நாடு அரசு மேலும் ஒரு மரபு வழி மேம்படுத்தப்பட்ட திலேப்பியா மீன்குஞ்சு பொரிப்பகத்தினை உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டத்தின்கீழ் தேனி மாவட்டம் மஞ்சளாறு அணை அரசு மீன்பண்ணையில் நிறுவி வருகிறது.

7.10.6. மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்

தமிழ்நாட்டில் 37 அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் மீன்வளத்துறையின் மூலமும், 5 மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத்தின் மூலமும் செயல்பட்டு வருகின்றன. 2018-19ஆம் ஆண்டில் மொத்தம் 7.08 கோடி தரமான மீன் விரலிகள் வளர்த்தெடுக்கப்பட்டு விநியோகிக்கப் பட்டுள்ளது. வளர்த்தெடுக்கப்பட்ட மீன் விரலிகள் நீர்த்தேக்கங்களிலும், பாசன குளங்களிலும் மற்றும் தனியார் மீன்பண்ணைகளிலும் இருப்பு செய்யப்பட்டு மாநிலத்தின் உள்நாட்டு மீன் உற்பத்தி அதிகரித்துள்ளது.

அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்களின் விபரம் பின்வருமாறு:

அட்டவணை 6

வ. எண்	அரசு மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்	மாவட்டம்
மீன்வளத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்		
1.	பேச்சிப்பாறை	கன்னியாகுமரி
2.	சிற்றாறு I	கன்னியாகுமரி
3.	சிற்றாறு II	கன்னியாகுமரி
4.	மணிமுத்தாறு	திருநெல்வேலி
5.	கடானா	தென்காசி
6.	வைகைஅணை	தேனி
7.	மஞ்சளாறுஅணை	தேனி
8.	மானகிரி	சிவகங்கை
9.	பிரவலூர்	சிவகங்கை
10.	பிளவக்கல்	விருதுநகர்
11.	அணைப்பட்டி	திண்டுக்கல்
12.	சாத்தையாறு	மதுரை
13.	தட்டாமனைப்பட்டி	புதுக்கோட்டை
14.	குருங்களூர்	புதுக்கோட்டை
15.	கருவிடைச்சேரி	புதுக்கோட்டை
16.	நெய்தலூர்	தஞ்சாவூர்
17.	அகரப்பேட்டை	தஞ்சாவூர்
18.	கரந்தை மல்லிசெட்டி தெரு	தஞ்சாவூர்
19.	திருமங்கலக்கோட்டை	தஞ்சாவூர்

20.	நல்லிக்கோட்டை	திருவாரூர்
21.	அசூர்	திருச்சி
22.	குளித்தலை	திருச்சி
23.	திருக்காம்புலியூர்	கரூர்
24.	பவானிசாகர்	ஈரோடு
25.	மேட்டூர் அணை	சேலம்
26.	ஆணைமடுவு	சேலம்
27.	ஓகேனக்கல்	தருமபுரி
28.	சின்னாறு	தருமபுரி
29.	கிருஷ்ணகிரி	கிருஷ்ணகிரி
30.	பாம்பார்	கிருஷ்ணகிரி
31.	கெலவரப்பள்ளி	கிருஷ்ணகிரி
32.	மோர்தானா	வேலூர்
33.	வீடூர்	விழுப்புரம்
34.	லால்பேட்டை	கடலூர்
35.	பூண்டி	திருவள்ளூர்
36.	செம்பரம்பாக்கம்	காஞ்சிபுரம்
37.	ஆத்தூர்	செங்கல்பட்டு
தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மீன்குஞ்சு வளர்ப்பு நிலையங்கள்		
1.	பாலாறு-பொருந்தலாறு	திண்டுக்கல்
2.	அமராவதி	திருப்பூர்
3.	திருமூர்த்தி	திருப்பூர்
4.	ஆழியாறு	கோயம்புத்தூர்
5.	சாத்தனூர்	திருவண்ணாமலை

தமிழ்நாடு அரசு மீன்பண்ணையாளர்களை ஊக்குவித்து தனியார் மீன்குஞ்சு வளர்த்தெடுக்கும் நிலையங்களை அமைத்திட மானிய உதவி வழங்கி வருகிறது.

மேலும், தரமான மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்திடவும், ஒரு அலகு பரப்பிற்கான மீன்குஞ்சு உற்பத்தியினை அதிகரித்திடவும், கடலூர் மாவட்டம் லால்பேட்டை அரசு மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணையில் காற்று புகுத்திகள் மற்றும் புரோபயாட்டிக் பயன்படுத்தி தீவிர மீன்குஞ்சு உற்பத்தி வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதுக்கோட்டை மாவட்டம் தட்டாமனைப்பட்டி, தருமபுரி மாவட்டம் சின்னாறு, சேலம் மாவட்டம் மேட்டூர் அணை, கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரி அணை மற்றும் ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அரசு மீன்குஞ்சு வளர்த்தெடுக்கும் நிலையங்களில் தீவிர முறையில் மீன்குஞ்சு வளர்த்தெடுக்கும் வசதிகள் தற்போது நிறுவப்பட்டு வருகிறது. இவ்வசதிகளின் மூலம் அரசு மீன்பண்ணைகளில் ஒரு அலகிற்கான மீன்குஞ்சு உற்பத்தியினை அதிகரித்து தரமான மீன்குஞ்சுகளை

மீன்வளர்ப்போருக்கு விநியோகித்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

7.10.7 மீன்துறை அலுவலர்களுக்கு நவீன தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி

தமிழ்நாடு அரசு 2019-2020ஆம் ஆண்டில் உலக வங்கி நிதியுதவியுடன் கூடிய நீர்வள நிலவளத் திட்டத்தின் கீழ் மீன்துறை அலுவலர்களுக்கு உலகளாவிய முறையில் மேற்கொள்ளப்படும் மீன்வளர்ப்பு தொடர்பான நவீன தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சிகள் 25 அலுவலர்களுக்கு பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்லாந்து நாடுகளில் வழங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் மீன்துறை அலுவலர்களுக்கு மீன்வளத்தில் முன்னோடிப் பயிற்சிகளை மேற்கொண்டு சர்வதேச மீன்வள நிலையங்களான தெற்காசிய மீன்வள மேம்பாட்டு மையம், தாய்லாந்து அரசு மீன்வளத்துறை மற்றும் பாங்காக்கிலுள்ள ஆசிய தொழில்நுட்ப நிலையம் ஆகியவற்றில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்லாந்து நாடுகளில் அளிக்கப்பட்ட பயிற்சிகளின் மூலம் மீன்துறை அலுவலர்களுக்கு நவீன முறையிலான மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் மீன்வளர்ப்பு தொழில்நுட்பங்கள் மற்றும்

அறிவுசார் பயிற்சிகள் மூலம் மாநிலத்தின் மீன்வள மேம்பாட்டிற்கான வழிவகை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

7.10.8 அரசு மீன் பண்ணை மேம்பாட்டுப் பணிகள்

அரசு மீன் பண்ணைகளில் மீன்குஞ்சு உற்பத்தியினை அதிகரித்திட ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அரசு மீன்பண்ணை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டம் ஆத்தூர் அரசு மீன்பண்ணைகளில் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.2 கோடி செலவில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் மீன்குஞ்சு உற்பத்தி அதிகரித்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2019-20 ஆம் ஆண்டில் தருமபுரி மாவட்டம் சின்னாறு அரசு மீன்பண்ணை மற்றும் புதுக்கோட்டை மாவட்டம் தட்டாமணைபட்டி அரசு மீன்பண்ணைகளில் தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ. 0.55 கோடி செலவில் கூடுதல் நீராதார வசதிகளை ஏற்படுத்திடவும் மற்றும் தீவிர முறையில் மீன்குஞ்சு உற்பத்தியினை மேற்கொள்ளவும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

2019-20 ஆம் ஆண்டில் மேட்டூர், கிருஷ்ணகிரி மற்றும் பவானிசாகர் அரசு மீன்பண்ணைகளில் காற்றுபுகுத்திகள் மற்றும் புரோபயாட்டிக் பயன்படுத்தி நீர்த்தர மேலாண்மையின் மூலம் தீவிர முறையில் மீன்குஞ்சு உற்பத்தி செய்திடும் வசதிகள் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ. 0.45 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

7.10.9 தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் - II (TN-IAMP)

உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டம் - II, 66 உபவடிநில பகுதிகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை செயல்படுத்துவதின் மூலம் நீரின் பயன்பாடு மற்றும் மீன்உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், உள்நாட்டு மீன்வளத்தை மேம்படுத்திட உலக வங்கி மூலம் ரூ.39.50 கோடிக்கு ஒப்புதல் பெறப்பட்டு, பல்வேறு கட்டங்களில் செயல்படுத்திட அரசிடமிருந்து நிர்வாக அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2018-19-ஆம் ஆண்டில் முதற்கட்ட உபவடிநிலப்பகுதிகளுக்கு ரூ.15.52 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பவானிசாகர் மற்றும் மேட்டூரில் நல்விதை தேர்வு இனப்பெருக்க மேம்பாடு மற்றும் பராமரிப்பு மையம் அமைக்கவும், மஞ்சளாறு அரசு மீன் பண்ணையில் கிப்ட் திலேப்பியா பொரிப்பகம் அமைப்பதற்கும், கடலூர் மாவட்டம் லால்பேட்டை மற்றும் அகரத்தில் அரசு மீன் பண்ணைகளை மேம்படுத்தவும், 3830 ஹெக்டேர் நீர்பாசன குளங்களில் மீன்வளர்ப்பு மேற்கொள்ளவும், 170 பண்ணைகுட்டையில் மீன்வளர்ப்பு மேற்கொள்ளவும், 14 அலகு மண்குட்டைகளில் மீன்குஞ்சு வளர்ப்பு மேற்கொள்ளவும், 21 அலகு கூடுகளில் மீன்குஞ்சு வளர்க்கவும், 9 அலகு மிதவை கூடுகளில் மீன்வளர்க்கவும், 170 எண்ணம் மீன்பிடி உபகரணங்கள் வழங்கவும் மற்றும் 2 எண்ணம் நவீன மீன்விற்பனை அங்காடி அமைக்கவும் ரூ.10.06 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டு 2019-20ல், முதல் மற்றும் இரண்டாம் கட்டத்தில், கீழ்காணும் மீன்வள திட்டங்கள்

ரூ.16.50 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அட்டவணை 7

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம் -II 2019-20

வ. எண்	திட்டத்தின் பெயர்	எண்ணம்
1	நீண்ட கால மற்றும் குறுகிய கால நீர் பாசன குளங்களில் மீன்குஞ்சுகள் இருப்புச்செய்தல்	14,625 ஹெக்டேர்
2	பண்ணைக் குட்டைகளில் மீன்வளர்ப்பு	393 எண்ணம்
3	மீன்பிடி உபகரணங்கள் வழங்குதல்	270 எண்ணம்
4	மிதவைக் கூடுகளில் மீன்வளர்த்தல்	6 அலகுகள்
5	கூடுகளில் மீன்குஞ்சு வளர்த்தல்	41 அலகுகள்
6	மீன்குஞ்சு வளர்ப்பு மற்றும் மீன்வளர்ப்பு பண்ணை அமைத்தல்	32 அலகுகள்
7	நவீன மீன் விற்பனை அங்காடி அமைத்தல்	12 அலகுகள்
8	மீன்துறை தொழில்நுட்ப அலுவலர்களுக்கு வெளிநாடுகளில் கண்டுணர் பயிற்சி வழங்குதல்	25 அலுவலர்கள்

இத்திட்டத்தின் கீழ் மீன்வளத்துறையின் மூலம் 13 அலுவலர்கள் பிலிப்பைன்ஸ் நாட்டிற்கும் (29.7.19 - 3.8.19) மற்றும் 12 அலுவலர்கள் தாய்லாந்து நாட்டிற்கும் (5.8.19-12.8.19) அனுப்பி வைக்கப்பட்டு, தாய்லாந்திலுள்ள (SEAFDEC) பயிற்சி நிறுவனம் மூலம் நவீன தொழில் நுட்ப முறையில் மீன்உற்பத்தியினை பெருக்கிடும் வகையில் பயிற்சி அளிக்கப்பட்டது. இதன்மூலம் மாநிலத்தின் மீன்வளத்தினை மேம்படுத்திட இப்பயிற்சி உதவியாக இருக்கும். மேலும், மீன்துறை இயக்குநர் மற்றும் மீன்துறை கூடுதல் இயக்குநர் இராமநாதபுரம் அவர்களும் மேற்படி அலுவலர்களுடன் வெளிநாட்டு பயிற்சியின் இடையே பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்லாந்து நாட்டிற்கு சென்று, (25 அலுவலர்களுடன் சேர்ந்து) அந்நாடுகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் நவீன முறையில் மீன்குஞ்சு வளர்த்தல், மீன்வளர்த்தல் மற்றும் விற்பனை முறைகள் குறித்தான கண்டுணர் பயிற்சியில் கலந்து கொண்டனர்.

7.10.10. வண்ணமீன் வளர்ப்பு முன்னோடித் திட்டமாக செயல்படுத்துதல்

தமிழகத்திலுள்ள மீன்வளர்ப்போரிடையே வண்ண மீன்கள் வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்தம் வாழ்வாதாரத்தைப் பெருக்கிட ஏதுவாக கொல்லைப்புற வண்ண மீன் வளர்ப்பு, நடுத்தர அளவிலான வண்ண மீன் வளர்ப்பு கட்டமைப்பு, வண்ண மீன் வளர்ப்போருக்கு பயிற்சி, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு வண்ண மீன் வளர்ப்பில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஆகிய திட்டங்கள் செயல்படுத்திட தேசிய மீன்வள அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ.533.19 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் வாயிலாக தமிழகத்திலுள்ள 5 மாவட்டங்களில் மீனவர்களுக்கு அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்திட திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், கல்லூரி மற்றும் பள்ளிகளில் 34 பெரிய மற்றும் 37 சிறிய மீன்தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கு அலங்கார மீன்வளர்ப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும்,

கொல்லைப்புற வண்ண மீன் வளர்ப்பு, நடுத்தர அளவிலான வண்ண மீன் வளர்ப்பு கட்டமைப்பு, ஒருங்கிணைந்த அலங்கார மீன் வளர்ப்பு கட்டமைப்பு, அலங்கார மீன்வளர்ப்புத் தொட்டிகள் மற்றும் சில்லரை விற்பனை நிலையம் அமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

7.11. திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்

7.11.1 மீனவ இளைஞர்கள் கடற்சார் கல்வி பயில ஊக்குவித்தல்

மீனவ இளைஞர்களின் திறனை மேம்படுத்தவும், வேலைவாய்ப்பினை உருவாக்கிடவும், அரசால் அறிவிக்கப்பட்ட 6 கடற்சார் கல்விப் பாடப்பிரிவுகளைப் பயின்றிட, மீனவ குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கு, நபர் ஒருவருக்கு ரூ.50,000 என்ற வீதத்தில் அரசு நிதியுதவி வழங்குகிறது. 2019-20 ஆம் ஆண்டில் 42 மீனவ இளைஞர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் ரூ.13.25 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

2020-21 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

7.11.2 மீனவ இளைஞர்களுக்கு சான்றிதழ் படிப்புகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற விதி எண்.110-ன் கீழ், மீனவ இளைஞர்களுக்கு இந்திய கப்பற்படை மற்றும் இந்திய கடலோர காவல்படையில் வேலை வாய்ப்பினைப் பெற்றிடத் தேவையான சிறப்புப் பயிற்சி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதினைத் தொடர்ந்து, அரசு இப்பயிற்சிக்கென ரூ.1.04 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், கடலோர காவல்படை குழுமத்துடன் ஒருங்கிணைந்து, மீனவ இளைஞர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதுவரை கடலூர், இராமநாதபுரம், சென்னை, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மண்டலங்களை சார்ந்த 145 மீனவ இளைஞர்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது. 2020 -21 ஆம் ஆண்டிலும், 155 மீனவ இளைஞர்கள் பயன்பெறும் வகையில் இப்பயிற்சி திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

மீனவ இளைஞர்களுக்கு கடலில் மீட்பு பணி திறன்களை உயர்த்திட ”கடற்கரை உயிர் பாதுகாப்பு”

பயிற்சியானது துறையால் அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 38 மீனவ இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

7.11.3 அகில இந்திய குடிமைப்பணியில் சேர்வதற்கு மீனவ இளைஞர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளித்தல்

இந்திய குடிமைப் பணி போட்டித் தேர்வுகளை, திறனுடன் எதிர்கொள்ள ஏதுவாக, ஆண்டுதோறும் 20 மீனவ இளைஞர்களுக்கு 6 மாத கால பிரத்யேக பயிற்சி அரசுச் செலவில் வழங்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி அண்ணா மேலாண்மை நிலையத்தின் மூலம் (அகில இந்திய குடிமைப் பணிகளுக்கான பயிற்சி நிலையம்) 2017ம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை இரண்டு அணிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டும் மீனவ மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இப்பயிற்சிக்கான அனைத்து செலவினங்களும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் பெருநிறுவன சமூக பொறுப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

7.11.4. முன் கற்றலுக்கான அங்கீகாரம்

தமிழ்நாடு மீன்வளத்துறை 3000 மீனவர்களுக்கு முன் கற்றலுக்கான அங்கீகாரம் அளிக்கும் பிரிவின் கீழ், இந்திய விவசாயிகளின் திறன் மேம்பாட்டு மன்றத்துடன் இணைந்து, கடல் மற்றும் உள்நாட்டு முதன்மை மீன்பிடிப்பவர்கள் மற்றும் முதன்மை பதனீட்டாளர்களுக்கு திறன்மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், பயிற்சி, மதிப்பீடு மற்றும் சான்று வழங்கிட ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு வழங்கி உள்ளது.

இத்திட்டத்தின் வாயிலாக 2100 மீனவர்களுக்கு "கடல் மற்றும் உள்நாட்டு முதன்மை மீன்பிடிப்பவர்கள் மற்றும் முதன்மை பதனீட்டாளர்கள்" என்ற திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

7.12. மீனவர் மற்றும் மீன்வளர்ப்போருக்கு வேளாண் கடன் அட்டை வழங்குதல்

மத்திய அரசின் அறிவிப்பினைத் தொடர்ந்து, மீனவர் மற்றும் மீன்வளர்ப்போர்க்கு தேவைப்படும் நடைமுறை மூலதனத்திற்கான நிதியினை வங்கிகளிடமிருந்து பெற்றிட, விவசாய கடன் அட்டை

(Kisan Credit Card) வழங்கும் திட்டம் தமிழக அரசால் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. மீன்குஞ்சு வளர்ப்பு, இறால் வளர்ப்பு மற்றும் இதர நீர்வாழ் உயிரின வளர்ப்பு மற்றும் மீன்பிடிப்பிற்குத் தேவையான குறுகிய கால கடன் உதவி பெறுவதற்கு இக்கடன் அட்டை பெரிதும் உதவும்.

தகுதியுடைய மீனவர்/ மீன்வளர்ப்போர்களுக்கு ரூ.2 இலட்சம் வரை நடைமுறை மூலதனத்திற்கான கடன் உச்சவரம்பு நிர்ணயம் செய்து விவசாயக் கடன் அட்டை (Kisan Credit Card) மூலம் கடன் வழங்கப்படுகிறது.

விவசாயக் கடன் அட்டைத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மீனவர்/ மீன்வளர்ப்போர் கடன் பெறும் பொழுது, அவர்கள் ஆண்டொன்றிற்கு செலுத்த வேண்டிய வட்டித் தொகையில் 2 விழுக்காடு குறைக்கப்பட்டு வட்டிச் சலுகை அளிக்கப்படுகிறது. மேலும், முறையாக கடன் தொகையை திரும்ப செலுத்தும் பயனாளிகளுக்கு வட்டித் தொகையில் ஆண்டுக்கு 3 விழுக்காடு குறைக்கப்பட்டு வட்டி சலுகை அளிக்கப்படுகிறது.

மீனவர் மற்றும் மீன்வளர்ப்போர்களுக்கான வேளாண் கடன் அட்டை வழங்குவதற்காக மீன்வளத்துறை சிறப்பு மாவட்ட மற்றும் மாநில அளவிலான தொழில்நுட்பக் குழுக்களை அமைத்து நடைமுறை மூலதனத்திற்கான நிதித் தேவை அளவினை நிர்ணயம் செய்துள்ளது. நிர்ணயம் செய்யப்பட்ட அளவினை மாநில தொழில் நுட்ப குழுவின் பரிந்துரையுடன் வங்கிகளுக்கு மாநில அளவிலான வங்கியாளர் குழு வாயிலாக அனுப்பப்பட்டுள்ளது.

இதுவரை, தமிழ்நாட்டில் மீனவர் மற்றும் மீன்வளர்ப்போர்களிடமிருந்து 15891 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவற்றில் 14369 விண்ணப்பங்கள் வேளாண் கடன் அட்டை பெறுவதற்காக பல்வேறு வங்கிகளுக்கு அனுப்பி கடன் அட்டைகள் வழங்கும் பணி நடை பெற்று வருகிறது.

7.13. விரிவாக்கப்பணிகள்

மீனவர்கள், மீன்வளர்ப்போர் மற்றும் இதர பங்கீட்டாளர்களுக்கு அரசு நலத்திட்டங்கள் மற்றும் நவீன தொழில்நுட்பங்களை கொண்டு சேர்க்கும்

விதமாக, மீன்வளத்துறையின் விரிவாக்கம் மற்றும் பயிற்சிப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

மீன்வளத்துறையானது, தமிழக அரசால் நடத்தப்படும் பொருட்காட்சிகள், சுற்றுலா மற்றும் தொழிற்பொருட்காட்சியில் பங்கேற்று வருகிறது. மேலும், கடலில் பாதுகாப்பான முறையில் மீன்பிடித்தல், சுகாதாரமான முறையில் மீன்களைக் கையாளுதல், மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன்பிடி இறங்குதளங்களை தூய்மையாக பராமரித்தல், மீன்பிடி ஆதாரங்களை பாதுகாத்தல், மற்றும் நெகிழியினால் ஏற்படும் மாசு குறித்தான விழிப்புணர்வு முகாம்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. மீனவர் குறைதீர்க்கும் தினம் மற்றும் மீன்வளர்ப்போர் கூடுகை ஆகியவை தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. தேசிய மீன்வளர்ப்போர் தினம், உலக மீன்வளதினம், உலகக் கடல்சார் தினம் போன்ற தினங்களில் பள்ளி/கல்லூரி மாணவர்கள் மற்றும் மீனவர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், மீனவ கிராமங்களில் விழிப்புணர்வு பேரணி மற்றும் மருத்துவ முகாம்கள்

நடத்தப்பட்டு வருகின்றன. மீனவர்கள் மற்றும் மீன்வளர்ப்போர்கள் பயன்பெறும் வகையில் துறையின் முக்கிய நிகழ்வுகள், திட்டங்கள், வெற்றிக்கதைகள் மற்றும் பல பயனுள்ள செய்திகளை தொகுத்து '**மீன்வள களஞ்சியம்**' எனும் காலாண்டு மலர் வெளியிடப்பட்டு வருகிறது.

7.14. தமிழ்நாடு மீனவ மக்கட்தொகை கணக்கெடுப்பு

மீன்வளத்துறை பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மீனவ மக்கட்தொகை கணக்கெடுப்பு மேற்கொண்டு வருகிறது. கடந்த 2010ஆம் ஆண்டு தமிழ்நாடு கடல் மீனவ மக்கட்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டது. 2020ஆம் ஆண்டிற்கான கடல் மீனவ மக்கட்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்ள அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீனவ மக்கட்தொகை கணக்கெடுப்பு மேற்கொள்வதன் மூலம் மீன்வளம் மற்றும் மீனவ மக்களின் தற்போதைய நிலை அறியப்பட்டு, அதன் அடிப்படையில் மீன்வளக் கொள்கைகள் மற்றும் நலத்திட்டங்கள் உருவாக்கப்படும்.

7.15. தமிழக மீனவ சமுதாயத்தின் சமூக பொருளாதார நிலை குறித்து விரிவான ஆய்வுகள்

தமிழக அரசு மீனவ மக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை தமிழ்நாடு முழுவதும் உருவாக்குவதன் வாயிலாக அவர்களின் சமூக பொருளாதார நிலையை உயர்த்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. பல்வேறு நலத்திட்டங்களினால் மீனவ மக்களின் சமூக பொருளாதார நிலையில் ஏற்பட்ட மாற்றங்களை அறிந்து கொள்ளும் பொருட்டும், கூடுதலாக மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள் குறித்தும் விரிவான ஆய்வுகள் நடத்திட அரசு ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அரசின் திட்டப்பணிகளுக்கும், கொள்கை முடிவு உருவாக்கத்திற்கும், திட்டச் செயல்பாட்டிற்கும் உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கத்திற்கும் மற்றும் திறன் மேம்பாட்டிற்கும் இவ்வாய்வுகள் உதவியாக அமையும்.

7.16. மூன்றாவது இந்திய சர்வதேச அளவிலான கடற்பாசி கருத்தரங்கு 2020

மீனவர்களுக்கு புதிய வாழ்வாதார செயல்பாடுகள் வழங்குவதில் தமிழ்நாடு முன்னோடி

மாநிலமாக விளங்குகிறது. கடலோர மீனவர்களிடையே கடற்பாசி வளர்ப்பினை அறிமுகப் படுத்தியது அவ்வாறான ஒரு முயற்சியாகும். இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் தூத்துக்குடி கடலோர மாவட்டங்களில் கடற்பாசி வளர்ப்பு முக்கிய வாழ்வாதாரமாக விளங்குகிறது. மீனவர்கள் குறிப்பாக மீனவ மகளிர் இத்தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், மீனவ மகளிர்களுக்கு கூடுதல் உரிமை கிடைக்கப் பெறுகின்றது. தமிழ்நாடு அரசு, இந்திய வர்த்தக சபை மற்றும் மத்திய உப்பு மற்றும் கடல் வேதியியல் பொருட்கள் ஆராய்ச்சி நிலையம் (CSMCRI) இணைந்து சர்வதேச அளவிலான மூன்றாவது இந்திய கடற்பாசி கருத்தரங்கு 2020 ஜனவரி திங்கள் 30 மற்றும் 31-இல் நடத்தியது. இந்த கருத்தரங்கானது கடற்பாசி மற்றும் அதனை சார்ந்த தொழில்களை தமிழ்நாட்டில் விரிவடையச் செய்யும் நோக்கத்துடன் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் கடற்பாசி வளர்ப்பினை மேம்படுத்தும் நோக்கத்துடன் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான 8 தனியார் நிறுவனங்களுடன் ரூ.57.70 கோடி மதிப்பிலான

புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் கடற்பாசியை சந்தை படுத்துதல், தனியார் தொழில் முனைவோரின் மூலம் மதிப்புக் கூட்டப்பட்ட கடற்பாசி பொருட்களின் உற்பத்தியினை பெருக்குதல் மற்றும் கடலோர மீனவர்களுக்கான வாழ்வாதார வாய்ப்பு மேம்படுத்த வழிவகை செய்யும். கடற்பாசி வளர்ப்பு மற்றும் இயற்கை முறையில் கடற்பாசி சேகரணம் செய்வதற்கான தனி கொள்கை 2020-21ல் உருவாக்கப்படும்.

7.17. மீனவ கூட்டுறவு சங்கங்களின் மேலாண்மை

தமிழக மீனவர் மற்றும் மீனவ மகளிரது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதில் மீனவக் கூட்டுறவு சங்கங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மீன்வளத்துறையானது மீனவர் / மீனவ மகளிருக்கு கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக அரசின் பல்வேறு நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 1,418 தொடக்க மீனவர் / மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் / 12 மாவட்ட கூட்டுறவு இணையங்கள் / 1 மாநிலத் தலைமை கூட்டுறவு இணையம் ஆகியவற்றில் 7.17 இலட்சம் மீனவர் / மீனவ

மகளிர் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். மீனவர் கூட்டுறவு சங்கங்கள் 51 முழு நேர நியாய விலைக் கடைகள் மற்றும் 15 பகுதி நேர நியாய விலைக்கடைகளை நடத்தி வருகின்றன.

மீனவர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை மற்றும் அதன் உறுப்பினர்கள் விவரம், கீழ்க்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:-

அட்டவணை: 8

மீனவ கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்கள் விவரம்

சங்கத்தின் வகை	சங்கங்களின் எண்ணிக்கை	உறுப்பினர்களின் எண்ணிக்கை
தொடக்கக் கூட்டுறவு சங்கங்கள்		
கடல் மீனவர் கூட்டுறவு சங்கங்கள்	558	3,56,992
கடல் மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள்	461	2,60,732
உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்கள்	300	82,986

உள்நாட்டு மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள்	72	7,883
இதர வகைச் சங்கங்கள்	27	6,791
மொத்தம்	**1,418**	**7,15,384**
மாவட்ட மீனவர் கூட்டுறவு இணையம்	12	998
தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம்	1	822
மொத்தம்	**1,431**	**7,17,204**

8. தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் (வரையறுக்கப்பட்டது) (TAFCOFED Ltd)

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையம் (வ.து) தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம், 1983ன் கீழ் பதிவு செய்யப்பட்டு, கடந்த 19.10.1992 லிருந்து சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. தற்பொழுது இணையத்தில் 484 கடல் மீனவர் கூட்டுறவு சங்கங்கள், 155 உள்நாட்டு மீனவர் கூட்டுறவு சங்கங்கள், 174 மீனவ மகளிர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 9 மாவட்ட மீனவ கூட்டுறவு இணையங்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளன. இவ்வுறுப்பினர் சங்கங்கள், இணையத்திற்கு ரூ.91.80 இலட்சம் பங்குத் தொகையாக செலுத்தியுள்ளன.

இணையத்தின் செயற்பதிவாளராக மீன்துறை இயக்குநர் அவர்களும், மேலாண்மை இயக்குநராக மீன்துறை கூடுதல் இயக்குநரும் இணையத்தை நிர்வகித்து வருகின்றனர். இணையத்தின் கட்டுப்பாட்டில் சென்னை, நாகப்பட்டினம், இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் நாகர்கோவில் ஆகிய ஐந்து இடங்களில் திட்ட அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் முக்கிய திட்டங்கள் பின்வருமாறு:

8.1 இயந்திரம் பொருத்தப்பட்ட நாட்டுப்படகுகளுக்கு மானிய விலையில் விற்பனைவரி விலக்களிக்கப்பட்ட தொழிலக மண்ணெண்ணெய் வழங்குதல்.

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த மண்ணெண்ணெயில் இயங்கும் வெளிப்பொருத்தும் இயந்திரம் கொண்ட நாட்டுப்படகுகளுக்கு விற்பனை வரி விலக்களிக்கப்பட்ட மானியத்துடன் கூடிய தொழிலக மண்ணெண்ணெயினை 13 தொடக்க மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மூலம், 2019-20 ஆம் ஆண்டில் 4656 கி.லி. விநியோகிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூ. 30.57 இலட்சம் வருவாய் ஜனவரி 2020 முடிய ஈட்டப்பட்டுள்ளது.

8.2 மீன்பிடி கலன்களுக்கு விற்பனைவரி விலக்களிக்கப்பட்ட டீசல் வழங்குதல்.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தால் நிறுவப்பட்டுள்ள 14 டீசல் விற்பனை

நிலையங்கள் வாயிலாக 2019 - 20 ஆம் ஆண்டில், 18193 கிலோ லிட்டர் விற்பனை வரிவிலக்களிக்கப்பட்ட டீசல், இயந்திரமயமாக்கப்பட்ட நாட்டுப் படகு மற்றும் விசைப் படகுகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ரூ.3.99 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. (ஜனவரி 2020 முடிய)

8.3 பாரம்பரிய மீனவர்களுக்கு மானிய விலையில் குளிர்காப்புப் பெட்டிகள் வழங்குதல்.

2019-20 ஆம் ஆண்டு தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பாரம்பரிய மீனவர்களுக்கு 50 விழுக்காடு மானிய விலையில் 66 குளிர்காப்புப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

8.4 நவீன மீன் விற்பனை நிலையங்கள்

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தால் பொதுமக்களுக்கு தரமான மீன்களை நியாயமான விலையில் வழங்கிடும் பொருட்டு, இராமநாதபுரம், பரமக்குடி, நெய்வேலி, கன்னியாகுமரி, சென்னை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் நவீன மீன் விற்பனை நிலையங்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் ரூ.6.58 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

8.5 ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் (ICDP)

இரண்டாம் ஆண்டு

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட அரசு தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்திற்கு ரூ.3.91 கோடி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி, தேங்காப்பட்டினம் மற்றும் குளச்சல் பனிக்கட்டி உற்பத்தி நிலையம் அமைத்தல், இயந்திரம், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் கொள்முதல் செய்து விநியோகம் செய்ய சுழல் நிதியாக ரூ.3.35 கோடி பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டு உள்ளது.

மூன்றாம் ஆண்டு

மூன்றாம் ஆண்டில் தூத்துக்குடி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் பனிக்கட்டி உற்பத்தி நிலையம் மற்றும் கூட்டுறவு அங்காடிகள் அமைக்க ரூ.2 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளதில், ரூ.1 கோடி பெறப்பட்டு அதற்கான கட்டுமானப்பணி நடைபெற்று வருகிறது.

8.6 பாரம்பரிய நாட்டுப்படகுகளுக்கான மையப் படுத்தப்பட்ட காப்பீட்டுத் திட்டத்தினை செயல்படுத்துதல்

குறைவான சந்தாத்தொகையில் கூடுதல் காப்பீடு பெற்றிட பாரம்பரிய நாட்டுப்படகுகளுக்கு (இயந்திரமயமாக்கப்பட்டவை மற்றும் இயந்திரமயமாக்கப்படாதவை) மையப்படுத்தப்பட்ட காப்பீட்டு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் 100 விழுக்காடு பாரம்பரிய படகுகளை குறைவான காப்பீட்டு சந்தாத் தொகையில் காப்பீடு வரம்பிற்குள் கொண்டுவர இயலும். அதிகபட்ச காப்பீட்டு உறுதித் தொகையுடன், தனிநபர் மற்றும் குழு உறுப்பினர்களுக்கு விபத்துக் காப்புறுதியினையும், ஏனைய அபாயங்களான உடற்காயங்களுக்கும் மருத்துவ உதவியினைப் பெறமுடியும். இத்திட்டத்தின் கீழ் ”டாப்கோபெட்” இணையமானது பாரம்பரிய நாட்டுப்படகு உரிமையாளர்களுக்கும் மற்றும் காப்பீட்டு நிறுவனங்களுக்கும் இடையே ஒரு இணைப்புப் பாலமாகச் செயல்பட்டு மீனவர்களுக்கு உரிய நேரத்தில் சரியான இழப்பீட்டு தொகை பெற்று வழங்கிட உதவும். காப்பீட்டு நிறுவனம், சந்தாத்தொகை மற்றும் காப்பீட்டு

முறைகளையும் இணையம் இறுதி செய்துள்ளது. இம்மைய காப்பீட்டு திட்டத்தின் கீழ் அனைத்து வகை நாட்டுப்படகுகள் 2020-21 ஆண்டிற்குள் காப்பீடு செய்யப்படும்.

8.7 மீனவமகளிருக்கு கடற்பாசியினை வளர்த்திட குறுந்தொகைக் கடன்கள் வழங்குதல்.

இராமநாதபுரம், புதுக்கோட்டை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களிலுள்ள 2000 குடும்பங்களைச் சார்ந்த மீனவ மகளிர் தங்களுடைய வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கு மாற்று வழி வருவாய் ஈட்டும் தொழிலாக கடற்பாசி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். தற்போது மீனவ மகளிர் உள்கடன் அளிப்பவர் மற்றும் கடற்பாசி கொள்முதல் செய்பவர் மூலம் அதிக வட்டிக்கு கடன் பெற்று பாசி வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டு வரும் நிலையில் கடற்பாசி வளர்ப்பில் குறைவான வருவாயை பெறுகின்றனர். மீனவ மகளிருக்கு உதவிடும் வகையில் இணையம் குறைந்தபட்ச வட்டி விகிதத்தில் குறுந்தொகை கடன் வழங்கி, அதன் வாயிலாக கடற்பாசிக்கு கூடுதல் விலை கிடைக்க வழி வகை செய்துள்ளது. இதற்காக மீனவ மகளிர் பயனாளி ஒருவருக்கு ரூ.5,000/- வீதம், மொத்தம் ரூ.50 இலட்சம்

குறுந்தொகைக் கடனாக 1,000 மீனவ மகளிர்களுக்கு குறைந்த வட்டி வீதத்தில், எளிதில் திருப்பிச் செலுத்தக்கூடிய தவணைகளில் வழங்கப்படுகிறது. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

8.8 விரிவாக்கப்பணிகள்

மீன்வளத்துறையில் அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்தும், மீன் உற்பத்தியில் சாதனை படைத்தவர்கள் குறித்தும், சமீபத்திய தொழில்நுட்ப முன்னேற்றங்கள் குறித்த விவரங்கள் அடங்கிய **"மீன்வள களஞ்சியம்"** எனும் ஒரு காலாண்டு செய்திமடலை டாப்கோபெட் வெளியிட்டு வருகிறது,

8.9 மீன்பிடித்துறைமுகம்/ மீன் இறங்கு தளம் ஆகியவற்றில் கூட்டுறவு அங்காடி அமைத்தல்.

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையமானது, மீன்பிடித் துறைமுகம்/ மீன் இறங்கு தளங்கள் ஆகியவற்றில் ரூ.60 இலட்சம் செலவில் கூட்டுறவு பண்டக சாலைகளை, தூத்துக்குடி, தேங்காப்பட்டினம், குளச்சல் மற்றும் சின்னமுட்டம் ஆகிய மீன்பிடித்துறைமுகங்களில் தலா ரூ. 15 இலட்சம் மதிப்பீட்டில் அமைத்து, எரிபொருள், எரிவாயு,

மீன்வலை மற்றும் இதர அத்தியாவசியப் பொருட்களை துறைமுகங்களிலிருந்து மீனவர்கள் இயக்கும் படகுகளுக்கு நியாயமான விலையில் வழங்கி வருகிறது.

8.10 நிதிநிலை

2019-20ஆம் ஆண்டில் இணையத்தில் டீசல், மண்ணெண்ணெய் மற்றும் மீன் விற்பனை நிலையங்கள் வாயிலாக ரூ.182.63 கோடி வரவு செலவினம் மேற்கொள்ளப்பட்டு, நிகர இலாபமாக ரூ.2.30 கோடி (தணிக்கை செய்யப்படாதது) ஈட்டப்பட்டுள்ளது.

9. தமிழ்நாடு மீனவர் நல வாரியம் (TNFWB)

மீனவர்கள் மற்றும் மீன்பிடிப்பு சார்ந்த தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்வதற்கும், அவர்களின் நலத்தினை பேணுவதற்கும், 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீனவர் நல வாரியம் தொடங்கப்பட்டது. இவ்வாரியமானது மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும், மீன்வளத்துறை இயக்குநர் அவர்களை உறுப்பினர் செயலராகவும் கொண்டு செயல்பட்டு வருகிறது. தமிழக

அரசு அவ்வப்போது வாரியத்தின் அலுவல்சாரா உறுப்பினர்களை நியமிக்கும்.

மொத்தம் 4.82 இலட்சம் உறுப்பினர்கள் மீனவர் நலவாரியத்தில் உறுப்பினர்களாக உள்ளனர்.

தமிழ்நாடு மீனவர் நலவாரிய விதிமுறைகளின்படி, தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம் ஆகியவற்றிற்குச் சொந்தமான டீசல் வழங்கு நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்படும் லாபத்தில் வரும் பங்களிப்புத்தொகை, நீர்நிலைகளின் மீன்வள குத்தகையில் 7 விழுக்காடு தொகை, உறுப்பினர் சந்தாத் தொகை ரூ.20/- மற்றும் மேட்டூர் அணை மீன் விற்பனையில் கிலோ ஒன்றுக்கு ரூ.2/- ஆகியவற்றின் மூலம் நிதிப்பங்களிப்பு வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடந்த 01.04.2008 முதல் 29.02.2020 முடிய ரூ.23.49 கோடி சந்தாத் தொகையாக வசூல் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தால் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் பின்வருமாறு:

அட்டவணை: 9

தமிழ்நாடு மீனவர் நல வாரியத்தால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்கள்

வ. எண்	நிவாரணம் / உதவி	தொகை (ரூபாயில்)
1.	விபத்து நிவாரணம்	
(அ)	விபத்தினால் மரணம்	2,00,000
(ஆ)	இரண்டு கைகள் இழப்பு	1,00,000
(இ)	இரண்டு கால்கள் இழப்பு	1,00,000
(ஈ)	ஒரு கை மற்றும் ஒரு கால் இழப்பு	1,00,000
(உ)	இரண்டு கண்களிலும் முற்றிலும் பார்வை இழப்பு	1,00,000
(ஊ)	ஒரு கை அல்லது ஒரு கால் இழப்பு	1,00,000
(எ)	மேலே கண்ட இனங்களில் குறிப்பிடாத வேறு கடுமையான காயம் ஏற்பட்டு உடல் உறுப்பு இழப்பு	50,000

<table>
<tr><td>2.</td><td colspan="3">விபத்தின் காரணமாக அல்லாமல் மீன்பிடிக்கையில் அல்லது அதற்குப் பின் உடனடியாக இறத்தல்</td><td colspan="2">2,00,000</td></tr>
<tr><td>3.</td><td colspan="3">மீன்பிடிக்கையில் காணாமற்போன மீனவர்</td><td colspan="2">2,00,000</td></tr>
<tr><td>4.</td><td colspan="3">இயற்கை மரணம்</td><td colspan="2">15,000</td></tr>
<tr><td>5.</td><td colspan="3">ஈமச்சடங்கிற்கான உதவித் தொகை</td><td colspan="2">2,500</td></tr>
<tr><td rowspan="5">6.</td><td rowspan="2">உறுப்பினர்களின் மகன் மற்றும் மகள் கல்வி உதவித் தொகை</td><td colspan="2">விடுதியில் தங்காதோர்</td><td colspan="2">விடுதியில் தங்கி படிப்பவர்கள்</td></tr>
<tr><td>மாணவர்</td><td>மாண வியர்</td><td>மாண வர்</td><td>மாண வியர்</td></tr>
<tr><td>அ) பத்தாம் வகுப்பு தேர்ச்சி</td><td>1,250</td><td>1,500</td><td>1,250</td><td>1,500</td></tr>
<tr><td>ஆ) பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி</td><td>1,750</td><td>2,000</td><td>1,750</td><td>2,000</td></tr>
<tr><td>இ)தொழிற்பயிற்சி (I.T.I) மற்றும் பல்தொழிற் நுட்ப பயிற்சி (Polytechnic)</td><td>1,250</td><td>1,750</td><td>1,450</td><td>1,950</td></tr>
</table>

	ஈ) இளங்கலை பட்டப்படிப்பு	1,750	2,250	2,000	2,500
	உ) முதுகலை பட்டப்படிப்பு	2,250	2,750	3,250	3,750
	ஊ) தொழிற் கல்வி, இளங்கலை, சட்டம், பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற் கல்விகள்	2,250	2,750	4,250	4,750
	எ) முதுகலை தொழிற் கல்விகள்	4,250	4,750	6,250	6,750
7.	திருமண உதவி			ஆண்	பெண்
	அ) உறுப்பினரின் திருமண உதவி ஆ) உறுப்பினரின் மகன் அல்லது மகள் திருமணம்			3,000 3,000	5,000 5,000

8.	மகப்பேறு / கருச்சிதைவு / கருக்கலைப்பு உதவித் தொகை	
	i) மகப்பேறு (மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/- வீதம் ஆறு மாதங்கள்)	6,000
	ii) கருச்சிதைவு	3,000
	iii)மருத்துவ ரீதியிலான கருக்கலைப்பு	3,000

9.1. இணையதள வழி சேவை

தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தால் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டங்களும் தற்போது ஒரே குடையின்கீழ் www.tnfwb.tn.gov.in என்ற வலைத்தளத்தின் வாயிலாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த வலைதளத்தை பயன்படுத்த ஒவ்வொரு மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்திற்கும் பயனாளர் குறியீடு (User ID) தனித்தனியே வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகங்களில் இருந்து தமிழ்நாடு மீனவர் நலவாரிய உறுப்பினர்களிடம் இருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் நேரடியாக வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகின்றது.

இப்புதிய நடைமுறையினால், பல நகல்களில் படிவங்கள் மற்றும் ஆவணங்கள் சரிபார்ப்பு, பரிசீலனை மற்றும் பரிந்துரைக்கும் பணி போன்ற தினசரி அலுவலக நடைமுறைகள் தவிர்க்கப்பட்டு, துரிதமாக, காலவிரயம் இன்றி மின்னணு முறை மூலம் விண்ணப்பிக்க முடியும். மேலும் மின்னணு பணப்பரிமாற்றம் மூலம் பயனாளிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக நிவாரணத்தொகை வழங்கப்படுகிறது. தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தின் திட்டங்களை வலைதளத்தின் மூலம் மின்னணு முறையில் வழங்கப்படுவதால், விண்ணப்பத்தின் பரிசீலனை குறித்த நிலையினை பயனாளர்களே நேரடியாகக் கண்டறியும் வகையில் வெளிப்படைத்தன்மையினை கொண்டுள்ளது. இந்த வலைதளத்தின் மூலம் பெறப்படும் சேவைகள் அனைத்தும் கைப்பேசியின் மூலம் இயக்கிப் பெற்றிடும் அளவிற்கு தமிழ்நாடு மீனவர் நலவாரிய சேவைகள் அனைத்தும், மக்களுக்குச் சேரும் வகையில் மிகவும் எளிமையாக்கப்பட்டுள்ளது.

- 2019-20ஆம் ஆண்டில் தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தின் வாயிலாக பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் 2863 கேட்பு விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, ரூ.3.38 கோடி நிவாரணம் தேசிய மின்னணு பணப் பரிமாற்றம் (NEFT) வாயிலாக வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக் கழகத்தில் பி.எப்.எஸ்.சி/ பி.டெக், (Fisheries Engineering) படிப்பதற்கு மீனவர் நலவாரிய உறுப்பினர்களின் பிள்ளைகள் 9 பேருக்கு தமிழ்நாடு மீனவர் நலவாரியத்தின் வாயிலாக கல்விக்கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. 2019-2020 ஆம் ஆண்டு கல்விக் கட்டணமாக ரூ.5,60,125/- தொகை வழங்கப்பட்டுள்ளது.இத்திட்டம் 2020-21 ஆம் நிதியாண்டிலும் செயல்படுத்தப்படும்.

10. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம்

(Tamil Nadu Fisheries Development Corporation Limited)

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது பொதுத்துறை நிறுவனமாக நிறுவனங்களின் சட்டத்தின் கீழ் 1974 ஆம் ஆண்டு தமிழக அரசால் பதிவுசெய்யப்பட்டது.

தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது, பல்வேறு வணிக ரீதியிலான செயல்பாடுகளான மீன் விற்பனை, கடல் மீன் உணவகங்கள், டீசல் எரியெண்ணெய் / மண்ணெண்ணெய் விற்பனை, நீர்த்தேக்க மேலாண்மை முதலியன வாயிலாக 2020-21 ஆம் நிதியாண்டில் ரூ.572.41 கோடி மதிப்பிலான மொத்த விற்பனை மற்றும் ரூ.13 கோடி இலாபத்தினை ஈட்டிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2020-21 ஆம் நிதியாண்டில் எதிர்பார்க்கப்படும் வரவு செலவு ரூ.580 கோடியாகவும் ரூ.14 கோடியினை இலாபமாக ஈட்டிட இலக்காக கொண்டுள்ளது.

இக்கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மீன்துறை இயக்குநர் ஆவார். இக்கழகத்தின் களப்பணிகள் பொது மேலாளர், முதுநிலை மேலாளர்கள், மேலாளர்கள், துணை மேலாளர்கள் மற்றும் உதவி மேலாளர்கள்

ஆகியோருடன் மொத்தம் 100 நிரந்தர பணியாளர்கள் மற்றும் 270 தனியார் சேவை மையப் பணியாளர்கள் ஆகியோரால் நிர்வகிக்கப்படுகிறது. இக்கழகத்தினுடைய பணிகளை விரிவாக்குவதற்கு கூடுதல் பணியாளர்களை நியமனம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 8 நீர்த்தேக்கங்களில் வளர்ந்த மீன் விரலிகளை அறிவியல் ரீதியிலான முறைகளை பின்பற்றி இருப்பு செய்து ஆண்டுதோறும் சுமார் 1000 டன்கள் அளவிற்கு உள்நாட்டு மீன்களை உற்பத்தி செய்கிறது.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகமானது சாத்தனூர், ஆழியார், அமராவதி, திருமூர்த்தி மற்றும் பாலாறு-பொருந்தாலாறு ஆகிய நீர்த்தேக்கப் பகுதிகளில் 3.83 ஹெக்டேர் பரப்பளவில் 5 மீன்குஞ்சு வளர்ப்புப் பண்ணைகளை கொண்டுள்ளது. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் உற்பத்தி செய்யப்படும் தரம் வாய்ந்த மீன் குஞ்சுகள், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மேலாண்மையிலுள்ள நீர்த்தேக்கங்களில்

இருப்பு செய்யப்படுவதுடன், தனியார் மீன் பண்ணைகளுக்கும் விநியோகிக்கப்படுகிறது. மேலும், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகமானது ஆழியார் மற்றும் திருமூர்த்தி நகர் ஆகிய இடங்களில் வண்ண மீன் உற்பத்தி நிலையங்களை அமைத்துள்ளது.

மாநிலத்தில் சில்லறை மீன் விற்பனை நிலையங்கள் மற்றும் நடமாடும் மீன் விற்பனை நிலையங்கள் அமைத்து, தரமான மீன்கள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட கடல் மீன் உணவு பொருட்களை நியாயமான விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்து வருகிறது. மீன் விற்பனையினை விரிவாக்கம் செய்யும் நோக்கத்தில் பல்வேறு நகரங்களில் அதிக எண்ணிக்கையிலான நவீன மற்றும் நடமாடும் மீன் சில்லறை விற்பனை நிலையங்களை அமைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இக்கழகமானது மாநிலத்தின் கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ள மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களில் 31 டீசல் எரியெண்ணெய் விற்பனை நிலையங்களையும் மற்றும் 10 மண்ணெண்ணெய் விற்பனை நிலையங்களையும்

அமைத்து வரிவிலக்களிக்கப்பட்ட உயர்வேக டீசல் எரியெண்ணெய் மற்றும் மானிய விலையிலான மண்ணெண்ணையினை மீன்பிடி விசைப்படகுகளுக்கும் மற்றும் இயந்திரமயமாக்கப்பட்ட பாரம்பரிய நாட்டுப் படகுகளுக்கும் விநியோகித்து வருகிறது. புதியதாக அமைந்துள்ள மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்குதளங்களில் கூடுதல் டீசல் எரியெண்ணெய் விற்பனை நிலையங்களை தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது அமைத்து வருகிறது.

10.1 சேத்துப்பட்டு பசுமைப் பூங்கா மேலாண்மை

சேத்துப்பட்டு பசுமைப் பூங்காவின் பராமரிப்பு மற்றும் செயல்பாட்டினை தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது மேற்கொண்டு வருகிறது. பசுமைப் பூங்காவானது படகுக் குழாம், தூண்டில் மீன் பிடிப்பு, பன்னடுக்கு வாகன நிறுத்தகம், சிறுவர் பூங்கா, பொழுது போக்கு மையம், உணவகம், நடைபயிற்சிப்பாதைகள், சிறுவர்கள் விளையாட்டுப் பகுதி, முப்பரிமாணத் திரையரங்கு ஆகிய வசதிகளுடன் பெரு அளவிளான பார்வையாளர்களை ஈர்த்து வருகிறது. கூடுதலாக பொதுமக்களை கவர்ந்திடும் வகையில் மீன்காட்சியகம்

மற்றும் நீர்வாழ் உயிரின மெய்நிகர் காட்சியகம் (Aquarium-cum-Aquatic Virtual Reality Centre) ரூ.6.93 கோடி திட்ட மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு சராசரியாக 2 இலட்சம் பார்வையாளர்கள் பசுமைப்பூங்காவிற்கு வருகைபுரிகின்றனர். பசுமைப்பூங்காவில் கூடுதல் பொழுதுபோக்கு வசதிகளை அறிமுகப்படுத்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

10.2 கடல் மீன் உணவுப் பொருட்களுக்கான மைய சமையலறைக் கூடம் மற்றும் பயிற்சி நிலையம்

சென்னை, இராயபுரத்தில் ரூ.3.04 கோடி மதிப்பீட்டில் உடனடி உண்பதற்கும், உடனடி சமைப்பதற்கும் ஏதுவான மதிப்பூட்டப்பட்ட மீன் உணவுப் பொருட்களை தயாரித்திடவும் மற்றும் விற்பனை மேற்கொள்வதற்கும் சுயஉதவி மகளிர் குழுவிற்கான பயிற்சி வசதிகளுடன் கூடிய மைய சமையலறைக் கூடம் ஒன்றினை தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது அமைத்துள்ளது. மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு மைய சமையற்கூடத்திலுள்ள வசதிகளை பயன்படுத்தி மதிப்பூட்டப்பட்ட சுவையான

மீன்உணவு வகைகளை தயாரிப்பதில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

10.3 சென்னையில் இணையதளம் மூலம் மீன் விற்பனைவசதிகளை ஏற்படுத்துதல்

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகமானது கடல் மீன் உணவுப் பொருட்களை உண்பதினால் உடல் நலனுக்கு ஏற்படக்கூடிய நன்மைகள் குறித்த விழிப்புணர்வை பொதுமக்கள் உணரும் வகையில் பெருமுயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. சென்னை, மீன் விற்பனைப் பிரிவின் வாடிக்கையாளர்களின் வசதிக்காக இணையதளம் மூலமாக மீன் விற்பனை செய்யும் கட்டமைப்பு வசதியை உருவாக்கியுள்ளது. பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட வரவேற்பினைத் தொடர்ந்து இணையதள விற்பனையை புதுப்பிக்கப்பட்டதுடன், கூடுதல் வசதிகளுடன் கைபேசி செயலியினையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

10.4. புதிய திட்டங்கள்

10.4.1 மீன் தீவனம் தயாரிக்கும் ஆலையினை இயக்குதல்

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தஞ்சாவூர், அச்சம்பட்டியில் தமிழ்நாடு அரசு மீன்வளத்துறையால் நிர்மாணிக்கப்பட்ட மீன் தீவனத் தயாரிப்பு ஆலையினை தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் பொறுப்பேற்று, 23.08.2018 முதல் மீன் தீவனத் தயாரிக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதுநாள் வரை 170 டன் மீன் தீவனம் தயாரிக்கப்பட்டு துறையின் மீன் பண்ணைகளுக்கும், மற்றும் தனியார் மீன் பண்ணைகளுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளது.

10.4.2 தேனாம்பேட்டையில் நவீன கடல் மீன் உணவகம்

சென்னை தேனாம்பேட்டையிலுள்ள கடல் மீன் உணவகமானது அமர்ந்து, உணவருந்தும் வசதிகளுடன் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தால் நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

10.4.3 தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தினுடைய தயாரிப்புகளை "வணிக அடையாளப் படுத்துதல்"

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகமானது அதனுடைய திட்டங்களையும், செயல்பாடுகளையும் பொதுமக்களிடைய பிரபலபடுத்திடும் பொருட்டு "**இது நம்ம ஊரு மீன்கள்**" என்ற வாசகத்துடன் கூடிய புதிய வணிக அடையாள சின்னம் மற்றும் நிறுவன விளம்பர படம் ஆகியவற்றை அறிமுகப்படுத்தி சமூக ஊடகங்கள் மூலம் பிரபலப்படுத்தும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

2018-19 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமானது மாநில அரசுக்கு ஈவுத்தொகையாக ரூ.2.57 கோடியும் மற்றும், மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு ரூ.1 கோடியும் வழங்கியுள்ளது.

மேலும், 2018-19 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் ரூ.1.10 கோடியை தனது பங்களிப்பாக தமிழ்நாடு மீனவ நலவாரியத்திற்கு வழங்கியதுடன், ரூ.24.76 இலட்சத்தினை 2019-20 ஆம் ஆண்டிற்கு பெரு நிறுவன சமூக பொறுப்பு நிதி பங்களிப்பிற்கு ஒதுக்கீடு செய்துள்ளது.

11. தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் (TNJFU)

தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகமானது தமிழ்நாட்டில் தொழில்சார் மீன்வள தொழில் கல்வியை வழங்கிடவும், ஆராய்ச்சி மற்றும் பயிற்சிகளின் வாயிலாக மீன் உற்பத்தியை அதிகரித்து மீன்வளத்தை முன்னேற்றும் நோக்கத்தோடும், மாநில அரசால் மாநில வேளாண்மைப் பல்கலைக்கழக அமைப்பு மற்றும் பாடத்திட்டத்தைத் தழுவி தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகச் சட்டம், 2012-ன்படி, 19.06.2012 அன்று நாகப்பட்டினத்தில் நிறுவப்பெற்றது. மேலும், அரசாணை (நிலை) எண்:21, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை நாள்: 16.02.2018-ன்படி இப்பல்கலைக்கழகத்தின் பெயர் தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

11.1 தொலைநோக்குப் பார்வை

"மீன்வள அறிவியலைப் பயன்படுத்தி உணவு, ஊட்டச்சத்து மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்".

11.2 கடமைகள்

மீன்வள அறிவியல் சம்பந்தமான கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் ஆகியவை இப்பல்கலைக்கழகத்தின் கடமைகளாகும்.

11.3 நோக்கங்கள்

- மீன்வள அறிவியல், மீன்வள பொறியியல், அடிப்படை அறிவியல், உணவு மற்றும் ஊட்டச்சத்து அறிவியல் ஆகிய புலங்களில் திறன் சார்ந்த தொழில்நுட்பக் கல்வியை வழங்குதல்

- மீன்வளப் பட்டதாரிகளுக்கு பல்வேறு துறைகளில் மேற்படிப்பு வாய்ப்புகளை உருவாக்குதல்

- மீன்வள அறிவியலில் ஒழுங்குபடுத்தப்பட்ட ஆராய்ச்சிகளைக் கொண்டு அதிநவீன தொழில்நுட்பங்களை உருவாக்குதல்

- பரவலான மற்றும் மேம்படுத்தப்பட்ட உபகரணங்கள் மற்றும் மாதிரிகளைக் கொண்டு பயனுள்ள விரிவாக்க சேவையினை வழங்குதல்

- தொழில்முனைவோர் மற்றும் கல்வியாளர்களுடன் இணைந்து சிறப்பான தொழில் காப்பக சூழலை ஏற்படுத்த, மாறுபட்ட மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களை உருவாக்குதல்
- மாநிலத்தில் உள்ள மீன்வளர்ப்போர், மீனவர்கள் மற்றும் வேலையில்லா இளைஞர்களுக்கு மீன்வள தொழில்சார் கல்வியைக் கொண்டு தொழில்முனையும் திறனை மேம்படுத்துதல்

11.4 பணி அமைப்பு

தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் பணியமைப்பு பின்வரும் அட்டவணை -10 ல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை: 10

வ.எண்.	பதவி	எண்ணிக்கை
1.	துணைவேந்தர்	1
2.	பதிவாளர்	1
3.	பல்கலைக்கழக அதிகாரி	13
4.	பேராசிரியர்	7
5.	இணைப் பேராசிரியர்	34
6.	உதவிப் பேராசிரியர்	113
7.	உதவி நூலகர்	3
8.	உடற்கல்வி உதவி இயக்குநர்	1
9.	ஆசிரியரல்லாத பணியாளர்	271
	மொத்தம்	**444**

11.5 கல்வி செயல்பாடுகள்

மறைந்த முதல்வர் டாக்டர். ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையின்படி, 2012-ம் ஆண்டில் நாகப்பட்டினத்தில் நிறுவப்பட்ட மீன்வளப் பல்கலைக்கழகமானது, மீன்வளக் கல்வியை வழங்குவதில் தேசிய அளவில் மட்டுமல்லாது உலகளவிலும் பெரும் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

மேலும், இப்பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரியான பொன்னேரியிலுள்ள டாக்டர். எம்.ஜி.ஆர் மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் 2019 ஆம் ஆண்டில் இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.

அ) வேளாண்மை மற்றும் பிற வேளாண்சார் துறைகளை ஒப்பிடும்போது, மீன்வளர்ப்புத்துறையின் ஒட்டுமொத்த ஆண்டு வளர்ச்சி விகிதம் அதிகமாக உள்ளதால், மீன்வளப் பட்டதாரிகளின் தேவை தேசத்தின் மொத்த வேளாண் பட்டதாரிகளின் எண்ணிக்கையில் குறைந்த பட்சம் 10 விழுக்காடாவது இருத்தல் அவசியம். மாநிலம் மற்றும் தேசிய தேவையினைப் பூர்த்தி செய்திட தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைகழகம் சரியான இலக்கை நோக்கி செல்கிறது.

ஆ) இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமம் நடத்திய அகில இந்திய முதுநிலை நுழைவுத் தேர்வில் இப்பல்கலைக்கழகத்தின் பதினான்கு மாணவர்கள் தர வரிசையில் முதன்மை பெற்றுள்ளனர். தொழில்முறை

மீன்வளப் பட்டதாரி மன்றம் நடத்திய தேர்வில் இப்பல்கலைக்கழகத்தின் மாணவர் இந்த ஆண்டிற்கான “இந்தியாவின் தலைசிறந்த மீன்வளப் பட்டதாரி” எனும் விருதினைப் பெற்றுள்ளார். மாணவர்களின் போட்டித் திறனை வளர்க்கும் இத்திட்டத்தை தொடர்ந்து இப்பல்கலைக்கழகம் செயல்படுத்தி வருகிறது.

11.6 கல்வி நிலையங்கள் மற்றும் கல்விக்கான உட்கட்டமைப்பு வசதிகள்

11.6.1 தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் உறுப்பு நிலையங்கள்

தற்போது இப்பல்கலைக்கழகத்தில் நான்கு புலங்கள் உள்ளன. இப்பல்கலைக்கழகத்தில் பி.எப்.எஸ்.ஸி (இளநிலை மீன்வள அறிவியல்), பி.டெக்., (மீன்வளப் பொறியியல்), பி.டெக்., (ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல்), பி.டெக்., (மீன்வள கடல்சார் தொழில்நுட்பம்) பி.டெக், (இளநிலை உயிர் தொழில்நுட்பம்), பி.பி.ஏ., (இளநிலை மீன் வணிக மேலாண்மை) பி.டெக்., (இளநிலை உணவு தொழில்நுட்பம்) ஆகிய 7 தொழிற் படிப்புகள் வழங்கப்பட்டுவருகிறது. இப்படிப்புகள் 11 தொழிற்

கல்லூரிகள் மூலம் வழங்கப்படுகின்றன. மேலும், 4 தொழிற்சார் கல்லூரிகள் மூலம் இளநிலை தொழிற்சார் பட்டப்படிப்புகள்; மீன்பிடி தொழில், மீன்வளர்ப்பு, மீன்நல மேலண்மை மற்றும் மீன் பதனம் போன்றவற்றில் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் 45 உறுப்பு நிறுவனங்கள் (ஒப்புமை ஆய்வகம் உட்பட) தமிழகம் முழுவதும் செயல்பட்டு வருகின்றன. 2019-20 ஆம் ஆண்டில் இளநிலைப் படிப்புகளில் 461 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். 90 மாணவர்கள் பட்டம் பெற்று வெளியேறியுள்ளனர். இப்பல்கலைக்கழகத்தில் 11 எம்.எப்.எஸ்ஸி படிப்பும், இரண்டு எம்.டெக் படிப்பும், ஒரு எம்.பி.ஏ படிப்பும் வழங்கப்படுகின்றது. மேலும், 12 முனைவர் பட்டபடிப்பும் வழங்கப்படுகிறது. இதில், 37 முதுநிலை மாணவர்கள் மற்றும் 13 முனைவர் பட்டப்படிப்பு மாணவர்கள் சேர்ந்துள்ளனர். 2019-20ல், முதுநிலை படிப்பு மற்றும் முனைவர் படிப்பை முறையே 30 மற்றும் 5 மாணவர்கள் முடித்து பட்டம் பெற்றுள்ளனர்.

11.6.2. கல்விக்கான புதிய உட்கட்டமைப்பு வசதிகள்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 2019-20 ஆண்டில் ரூ.47.5 கோடி மதிப்பில் 7 புதிய கட்டடங்களை துவங்கிவைத்தார். அதன் விவரங்கள் வருமாறு: நாகப்பட்டினத்தில், மீன்வளப் பொறியியல் கல்லூரிக்கான கட்டடங்கள் மற்றும் பல்கலைக்கழக வளாகத்தில் நூலக கட்டடம், வகுப்பறைகள் மற்றும் கருத்தரங்கு கூடம், இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் உள்ள மீன்வள பயிற்சி நிலையத்திற்கு கல்விக்கூடம்; சென்னை மாதவரத்தில் வண்ணமீன் வானவில் விற்பனை வளாகம் மற்றும் காட்சியகம்; சென்னை வாணியஞ்சாவடியில் உள்ள மீன்வளப் பட்ட மேற்படிப்பு நிலையத்தில் கூடுதல் கல்விக்கூட உட்கட்டமைப்பு மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம் தலைஞாயிறில் டாக்டர். எம்.ஜி.ஆர். மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நிருவாகக் கட்டடங்கள்.

11.6.3. தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப இயக்குனரகங்கள்

இப்பல்கலைக்கழகத்தில் 5 தொழில்நுட்ப இயக்குனரகங்கள் முறையே ஆராய்ச்சி இயக்குனரகம்,

விரிவாக்கக் கல்வி இயக்குனரகம், வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு இயக்குனரகம் மற்றும் அதன் ஏழு உறுப்பு மையங்கள், மீன்வளர்ப்புத் தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் தொழில் காப்பக இயக்குனரகம் மற்றும் அதன் மூன்று மையங்கள், மீன்பிடி தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் தொழில் காப்பக இயக்குனரகம் மற்றும் அதன் மூன்று மையங்கள் இயங்கி வருகின்றன.

11.6.4. தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைகழகத்தின் முக்கிய கல்விச் சாதனைகள்

நாட்டின் பிற மீன்வளப் பல்கலைக்கழகங்கள் மற்றும் மீன்வளக் கல்லூரிகளுடன் ஒப்பிடுகையில் மொத்த மாணவர் சேர்க்கை விகிதாச்சாரத்தை கூடுதலாக எட்டியுள்ளது. பிற மீன்வளப் பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடுகையில் அதிகமான பாடத்திட்டங்களை வழங்கும் ஒரே பல்கலைக்கழகம் தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் ஆகும் (11 இளநிலை, 14 முதுநிலை மற்றும் 11 முனைவர் பாடத்திட்டங்கள்). இப்பல்கலைக்கழகம், மீன்வளத்தில் நிபுணத்துவம் பெற்ற பொறியியல் பட்டதாரிகளை

உருவாக்குகிறது. மேலும், இப்பல்கலைக்கழகம் பல்வேறு தொழில்நுட்ப பூங்காக்களையும் உருவாக்கியுள்ளது.

11.6.5. பல்கலைக்கழகம் வழங்கும் பாடத்திட்டங்கள்

தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகமானது தற்போதுள்ள புதிய வளாகத்தில் செப்டம்பர் 2018 முதல் செயல்பட்டு வருகிறது. பல்கலைக்கழகம் தொடர்ந்து விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியக்குழுவின் ஒப்புதலோடு, தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் நான்கு தொழில்சார் பாடத்திட்டங்களை மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்புத் தேவைகளை பூர்த்தி செய்திட அறிமுகப்படுத்தியுள்ளது.

இக்கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை கடந்த இரண்டு ஆண்டுகளில் மும்மடங்கு உயர்ந்து, தற்போது 1124 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இப்பல்கலைக்கழகத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட 171 ஆசிரியர் பணியிடங்களில், தற்போது 106 ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். இப்பல்கலைக்கழகம், தமிழ்நாடு மற்றும் நாட்டின் சிறந்த பல்கலைக்கழகங்களிலிருந்து ஆசிரியர்கள் மற்றும்

சிறந்த ஆராய்ச்சியாளர்களை பணியாற்ற ஈர்த்து வருகிறது.

11.6.6. புதிய அறக்கட்டளை விருதுகள்

பல்வேறு மீன்வளப் பாடத்திட்டத்தில் மாணவர்களை ஊக்குவிக்கவும், அவர்களின் கல்வித்திறனை அங்கீகரிக்கவும் தற்போதுள்ள 40 விருதுகளுடன், கூடுதலாக 10 விருதுகள் வழங்கப்படுகின்றன.

11.7. ஆராய்ச்சி செயல்பாடுகள்

- **ஆராய்ச்சி**

பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள் 4P's Cell (ஆராய்ச்சிக் கட்டுரைகள், ஆராய்ச்சித் திட்டங்கள்; மீன்பொருட்கள் உற்பத்தி மற்றும் காப்புரிமை) வழிகாட்டுதலின்படி செயல்பட்டு வருகிறது. குறிப்பாக இந்த வருடமும் இவ்வழிகாட்டுதல்கள் நடைமுறையில் உள்ளன. தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழக ஆசிரியர்களால் தரமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு, முடிவுகள் சிறந்த ஆய்விதழ்களில்

வெளியிடப்பட்டுள்ளன. இவ்வாண்டு, பல்கலைக்கழகத்தில் 132 அறிவியல் ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் தொழில்நுட்ப அறிக்கைகள் சமர்பிக்கப்பட்டன. இது கடந்த ஆண்டுகளை விட அதிகமாகும். இவ்வாறான ஆராய்ச்சிச் சாதனைகள், பேராசிரியர்களின் பணி முன்னேற்றத்திற்கும், பதவி உயர்வுக்கும் அளவு கோலாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

- **தொழில்நுட்பம் மற்றும் காப்புரிமைகள்**

தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தில் 10 காப்புரிமைகள் (புதிய கண்டுபிடிப்புகள்) பல்வேறு நிலைகளில் அனுமதி பெறத்தக்க நிலையில் உள்ளன. ஏற்கனவே, பல்கலைக்கழக தொழில் நுட்பங்களுக்குச் சமர்பிக்கப்பட்ட 4 காப்புரிமைகள் இன்னும் சில மாதங்களில் அனுமதி பெறும் நிலையில் உள்ளது. இவ்வாண்டு இரண்டு புதிய காப்புரிமைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- **உருவாக்கப்பட்டுள்ள ஆராய்ச்சி உட்கட்டமைப்புகள்**

மீன்வள முதுநிலை பட்ட மேற்படிப்பு நிலையம், வாணியஞ்சாவடி வளாகத்தில் மீன் உணவு மற்றும் தீவன பகுப்பாய்வு ஒப்புமை ஆய்வுக்கூடம் மற்றும் மாதவரம் வளாகத்தில் நீர்வாழ் உயிரின நல ஒப்புமை ஆய்வுக்கூடம் உருவாக்கப்பட்டுள்ளன. மாதவரம் வளாகத்திலுள்ள மீன்வளர்ப்பிற்கான நீர் மறுசூழல் அமைப்பு ஒரு தனித்தன்மையான வசதியாகும். மாதவரம் மற்றும் தஞ்சாவூர் மையத்தில் நடமாடும் மீன் நல ஆய்வுக்கூடங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மாதவரம் வளாகத்தில் உள்ள "வெளிவளாக உயிர்க்கூழ்மத்திரள் தயாரிப்பு பூங்கா" முதலாவதாக உருவாக்கப்பட்டுள்ளன.

- **தற்பொழுது செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், பின்வரும் மூன்று புதிய திட்டங்கள் ரூ.5.2 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளன:

i. கடற்பாசி வளர்ப்பு தொழில்நுட்பம் உருவாக்கி, தொழில்நுட்பப் பரிமாற்றம் வாயிலாக இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் கரையோர மீனவர்களுக்கு

மாற்று வேலைவாய்ப்பு உருவாக்குதல் (ரூ.2.51 கோடி)

ii. காவிரி டெல்டா பகுதிகளில் மீன்வளர்ப்போருக்கு மீன்வளர்ப்பு சேவை மையம் ஏற்படுத்துதல் (ரூ.1.39 கோடி)

iii. ஈரோடு மாவட்டத்தில் உள்ள உள்நாட்டு மீன்வளர்ப்போருக்கான விவசாயத்துடன் ஒருங்கிணைந்த மீன்வளர்ப்பு மாதிரி அமைப்புகளை ஏற்படுத்துதல். (ரூ.1.30 கோடி)

தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் நிதியுதவியுடன் பின்வரும் மூன்று திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

i. தஞ்சாவூர், பறக்கை மற்றும் பவானிசாகர் ஆகிய மூன்று இடங்களில் மீன்வள மையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன (ரூ.60 இலட்சம்)

ii. உயிர்க்கூழ்மத்திரள் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதன் மூலம் வனாமி இறால் வளர்ப்பிற்கான சூழலுக்கேற்ற தீவனம் உருவாக்குதல் (ரூ.50 இலட்சம்)

iii. மாதவரத்தில் உள்ள நீர்வாழ் உயிரின வானவில் தொழில்நுட்பப் பூங்காவில் செயல்பட்டு வரும் தொழிற்காப்பகங்களுக்கு நீர் மறுசுழற்சி முறையில் மீன்வளர்ப்பு வசதியை பயன்படுத்தி மீன்குஞ்சு பொரிப்பகம், நாற்றாங்கால் மற்றும் வளர்ப்புக் குளங்களில் செயல்விளக்க மாதிரிகளை நிறுவுதல் (ரூ.50 இலட்சம்)

உயிரி தொழில்நுட்பத்துறை, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை மற்றும் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர கட்டுப்பாட்டு ஆணையம் மூலம் கீழ்கண்ட ஆராய்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

i. உயிர்க்கூழ்மத்திரள் முறையில் ஆரோக்கியமான இறால் மற்றும் கிப்ட் திலேப்பியா வளர்ப்பு: நிலையான இயக்கமுறை மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு (ரூ.57.93 இலட்சம்)

ii. மீன் எலும்புகளிலிருந்து பெறப்பட்ட கொலாஜன் பெப்டைடுகளின் எதிர் எலும்புப்புரை பண்புகளின் உயிரியல்பு ஆய்வு (ரூ.36.07 இலட்சம்)

iii. மீன்பதன கழிவிலிருந்து பெறப்பட்ட பயோபாலிமர் மற்றும் பயோஅட்ராக்டண்ட் கொண்டு தூண்டில் மீன்

பிடிப்பிற்கான செயற்கை இரை உருவாக்குதல் (ரூ.44.56 இலட்சம்)

iv. மன்னார் வளைகுடா பகுதியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட *ஃபியோடக்டைலம் ட்ரைக்கார்னுடம்* என்னும் கடல் நுண்பாசியிலிருந்து அய்கோசாபெண்டாயினோயிக் அமில உற்பத்தி (ரூ.41.86 இலட்சம்)

v. காலநிலை மாற்றத்தினால் கடல் உணவு பாதுகாப்பில் *விப்ரியோ வல்னிஃபிகஸ்* பாக்டிரியாவின் மறு எழுச்சி (ரூ.39.67 இலட்சம்)

vi. இந்திய கடலோரங்களில் துடுப்பு மற்றும் ஓடுள்ள மீனினங்களை கண்காணித்தல் மற்றும் சாத்தியமான தடுப்பு நடவடிக்கைகள் (ரூ.9.52 இலட்சம்)

சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து பல்கலைக்கழகம் தற்போது இயக்கும் திட்டங்கள் பின்வருமாறு:

i. வெள்ளை இறால்களில் *(பினேயஸ் வனாமி)* செயல்திறனை அதிகரிப்பதில் லைஸோஃபாஸ்ஃபோலிபிட் சார்ந்த ஊட்டச்சத்து உள்ளிழுக்கும் மேம்படுத்தியின் விளைவு

ii. வெள்ளை இறால்களின் வளர்ச்சித் திறன் மற்றும் நோய் எதிர்ப்பு திறனை மூலப்படிமங்களின் (இம்யுனோமாடுலேட்டர்ஸ்) மூலம் அதிகரிப்பதன் விளைவு

iii. வெள்ளை இறால்களின் வளர்ச்சித் திறனை மேம்படுத்துதலில் குரோத் பிளஸ்® மற்றும் லிப்டோஃப்ரை® ஆகியவற்றின் பங்கு

iv. நைல் திலேப்பியாவின் *(ஓரியோகுரோமிஸ் நைலோடிகஸ்)* வளர்ச்சியில் பைடேஸ் நொதிகளை உணவுகளில் கூடுதலாக சேர்ப்பதன் விளைவுகளை ஆராய்தல்

v. இறால்களின் செயல்திறனை அதிகரிப்பதில் BgMOS® மற்றும் ஆக்டிவோ® திரவப் பொருட்களின் பங்கு

11.8 விரிவாக்கக் கல்வி

பல்கலைக்கழகத்தில் மீனவர்கள் மற்றும் மீன்வளர்ப்போரின் தேவைக்கிணங்க 7 மீன்வள ஆய்வகங்கள், 3 மீன்வள கள ஆய்வகங்கள், 4 மூலக்கூறு கண்டறியும் ஆய்வகங்கள், 3 உணவுத் தர ஆய்வகங்கள் மற்றும் 1 மீன் தீவன தர ஆய்வகம் ஏற்படுத்தப்பட்டு சீரிய முறையில் இயங்கி வருகின்றன.

இந்த கட்டமைப்புகள் மூலம் இதுவரை 514 மீன் பண்ணையாளர்களும், 16 கடல் உணவு பொருள் ஏற்றுமதியாளர்களும் பயன்பெற்றுள்ளனர்.

அரசின் உதவியுடன் உருவாக்கப்பட்ட வசதிகளுள் சில பின்வருமாறு:

i. காப்பகம் / பங்குதாரர்களுக்கான மாதிரி கட்டமைப்பு சிறப்பு செயலாக்க அலகு

ii. ‘கயலகம்’ என்ற பெயரில் மீன் விற்பனை நிலையம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது

iii. கடலில் மாதிரி கூண்டுகள் அமைத்து மீன்வளர்ப்பு தொடங்கப்பட்டுள்ளது

iv. மீன்வள அறிவியலில் கூட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளவும் பல்கலைக்கழகங்களுக்கிடையே மாணவர் பரிமாற்றம் மேற்கொள்ளவும் மற்றும் இளங்கலை மாணவர்கள் வெளிநாட்டுப் பயிற்சி பெறுவதை ஊக்குவிப்பதற்காகவும் பன்னாட்டு பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளது.

11.9 டிஜிட்டல், பசுமை மற்றும் தூய்மையான பல்கலைக்கழக வளாக முயற்சி

பல்கலைக்கழக வளாகம் நல்ல தரத்துடன் செயல்பட பல்வேறு நடவடிக்கைகள் வருடம்தோறும் எடுக்கப்பட்டு வருகிறது. பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் மற்றும் வளாகங்களை தூய்மையாக மற்றும் பசுமையானதாக மாற்ற புதிய திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. தமிழக அரசின் வழிகாட்டுதலின்படி தரமான வளாக சூழலை மேம்படுத்த பல்கலைக்கழக தலைமையிட கட்டடங்களில் சூரிய ஒளி மின்சக்தி சேமிப்பு அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பவானிசாகர் வளங்குன்றா நீர்வாழ் உயிரி மையப் பண்ணை, சூரிய ஒளி மின்சக்தி கொண்டு முழுமையாக இயக்கப்படுகிறது. மையத்தின் கட்டடங்களின் பகுதி மின் தேவை சூரிய ஒளி மின் சக்தி கொண்டு பூர்த்தி செய்யப்படுகிறது. இத்தகைய முயற்சி பிற வளாகங்களிலும் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழக வளாகத்தில் காற்றாடி மின் உற்பத்தி நிலையம் விரைவில் ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலமாக

ஒரு பசுமையான வளாகம் உருவாகும். மேலும், புதிதாக கட்டப்பட்டுள்ள பல்கலைக்கழக நூலகம் பசுமையான கட்டடமாகும். இக்கட்டடம் இயற்கையான வெளிச்சம் வருமாறும் அதன் மூலம் வாசகர்கள் எளிதாக படிக்கவும் வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

11.10 சர்வதேச மற்றும் தேசிய அளவிலான கூட்டங்கள்

சர்வதேச அளவில் நீர்வாழ் உயிரி வளர்ப்பில், தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் தொடர்ந்து அங்கீகரிக்கப்பட்டு வருகிறது. அரசின் உதவியுடன் 'ஆசிய பசிபிக் நீர்வாழ் உயிரி வளர்ப்பு 2019' என்ற சர்வதேச கருத்தரங்கம் மற்றும் வர்த்தக நிகழ்ச்சியானது உலக நீர்வாழ் உயிரி வளர்ப்புச் சங்கம் - ஆசிய பசிபிக் பிரிவுடன் இணைந்து நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கின் கருப்பொருள் 'உடல் நலம், சொத்து மற்றும் மகிழ்ச்சியான வாழ்வில் நீர்வாழ் உயிரின வளர்ப்பு' ஆகும். மீன்வளம், பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் மற்றும் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ஆகியோர் முன்னிலையில், இந்நிகழ்ச்சியை மாண்புமிகு

பல்கலைகழக வேந்தர் அவர்கள் துவக்கிவைத்தார்கள். இந்நிகழ்வில் 70க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து வந்த 3500 பேர் கலந்து கொண்டனர்.

11.11. ஆறாவது பட்டமளிப்பு விழா

தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் ஆறாவது பட்டமளிப்பு விழாவில் 111 நபர்களுக்கு பட்டமளிக்கப்பட்டது. அதில், இளநிலை மீன்வள பட்டதாரிகள் 65 பேருக்கும், இளநிலை மீன்வள பொறியியல் பட்டதாரிகள் 19 பேருக்கும், முதுநிலை மீன்வள அறிவியல் பட்டதாரிகள் 22 பேருக்கும், முனைவர் பட்டம் 5 பேருக்கும் நேரடியாக வழங்கப்பட்டது. இது தவிர, 22 இளநிலை மற்றும் முதுகலை பட்டதாரிகள் சான்றிதழ்கள் தபால் மூலம் பெற்றுக் கொண்டனர்.

11.12. தமிழ்நாடு டாக்டர். ஜெ ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம் மூலம் உருவாக்கப்பட்ட தொழில்நுட்பங்கள்

பல்கலைக்கழகம் மீன்வளம் சார்ந்த பல்வேறு தொழில்நுட்பங்களை தொடர்ந்து உருவாக்கி வருகிறது. இப்பல்கலைக்கழகம் மூலம் உருவாக்கப்பட்ட

கீழ்க்கண்ட முக்கிய தொழில்நுட்பங்கள் மீன்வளம் சார்ந்தோருக்கு வழங்கப்பட்டு வருகிறது:

அ) இந்திய அரசின் நீலப்புரட்சித் திட்டம் மூலம் இப்பல்கலைக்கழகம் தொழில்நுட்பங்களை 8,152 மீன்வளர்ப்போர், மீனவர், விரிவாக்கப் பணியாளர்கள் மற்றும் மீன்வள அலுவலர்களுக்கு வழங்கியுள்ளது

ஆ) மீன்வளர்ப்பு, உயிர் உணவு உற்பத்தி, அலங்கார மீன்வளர்ப்பு, உயிர்க்கூழ்மத்திரள் தொழில்நுட்பம், கூண்டு முறை மீன்வளர்ப்பு, இறால் வளர்ப்பு, நீர்வாழ் உயிரி நலமேலாண்மை, ஆழ்கடல் மீன்பிடிப்பு, படகு பராமரிப்பு மற்றும் மதிப்பூட்டிய மீன் உணவு தயாரிப்புகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது

இ) 50 மீன்வளர்ப்போருக்கு கடலில் கூண்டு முறையில் மீன்வளர்ப்பு செய்திட கடலில் மீன்வளர்ப்பிற்கான கூண்டுகள் வழங்கப்பட்டுள்ளது

ஈ) உயிர்க்கூழ்மத்திரள் தொழில்நுட்பம் மூலம் ‘பயோ இனோ’ என்ற விரைவான உயிர்க்கூழ்மத்திரள்

வளர்ச்சிக்கான ஊக்கி, உணவு மற்றும் ஊட்டச்சத்து ஊக்கியான 'பயோசாக்' மற்றும் உயிர்க்கூழ்மத்திரள் சார்ந்த இறால் உணவு 'நியூட்ரிபிளாக்' உருவாக்கப்பட்டுள்ளது

உ) இந்தியாவிலேயே முதன்முறையாக *டானியோ டாங்கிலா, டகான்சியா பிளமண்டோசா, புன்டியஸ் சோஃபோர்* போன்ற உள்நாட்டு வண்ண மீன் இனங்களின் தூண்டுமுறை இனப்பெருக்கம் மற்றும் பேரளவு குஞ்சுகள் உற்பத்தி தொழிநுட்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளது

ஊ) மீன் செதில் நீக்கும், மீன் முள் நீக்கும், மீன்களைத் துண்டாக்கும், மீன் தலை நீக்கும் இயந்திரங்கள் பல்கலைக்கழக பொறியியல் வல்லுநர்களால் உருவாக்கப்பட்டுள்ளன. உயிர்கூழ்மத்திரள் உற்பத்திக்கான நீர் மறுசுழற்சித் தொட்டி மற்றும் போட்டோ பயோரியாக்டர் உருவாக்கப்பட்டுள்ளன

எ) பார்மலின் மாசுள்ள மீன்களை ஆய்வு செய்து கண்டறிய FQMC என்ற துரித ஒளிரூட்டு ஆய்வுப் பெட்டி உருவாக்கப்பட்டுள்ளது

11.13 நிலையான வளர்ச்சி இலக்குகள்

பல்கலைக்கழகத்தின் இளநிலை, முதுநிலை மற்றும் முனைவர் படிப்பின் கல்வித்தரத்தை உயர்த்த தரமான ஆசிரியர்களை நியமித்தல் மற்றும் தகுந்த முறையில் தேர்வு செய்து மாணவர்களைச் சேர்த்தல்; தேவையான திறன்மிகு பட்டதாரிகள், தொழில்சார் மாணவர்களை உருவாக்கத் தகுந்த திறன் மேம்பாடு, தொழில்காப்பகம் மற்றும் தொழில் துவக்க மையங்களை ஏற்படுத்த கவனம் செலுத்துதல்; ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான கட்டமைப்புகளை மேலும் மேம்படுத்துவதில் பல்கலைக்கழகம் உரிய கவனம் செலுத்தி வருகிறது. இதன் மூலம் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆராய்ச்சி மேற்கொண்டு மீனவர்கள் மற்றும் மீன்வளர்ப்போருக்கான தரமான தொழில்நுட்பங்கள் சென்றடைய உதவுதல்; கடலோர பகுதியில் கூண்டு முறையில் மீன் வளர்ப்பு மற்றும் தூரக்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிப்பதன் மூலம் கடலை முறையாக பயன்படுத்த முயற்சித்தல்; தமிழக மக்களிடம் மீன் உண்ணும் அளவை மேம்படுத்த புதிய தரமான மீன் பொருட்களை பிரபலப்படுத்த முயற்சி மேற்கொள்ளுதல்; நீர் மறுசுழற்சி மீன்வளர்ப்பு மற்றும் ஒருங்கிணைந்த அக்வாபோனிக்ஸ் முறையில் உலகளாவிய கூட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு இதன்மூலம் இந்தியச் சூழலுக்கு உகந்த புதிய தொழில்நுட்பம்

உருவாக்கப்பட்டு, செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மீன்வள அறிவியலைப் பயன்படுத்தி, தமிழகத்தின் உணவு, ஊட்டச்சத்து மற்றும் வாழ்வாதார பெருக்கத்தை தாரக மந்திரமாகக் கொண்டு இப்பல்கலைக்கழகம் செயல்பட்டு வருகின்றது. இப்பல்கலைக்கழகம் தற்போதைய பொருளாதார போட்டி சூழலுக்கேற்ப, பல்கலைக்கழகத்தின் செயல்திறன் வலுவாக்கப்பட்டு வருகிறது. மேலும், தரமான மீன்வளக் கல்வி அனைவருக்கும் கிடைக்க உறுதி செய்துள்ளது. தமிழக அரசு மற்றும் பல்கலைக்கழக குறிக்கோள்களை கருத்தில் கொண்டு மாணவர்களுக்கு தரமான கல்வி அளிக்கவும், ஏழை மற்றும் எளிய மக்களின் வாழ்வாதாரத்தை மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு தொழில்நுட்பம் மூலம் மேம்படுத்தவும் இப்பல்கலைக்கழக பணியாளர்கள் தொடர்ந்து பாடுபட்டு வருகின்றனர். கல்வி மற்றும் பயிற்சிகளின் வாயிலாக மீனவர்களின் தினசரி வருமானம் மற்றும் பொது மக்களுக்கு புரதம் நிறைந்த உணவை வளங்குன்றாமல் முழுமையாக வழங்குவதிலும் இப்பல்கலைகழகம் கவனம் செலுத்தி வருகிறது.

12. 2019-20 ஆம் ஆண்டில் மீன்வளத்துறையின் முக்கிய சாதனைகள்

12.1 மீனவர் நலன்

- தமிழ்நாடு அரசின் இடைவிடாத முயற்சி மற்றும் உறுதியான நடவடிக்கைகளின் பயனாக 2019-20 ஆம் ஆண்டில் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த 215 மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டு, தமிழ்நாட்டிற்கு அழைத்து வரப்பட்டனர். மேலும், மீட்கும் நிலையில் இருந்த 36 மீன்பிடிப் படகுகள் மீட்டு வரப்பட்டன.

- 13 கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த மீனவக் குடும்பங்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களின் கீழ் மொத்தம் ரூ.296.85 கோடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

- மீனவர் நலத்திட்டங்களில் மின்னாளுமையினை செயல்படுத்தி, வெளிப்படைத் தன்மையினை உறுதி செய்திட பல்வேறு நலத்திட்டங்களில் பயனாளிகளை பொதுச்சேவை மையத்தின் இணையதள வசதியின்

வாயிலாக சேர்ப்பதற்கான திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

- 2019-20ஆம் ஆண்டில் கடலில் மீன் பிடிக்கையில் காணாமல் போன 23 மீனவர்களின் குடும்பங்களுக்கு தின உதவித் தொகையாக ரூ.11.10 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- பாக் வளைகுடாப் பகுதியிலுள்ள இழுவலைப் படகுகளை ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கு மாற்றும் திட்டத்தின் கீழ் ரூ.1,600 கோடி மதிப்பீட்டில், 2000 ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் கட்டப்படவுள்ளது. இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 22 ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் கட்டப்பட்டு, மீன்பிடித் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.
- ஆழ்கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள 80 குழுக்களைச் சேர்ந்த மீன்பிடிப் படகுகளுக்கு மொத்தம் 160 செயற்கைகோள் தொலைபேசிகள், 200 நேவிக் மற்றும் 40 நேவ்டெக்ஸ் தொலைத் தொடர்புச் சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவை தவிர, ஆழ்கடல் மீன்பிடிப்பினை மாவட்டம் மற்றும்

மாநில அளவில் கண்காணித்திட 21 செயற்கைக்கோள் தொலைபேசிகள் வழங்கப்பட்டுள்ளது.

- கடலில் மீன்பிடிப்பின்போது மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு கம்பியில்லா தொலைத்தொடர்பு வசதி வழங்கும் திட்டத்தின் மூலம் 5 வாட் VHF கருவிகள் 15,004 எண்ணம் இயந்திரம் பொருத்தப்பட்ட பாரம்பரிய மீன்பிடி படகுகளுக்கு இலவசமாகவும், 25 வாட் VHF கருவிகள் 2535 எண்ணம் மீன்பிடி விசைப்படகுகளுக்கு 75 விழுக்காடு மானியத்திலும், ஆக மொத்தம் 17,539 VHF கருவிகள் வழங்கப்பட்டுள்ளது.

- தமிழ்நாட்டில் சென்னை, கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த 507 மீன்பிடி விசைப்படகுகளில், படகுகளின் இயக்கத்தினை கண்காணித்திடவும், ஆழ்கடலில் 200 கடல் மைல்கள் தொலைவு வரை ஆபத்து நேரத்தில் உதவி செய்திடவும், செயற்கைக்கோள் அடிப்படையிலான ’டிரான்ஸ்பாண்டர்கள்’

பொருத்தப்பட்டுள்ளன. அனைத்து மீன்பிடி விசைப்படகுகளின் விவரத்தினை டிரான்ஸ்பாண்டர்கள் விவரம் உள்ளடக்கிய "தூண்டில்" கைபேசி செயலியில் பதிவிடும் திட்டத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து, 12 ஆம் வகுப்பு தேர்ச்சிபெற்ற மீனவ இளைஞர்களுக்கு, மாற்று வாழ்வாதாரம் மற்றும் வேலை வாய்ப்பு பெற்றிடும் பொருட்டு, இந்திய கப்பற்படை மற்றும் இந்திய கடலோர காவற்படையில் வேலை வாய்ப்பு பெறுவதற்கான சிறப்புப் பயிற்சிகள் வழங்குவதற்கு அரசு ரூ.1.04 கோடிக்கு நிதி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. சென்னை, கடலூர், இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மண்டலத்தைச் சேர்ந்த 145 மீனவ இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

- 2019-20 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தால் ரூ.592.98 கோடி வரவு செலவினம் மேற்கொள்ளப்பட்டு, ரூ.13 கோடியினை இலாபமாக

ஈட்டியுள்ளது. 2020-21ல் ரூ.14 கோடி இலாபம் ஈட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

- 2019-20 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வளக் கூட்டுறவு இணையத்தால் ரூ.182.63 கோடி வரவு செலவினம் மேற்கொள்ளப்பட்டு, ரூ.2.30 கோடியினை இலாபமாக ஈட்டப்பட்டுள்ளது.

- தமிழக அரசு, இந்திய வர்த்தக சபை மற்றும் மத்திய உப்பு மற்றும் கடல் வேதியியல் பொருட்கள் ஆராய்ச்சி நிலையம் ஆகியவை இணைந்து மூன்றாவது இந்திய சர்வதேச அளவிலான கடற்பாசி கருத்தரங்கு சென்னையில் ஜனவரி 2020 திங்களில் 30 மற்றும் 31இல் நடத்தியது. இந்த கருத்தரங்கனாது கடற்பாசி மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களை நம் மாநிலத்தில் விரிவடையச் செய்யும் நோக்கத்துடன் நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் கடற்பாசி வளர்ப்பினை மேம்படுத்தும் நோக்கத்துடன் 8 தனியார் நிறுவனங்களுடன் ரூ.57.70 கோடி மதிப்பிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

12.2 உட்கட்டமைப்பு வசதிகள்

- சென்னை மாவட்டம் இராயபுரத்தில் மீன்பிடித் துறைமுகத்தில் படகு அணையும் தளம் அமைக்கும் பணி ரூ.5 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- கன்னியாகுமரி மாவட்டம் குறும்பனையில் மீன் இறங்கு தளம் அமைக்கும் பணி ரூ.11 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- கன்னியாகுமரி மாவட்டம் பள்ளம்துறையில் மீன் இறங்கு தளம் அமைக்கும் பணி ரூ.4 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- நாகப்பட்டினம் மாவட்டம் சின்னாங்குடியில் மீன் இறங்கு தளம் ரூ.5.50 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.
- காஞ்சிபுரம் மாவட்டம் சூலேரிகாட்டுக்குப்பத்தில் மீன் இறங்குதள மேம்பாட்டுப் பணிகள் ரூ.4.95 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- திருவள்ளூர் மாவட்டம் பெரியமாங்கோட்டில் மீன் இறங்கு தள கட்டுமானப் பணிகள் ரூ.4.38 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- நாகப்பட்டினம் மாவட்டம் பூம்புகாரில் மீன்பிடித் துறைமுகம் ரூ.178 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.
- கன்னியாகுமரி மாவட்டம் பொழிக்கரையில் மீன் இறங்கு தளம் ரூ.4 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.
- கன்னியாகுமரி மாவட்டம் கேசவன்புத்தன்துறையில் மீன் இறங்கு தளம் ரூ.4 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

13. பருவநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும் மீன்வளம்

உலகவெப்பமயமாதலின் காரணமாக மீன்வளம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. பருவநிலை மாற்றமானது, மீன்களின் உடற்கூறியல், நடத்தை, பரவல் மற்றும் இடம்பெயர்தல், இனப்பெருக்கத் தன்மை, இறப்பு மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரம் ஆகியவற்றின் மூலம் மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பில் நேரிடையாக பாதிப்பை உண்டாக்குகிறது.

மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பில் தாக்குப் பிடிக்கும் திறனை வலுப்படுத்துவதிலும்,

தகவமைப்பை மேம்படுத்துவதிலும் அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மீன்வளத்தினை பெருக்குவதற்கு அண்மைக்கடல் பகுதியில் செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்தல் மற்றும் வணிக முக்கியத்துவம் வாய்ந்த மீன் இனங்களை வளர்த்து கடலில் இருப்பு செய்தல் போன்றவை செயல்முறையில் உள்ளது. கடலோர மாவட்டங்களில், கடலரிப்பிலிருந்து கடற்கரையினைப் பாதுகாத்திட கற்சுவர் மற்றும் ஆர்எம்எஸ் சுவர்களும், மீன்பிடி கலன்களை பாதுகாப்பான முறையில் நிறுத்துவதற்கு மீன்பிடித்துறைமுகங்களும் கட்டப்பட்டு வருகின்றன. பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதிகளும் பின்பற்றப்படுகிறது. மீன்வள உற்பத்திக் குறைவினை ஈடுசெய்திட, நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட மற்றும் விரைவாக வளரக்கூடிய மீன் இனங்களை வளர்க்க, மீன்வளர்போர் ஊக்குவிக்கப்படுகிறார்கள். மாநிலம் முழுவதும், பருவநிலை மாற்றத்தின் பாதிப்பு குறித்து பொதுமக்களிடம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

14. இலக்கினை அடைவதற்கான வழிமுறைகள்

இந்திய பொருளாதாரத்தில் எதிர்காலத்தில் மீன்வளப்பிரிவானது நாட்டின் வளர்ச்சிக்கான முக்கிய ஆதாரமாக விளங்கும். தேசிய கடல்வளக் கொள்கை, தேசிய உள்நாட்டு மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்புக் கொள்கை மற்றும் தேசிய கடல்வாழ் உயிரின வளர்ப்புக் கொள்கை போன்ற பல்வேறு புதிய கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் மீன்வளம் தேசிய அளவில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. தமிழகம் இந்த கொள்கைகளை செயல்படுத்தி மீன்வளங்களைப் பாதுகாத்திடவும், நிலைத்த தன்மையுடன் பயன்படுத்திடவும் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

தமிழக அரசு தொலைநோக்குப் பார்வையுடன், புதிதாக தொடங்கப்பட்டுள்ள இந்திய அரசு மீன்வள அமைச்சகத்துடன் ஒருங்கிணைந்து, மீன்வளத்தில் நிலைத்த வளர்ச்சி ஏற்படுத்திட, சீரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. 2022-23ஆம் ஆண்டில் மீன்உற்பத்தியை 200 இலட்சம் டன்களாக உயர்த்திடவும், 2024-25 ல் மீன்பொருள் ஏற்றுமதியை ஒரு இலட்சம்

கோடியாக உயர்த்திடவும், இந்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. அவ்வாறே, தமிழகம் தற்போதுள்ள மீன்உற்பத்தியை 6.88 இலட்சம் டன்களில் இருந்து 10 இலட்சம் டன்களாக உயர்த்திடவும், அதன் மூலம் தற்போதுள்ள ஏற்றுமதி அடுத்த 5 ஆண்டுகளில் 1.28 இலட்சம் டன்கள் என்ற அளவிலிருந்து இரண்டு மடங்காக 2.50 இலட்சம் மெட்ரிக் டன்கள் என்ற அளவில் உயர்த்திட இலக்கு நிர்ணயம் செய்து செயல்பட்டு வருகிறது.

நிலைத்த மீன்வள மேலாண்மையை உள்நாடு மற்றும் கடல் மீன்வளர்ப்பிரிவில் அறிமுகப்படுத்திய வெகு சில மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்றாகும். வணிக முக்கியத்துவம் வாய்ந்த, விலை உயர்ந்த மீன்களைப் பிடிப்பதற்காக அறிமுகம் செய்யப்பட்ட ஆழ்கடல் மீன்பிடி படகுகள் மீனவர்களின் வருவாயை அதிகரித்திட உதவும் மாற்று மீன்பிடி முறையாக விளங்குகிறது.

உணவு மற்றும் வேளாண்மை அமைப்பினால் கொண்டுவரப்பட்ட பொறுப்பார்ந்த மீன்வளர்த்திற்கான நன்னடத்தை விதிகளின் படி, தமிழகம் தமிழ்நாடு கடல்

மீன்வள ஒழுங்குமுறை சட்டத்தினை (1983) பல புதிய பிரிவுகள் மற்றும் ஒழுங்கு முறைகளுடன் திருத்தியமைத்துள்ளது. இத்துறையில் ஏற்படுத்தப் பட்டுள்ள சட்ட அமலாக்கப் பிரிவு, மீன்பிடி ஒழுங்குமுறை சட்டத்தினை செயல்படுத்துவதிலும், தமிழகத்தின் கடல் மீன்வள ஆதாரங்களை பாதுகாப்பதிலும் உதவி புரியும். வேகமாக வளரக்கூடிய மரபணு மேம்படுத்தப்பட்ட திலேப்பியா வகை மீன்குஞ்சுகள் தமிழகத்தில் வெற்றிகரமாக உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. குறுகிய கால நீர்நிலைகள் மற்றும் நீர் பற்றாகுறை கொண்ட இடங்களில் விவசாயிகள் இத்திலேப்பியா இன மீன்களை வளர்த்து பயனடைந்து வருகின்றனர். கடல் கூண்டுகளில் மீன்குஞ்சு வளர்த்தல், நீர்த்தேக்கங்களில் கூண்டுகளில் மீன்வளர்த்தல் போன்ற நிலம் தேவைப்படாத மீன் வளர்ப்பு முறைகள் குறைவான இடத்தில் அதிக மீன் உற்பத்திக்கு வழி வகுத்துள்ளன. நீர் மறுசுழற்சி முறை நீர்வாழ் உயிரின வளர்ப்பு, ஒருங்கிணைந்த மீன்வளர்ப்பு, கடல் கூண்டுகளில் மீன்வளர்ப்பு மற்றும் தூரக் கடலில் கடற்வாழ் உயிரின வளர்ப்பு போன்றவையும்

தமிழகத்தால் செயல்படுத்தப்படும் நவீன தொழில் நுட்பங்களாகும்.

கடற்வாழ் உயிரின வளர்ப்பு உலகளவில் பிரபலமடைந்து வருகிறது. இதன் பலன்களைக் கருதி அரசு கடற்பாசி வளர்ப்பு, ஒருங்கிணைந்த கடல் வாழ் உயிரின வளர்ப்பு, கூண்டுகளில் மீன்வளர்ப்பு போன்றவற்றை பெரிய அளவில் ஊக்குவிக்கிறது. இந்த மீன்வளர்ப்பு முறைகள் இயற்கை வளங்களை காப்பதுடன், கடலோர மீனவர்களுக்கு சிறந்த மாற்று வாழ்வாதாரமாக விளங்குகிறது.

புதிய முயற்சிகளை செயல்படுத்துவதில் அரசு முனைப்புடன் செயல்படுகிறது. ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஏற்படுத்துதல், மீன்உற்பத்தியை அதிகரித்தல், மீன்பதப்படுத்துதல் மூலம் மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல், நீர்வாழ் உயிரின வளர்ப்பு முறைகளில் புதிய தொழில்நுட்ப வாய்ப்புகளை உருவாக்குதல் மூலம் ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடலோர மற்றும் கிராமப்புற இளைஞர்களை ஈடுபடுத்தி வேலைவாய்ப்பை உருவாக்கிட நீலப்புரட்சிக்கு வித்திடும்

கடல் நண்பர்கள் மற்றும் மீன் வளர்ப்போர் நிறுவனம் போன்றவற்றின் மூலம் மீன்வள மேம்பாடு என்ற கொள்கை, எதிர்வரும் ஆண்டுகளில் முக்கியத்துவம் பெற உள்ளது.

தமிழகம் சிறந்த உள்நாட்டு மீன்வளர்ப்பு முறைகள், கடலில் தொலைத் தொடர்பு சாதனங்களை பயன்படுத்துதல், கடலில் தொலைத் தொடர்பு திறன், பேரிடர் காலங்களில் பாதுகாப்பு உபகரணங்களை பயன்படுத்துவதில் மீனவர்களுக்கு பயிற்சி மற்றும் கடலில் உள்ள மீனவர்களின் பாதுகாப்பினை உறுதி செய்திட நவீன கட்டுப்பாட்டு அறைகள் நிறுவுதல் ஆகிய திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

எதிர்கால உணவு ஆதாரம் முழுமையாக கடல்களை சார்ந்தே அமைவதுடன், தமிழகத்தின் வளர்ச்சியில் நீலப் பொருளாதாரம் முக்கிய பங்காற்றும். வேளாண்மையுடன் நெருங்கிய தொடர்புடைய மீன்பிடிப்பும், மீனவ சமுதாயமும் தமிழகத்தின் வளர்ச்சிக்கு முக்கிய பங்கு வகிக்கும். நாம் அருந்தும் ஒவ்வொரு துளி நீரும், ஒவ்வொரு சுவாசமும் நாம் கடலுடன் இணைந்திருப்பதை உணர்த்தும். மீன்கள் முக்கியத்துவம் பெற்று தமிழகத்தின் வளர்ச்சிக்கு மீன்வளப்பிரிவு உறுதுணையாற்ற உள்ளது.

15. 2020-21 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு

2020-21 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் ரூ.1,229.85 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ.558.14 கோடி வருவாய் செலவினமாகவும், ரூ.671.70 கோடி மூலதன செலவினமாகவும் இருக்கும்.

கடந்த 10 ஆண்டுகளில் மீன்வளர்ப்பிற்கான நிதி ஒதுக்கீடு கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் மீன்வளத்துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட விவரம் பின்வருமாறு:

அட்டவணை:11

(ரூ. கோடியில்)

ஆண்டு	திட்ட ஒதுக்கீடு	திட்டமில்லா ஒதுக்கீடு	மொத்த நிதி ஒதுக்கீடு
2010-2011	163.06	30.27	193.33
2011-2012	339.28	60.40	399.68
2012-2013	379.18	38.04	417.22
2013-2014	425.70	41.74	467.44
2014-2015	464.68	47.16	511.84

2015-2016	677.17	51.51	728.68
2016-2017	678.72	65.07	743.79
2017-2018	706.52	61.80	768.32
2018-2019	946.65	69.88	1016.53
2019-2020	867.79	60.06	927.85
2020-2021	1145.98	83.80	1229.84

16. நிறைவுரை

தமிழ்நாடு மீனவர்களின் பாதுகாப்பினையும், சமூகப் பாதுகாப்பினையும் உறுதி செய்திடும் பொருட்டு, பல்வேறு தேவை அடிப்படையிலான மீனவர் நலம் மற்றும் வளர்ச்சித் திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை நிலைநாட்டிடவும் அரசு உயர் முக்கியத்துவம் அளித்து வருகிறது. மின்னணு சேவை அறிமுகப்படுத்தியதன் மூலம் மீனவர்கள் அரசின் நலத்திட்ட உதவிகளை வெளிப்படைத் தன்மையுடன் எளிதாகப் பெற இயலுகிறது.

தமிழ்நாட்டில் மீன்வளப் பிரிவானது, நவீன தொழில் நுட்பம் மற்றும் சிறந்த மேலாண்மை முறைகளை அறிமுகம் செய்ததன் மூலம் பாரம்பரிய மீன்பிடித் தொழில் தற்போது நவீன தொழில்நுட்பங்கள் கொண்ட மீன்பிடித் தொழிலாக மாற்றமடைந்துள்ளது. மீன்வளர்ப்பினை வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்புடன் ஒருங்கிணைத்தல், கடற்பாசி வளர்ப்பு, கடலில் கூண்டுகள் மூலம் மீன்வளர்த்தல், சிப்பி வளர்த்தல் மற்றும் நன்னீர் மீன்வளர்ப்பு போன்றவற்றின் மூலம் கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்திடவும், மீன்வளக் கட்டமைப்பினை வலுப்படுத்திடவும் அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியினை அடைந்திட ஏதுவாக, மீன்வளம் மற்றும் அதன் தொடர்பான துறையில் ஒட்டுமொத்த மேம்பாட்டினை அடைவதையும், மீனவர்களின் வருமானத்தை அதிகரிப்பதையும் நோக்கமாகக் கொண்டு அரசு பல்வேறு மாற்று வாழ்வாதாரத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

கடலில் மீன்பிடிப்பதை ஒழுங்குபடுத்தும் சட்டத்தை திறம்பட செயலாக்குதல், கூட்டு மேலாண்மை முயற்சிகள், மீன்பிடி உட்கட்டமைப்புகளை உலகத்தரத்திற்கு மேம்படுத்துதல், அண்மைக்கடல் பகுதியில் செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்தல் மற்றும் மீன்குஞ்சுகளை வளர்த்து கடலில் இருப்பு செய்தல் போன்ற மீன்வளத்தை அதிகரிக்கும் திட்டங்கள் போன்றவற்றின் மூலம், மதிப்புமிக்க மீன்வளத்தை பாதுகாத்திடவும், மீன்வகைகளை சட்டபூர்வ நிலைத்த முறையான வழியில் பயன்படுத்திடவும் அரசு உறுதி பூண்டுள்ளது.

ஆழ்கடல் மீன்பிடிப்பு, உட்கட்டமைப்புகளை உலகத்தரத்திற்கு மேம்படுத்துதல், நவீன தொலைத்தொடர்பு வசதிகள், அறுவடைக்கு பின் தேவைப்படும் பதப்படுத்தும் வசதிகள், சுற்றுச்சூழலுக்குகந்த மீன்பிடிப்பு மற்றும் இறால்வகை, வண்ண மீன் போன்ற நீர்வாழ் உயிரின வளர்ப்பு, கடல்சார் சுற்றுலா போன்றவைகளில் அரசின் இடைவிடா முயற்சியின் காரணமாக தமிழ்நாட்டின் மீன்வளப் பிரிவானது தேசிய மற்றும் சர்வதேச அளவில் பெரும் கவனத்தைப் பெற்றுள்ளது. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்குச் சிந்தனையின்படி

வழிநடக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, வரும் ஆண்டுகளிலும் மீன்வளப்பிரிவில் அனைத்து மேம்பாடுகளையும் அடைந்திட அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

D. ஜெயக்குமார்
மீன்வளம், பணியாளர் (ம)
நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர்